மார்ச் 15 - 21, 2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# கிழக்கு முறுகல் நிலையும் உஷாரடையும் படையினரும்





## சமரச முயற்சியில் ஆயர்பணி

## அம்பலமான அரச ஊடகங்களின் பொய்ப்பிரசாரம்

# பல்கலைக்கழக மாணவர் பிரவேசத்துடன் களைகட்டும் யாழ்ப்பாண தேர்தல் களம்

யாழ். தேர்தல் களம் களைகட்டிவிட்டது. வீதிகள், சந்திகள், கோயில்கள், பொது இடங்கள் எங்குமே மக்களின் உரையாடல்களின் கருப்பொருள் தேர்தல் தான். எங்கும் அதே பேச்சு.

யாழ். தேர்தல் களத்தில் குதித்திருக்கின்ற பிரதான அணிகள் தமது பிரசாரப் பணிகளை முடுக்கி விட்டிருக்கின்றன.

## வீடு வீடாகச் சென்று பிரசாரம்

தமிழ்க்கூட்டமைப்பே இப்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் முன்னணியில் இருக்கின்றது. தொகுதி ரீதியாக கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரசார மேடையிலும் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது. கூடவே விடுதலைப்புலிகளின் அரசியல் துறையின் பிரமுகர்களும் இந்தக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்கின்றார்கள். கூட்டங்களில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்க்கூட்டமைப்பின் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆதரவாளர்களுடன் வீடு வீடாகச் சென்றும் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் தொகுதி ரீதியான முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டமைப்பினர் இம் முறை தமது பிரசார நடிவடிக்கைகளை ஒழுங்கமைத்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

அந்த வகையில் தீவுப் பகுதியை நோக்கி அவர்கள்தமது கவனத்தை பெருமளவில் திருப்பியிருப்பதை அவதானிக்க முடிகிறது. தீவுப்பகுதியில் தான் கடந்த தேர்தலில் ஈ.பி.டி.பியினருக்கு அதிகளவான வாக்குகள் கிடைத்திருந்தன.

தீவகத்தில் ஈ.பி.டி.பி பெற்ற அந்த வாக்குகளில் பெருமளவானவை கள்ள வாக்குகள் என்ற குற்றச்சாட்டு பின்னர் தமிழ்க்கூட்டமைப்பினாலும், ஏனைய கட்சிகளினாலும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எது எப்படியோ இம்முறை தீவுப் பகுதி வாக்குகளை முற்று முழுதாகக் கைப்பற்றி விடுவதில் தமிழ்க் கூட்டமைப்பு உறுதியாக இருக்கிறது. அதற்கமையவே தீவுப் பகுதி எங்கும் கூட்டமைப்பின் பிரசாரம் உச்ச அளவில் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க யாழ். தேர்தலில் மற்றைய முக்கிய அணிகளான ஈ.பி.டி.பி மற்றும் ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழு என்பனவும் பிரசார பணிகளைத் தொடங்கிவிட்டன. ஆனால் மேடைப்பிரசாரநடவடிக்கைகளில் அந்த அணிகள் இதுவரை இறங்கியதாகத் தெரியவில்லை. துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள், ஒலி பெருக்கி வாகனங்கள் போன்ற வழிகள் மூலம் அந்தக்கட்சிகளின் பிரசாரம் தீவிரமடைந்திருக்கிறது.

## சுவரொட்டி ஒட்டியோர் கைது

இம்முறை அரசியல் கட்சிகளோ, சுயேச்சைக் குழுக்களோ தமது அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என்று தேர்தல் ஆணையாளர் பணித்திருக்கின்றார். அதற்கமைய பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவோரை கண்காணிப்பதில் பொலீஸார் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றனர்.

ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவாக பிரசார சுவரொட்டிகளை இரவு வேளையில் யாழ். நகர்ப் பகுதியில் ஒட்டிக்கொண்டிருந்த 7 பேர் சமீபத்தில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.


மாவை
டக்ளஸ்
சங்கரி

விசாரணையின் பின்னர் அவர்கள் 7பேரும் மறு நாள் காலையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு எதிராக தேர்தல் சட்டமீறல் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக பொலீஸார் கூறியுள்ளனர்.

தேர்தல் கால கடமைகள் தொடர்பாக பொலீஸ் தலைமையகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைவாகவே தாங்கள் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டுபவர்களைக் கைது செய்யத் தொடங்கியிருப்பதாகவும் யாழ்.பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




நகரில் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டுவோரைத் தேடி இரவு பகலாக விசேட பொலீஸ் அணி ஒன்று சிவில் உடையில் உலா வரத் தொடங்கியிருக்கிறது. இருப்பினும் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு சில கட்சியின் ஆதரவாளர்கள் தமது கைவரிசையை காட்டிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

நள்ளிரவு வேளையில் நகர்ப் பகுதியில் 'நைஸாக' சுவரொட்டிகள் ஒட்டப்படுவதும், காலையில் அவற்றுக்கு மேல் பொலீஸார் 'ஓயில்' ஊற்றி அழித்துவிடுவதும் வேடிக்கைக்குரிய நிகழ்வுகளாக நடந்து கொண்டிருக்கின்றன.

## சுறுசுறுப்படையும் ஸ்ரீதர் தியேட்டர்

ஈ.பி.டி.பியினரும் குடாநாட்டில் தமது பிரசாரங்களை முழு வீச்சுடன் தொடங்கி விட்டனர். அக்கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தமது கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நேரடியாக நெறிப்படுத்தவென யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

யாழ். ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள அவர்களது அலுவலகம் இப்போது சற்று சுறுசுறுப்படைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அப்பகுதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஈ.பி.டி.பியின் துண்டுப்பிரசுரங்கள்ஒட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீதர் தியேட்டரில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதனை விட ஈ.பி.டி.பியினர் பெருமளவு அதிரடிப்படையினர் மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் யாழ்.நகரில் ஒலிபெருக்கி வாகனங்களில் பிரசாரம் செய்வதையும் காண முடிகிறது. அக் கட்சியின் முக்கியஸ்தர்களான வி.ஜே.குகேந்திரன் (ஜெகன்) மணி பல்லவராஜன் (நிஷாந்தன்)போன்றோர் ஒலிபெருக்கி வாகனங்களில் அமர்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஆனாலும் அவர்களது வாகனங்களுக்கான இராணுவப்பாதுகாப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகளால் பெரும் அச்சுறுத்தல் இருப்பதாக காட்டிக்கொள்வதற்கு ஈ.பி.டி.பினர் கையாளும் உத்தியாக இந்த மிதமிஞ்சிய இராணுவப் பாதுகாப்பு அமைந்திருக்கலாம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

வழக்கம் போல இம் முறையும் அவர்களது துண்டுப் பிரசுரங்களிலும், அறிவித்தல்களிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான விமர்சனங்களும், வசைபாடல்களுமே முதன்மை பெற்றிருக்கின்றன.

1994ஆம் ஆண்டுத் தேர்தலில் தனிக்கட்சியாக நின்று 9ஆசனங்களையும் ஈ.பி.டி.பியே பெற்றுக்கொண்டது. அப்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த தீவுப்பகுதியில் மட்டுமே வாக்களிப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. பின்னர் 99ஆம் ஆண்டுத் தேர்தலில் 4 ஆசனங்களை மட்டுமே அந்தக்கட்சி பெற்றிருந்தது. 2001ஆம் ஆண்டுத்தேர்தலில் அந்த எண்ணிக்கை 2ஆகக் குறைவடைந்தது.

இம் முறை தேர்தலில் ஒரு ஆசனத்தை யாவது தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறது ஈ.பி.டி.பி. ஆனால் அதையும் பார்த்துவிடலாம் என்று சவால் விட்டிருக்கிறது தமிழ்க்கூட்டமைப்பு. யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பிக்கு ஒரு ஆசனம் கூட இம் முறை கிடைக்காது என்று தமது பிரசார மேடைகளில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள்அடித்துக்கூறி வருகிறார்கள்.

## பல்கலைக்கழக மாணவர் அணி களத்தில்

தமிழ்க்கூட்டமைப்புக்கு ஆதரவான பிரசார நடவடிக்கைகளில் மற்றொரு பலமான அணி, இந்த வாரம் முதல் களத்தில் குதிக்கவிருக்கிறது பல்கலைக்கழக மாணவர் அணி தான் அது.

கடந்த தேர்தலில் ஈ.பி.டி.பியினரின் ஆசனங்கள் நான்கிலிருந்து இரண்டாக வீழ்ச்சி அடைவதற்கும், தமிழ்க்கூட்டமைப்பு ஓரளவுக்கு நிலை பெற்று நிற்பதற்கும், ஏன் ஐ.தே.கட்சி வேட்பாளரான தி.மகேஸ்வரனின் வெற்றிக்கும் கூட அடித்தளமிட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தான் என்று கூறலாம்.

அப்போது கூட்டமைப்பையோ மகேஸ்வரனையோ வெற்றிபெறச்செய்ய வேண்டும் என்பதை விட ஈ.பி.டி.பியைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே பல்கலைக்கழக மாணவர்களின் பிரசார நோக்காகஇருந்தது. அதில் அவர்களுக்கு குறிப்பிடத்தக்க வெற்றியும் கிடைத்திருந்தது.

ஆனால் இம்முறை மாணவர்கள் கடந்த தேர்தலை விடவும் தீவிரமாக, முழு வீச்சுடன் தமது பிரசாரத்தை கூட்டமைப்புக்கு ஆதரவாக முன்னெடுப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான சர்வதேச மாணவர் பேரவையின் முன்னாள் தலைவர் கஜேந்திரன் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கை பெற்றவர். முன்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் இவர் இருந்தவர்.

எனவே கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனத்துக்காக மட்டுமன்றி கஜேந்திரனின் தனிப்பட்ட செல்வாக்குக்காகவும் பல்கலைக்கழக மாணவர்கள் இம் முறை தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

- யாழ்ப்பாணி -

# வாசகர் இதயம் பேசுகிறது

*யமுனா — கொக்குவில்.*

அன்புள்ள சுடர் ஒளியே!

உனது நீண்ட நாள் வாசகி நான். உனது அரசியல் அம்பலம், கவிதைப்புனல் பிரமாதம். உனது பணி தொடர வாழ்த்துகிறேன்.




*உதயா— பண்ணாகம்.*

அனைவரது ஆக்கங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் உன் மகிமையே மகிமை. உனது பல்லாயிரம் நேயர்களில் நானும் ஒருத்தி. நீ மேலும் வளர வாழ்த்துகிறேன்.

*விஜயா— கொழும்பு.*

ஒளியே உனது ஆக்கங்கள் அனைத்துமே அற்புதம். அவற்றிலும் பித்தன் பதில், கவிதைப்புனல், பெண் என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

*எம். நிலா — கல்வயல்*

வாரந்தோறும் நீ தாங்கிவரும் அம்சங்கள் அத்தனையும் அருமையிலும் அருமை. நீ வாராந்தம் தரும் வித்தியாசமான அம்சங்கள் அனைத்தும் எம்மை வியக்க வைக்கின்றன. குறிப்பாக பித்தன்பதில், கவிதைப்புனல், அரசியல் அம்பலம் அத்தனையும் என்னை மிகவும் கவர்ந்தவை. உனக்கு எனது வாழ்த்துக்கள்.

*மதன் — திருமலை*

அன்பான சுடர் ஒளியே! உனக்கு எனது மனம் மகிழ்ந்த முதற்கண் வணக்கம்.

நீ வெளியிடும் ஆக்கங்கள் அனைத்தும் அருமை, அதிலும் நீ அள்ளி வழங்கும், கவிதைப் புனல், பித்தன் பதில்கள், சிறுகதைகள், இணையத்தலத்தில் இருந்து அனைத்தும் அருமையிலும் அருமை. எனவே உனது பணி என்றென்றும் ஓங்கி வளர வன்னி மக்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

*பே.ஜஸ்ரின் ஜெயசீலன் — உருத்திரபுரம்.*

சுடர் ஒளிக்கு எனது முதற்கண் நன்றி!

என் ஆருயிர் ஒளியே, உன் உள்ளடக்கங்களை உற்று நோக்குகையில் எம் மனதில் உள்ள துன்பங்களை மறந்து நீ தரும் தேனமுதத்தால் வாழ்வில் இன்பங்களை அறிகின்றேன். வாழ்க சுடர் ஒளி. வளர்க சுடர் ஒளி.

*பொ.விஜிந்தன் — யாழ்ப்பாணம்*

அன்பின் சுடர் ஒளிக்கு!

உன் அன்புவாசகன் எழுதும் மடல்.

உமது படைப்புக்கள் யாவும் தரம் மிக்கவை. அரசியல் கட்டுரை ஒன்றில் நீ குறிப்பிட்டது போல்பேச்சுவார்த்தை நிலைக்கவில்லை. உனது கருத்துக்கு நன்றி.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# அதிகரிக்கும் தேர்தல் வன்முறைகள் மக்களின் வாக்குகளைச் சூறையாடுமா?

எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பதின் மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை நாட்டின் பல பாகங்களிலும் 500 க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. தேர்தலுக்கான நாள் நெருங்கி வருகையில் வன்முறைகளும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

இதனால் நீதி, நியாயமான தேர்தல் ஒன்று நடைபெறுமா என்ற அச்சம் புத்திஜீவிகள் மத்தியில் எழுந்திருக்கிறது. தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் தமது கொள்கை, கோட்பாடுகள், கருத்துகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றி எல்லாம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கும், வாக்குக் கேட்பதற்கும் ஜனநாயக நாட்டில் பூரண சுதந்திரம் இருக்கிறது.

எனினும் வன்முறைகள் அவற்றுக்குக் குறுக்கே நிற்கின்றன. இத்தனைக்கும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களில் மிலேச்சத்தனமாக ஈடுபடுவோர் வேறு எவரும் அல்லர். அவர்கள் வேட்பாளர்களினதும், கட்சிகளினதும் கூலிப்படைகளே.

வேட்பாளர் ஒருவர் பணபலம் அல்லது அரசியல் அதிகாரம் மிக்கவராக இருந்தால், வன்முறைகள் ஊடாக அவரது கைமேலோங்கி நிற்கிறது. சில வேட்பாளர்கள் தமது தேர்தல் வெற்றியின் மூலதனமாக வன்முறைகளையே நம்பியிருக்கின்றனர். அதற்காக குண்டர் படைகளை விலைபேசி கூலிக்கு அமர்த்தியிருக்கின்றனர்.

இதனால் மக்கள் உண்மையான கருத்துக்களை அறிந்து கொள்வதில் தூர விலக்கப்படுவதோடு, சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையையும் இழந்து விடுகின்றனர். இவ்வாறான துரதிஷ்ட சம்பவங்களால் தகுதி – ஆற்றல் – அனுபவம் – ஆளுமைமிக்க கனவான்கள் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை இழந்த சரித்திரங்கள் நிறைய இருக்கின்றன.

## இருவர் படுகொலை

இம்முறை நாட்டில் இடம்பெற்று வருகின்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் கிழக்கு மாகாணம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. முதலாவது தேர்தல் படுகொலை மட்டக்களப்பிலேயே நிகழ்ந்திருக்கிறது. ஐ.தே.க.வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம் பிள்ளை என்பவர் மார்ச் முதலாம் திகதி இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதேபோன்று ஈ.பி.டி.பி. உறுப்பினரான பொன்னையா யோகேந்திரன் மார்ச் இரண்டாம் திகதி வாழைச்சேனையில் சுட்டக் கொலை செய்யப்பட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான இந்த இருவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளே படுகொலை செய்திருக்கின்றனர் என அமெரிக்கா உட்பட பல்வேறு தரப்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், புலிகள் அக்குற்றச்சாட்டை முற்றாக மறுத்திருக்கின்றனர். புலிகளின் தலையில் பழியைப் போடுவதற்காக வேறு சக்திகள் இந்த படுகொலைகளைப் புரிந்திருக்கும என்ற சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

எவ்வாறாயினும் சக வேட்பாளர் ஒருவரின் உயிர் பலியெடுக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர்கள் சிலர் தேர்தலில் இருந்து ஒதுங்கி விட்டனர். தேர்தல் ஆணையாளருக்கு அவர்கள் தமது நிலைப்பாடு தொடர்பாக கடிதங்களை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

மார்ச் 4 ஆம் திகதி கல்முனை நகரில் தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மீது கிரனைட் வீசப்பட்டதில் ஐவர் காயமடைந்தனர். தமிழர் தேர்தல் களத்தில் இவ்வாறு இன்னும் சில வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

## முஸ்லிம் பகுதிகளில் வன்முறை யுக்தி

ஆனால், கிழக்கு முஸ்லிம் பகுதிகளில் உயிர்ப்பலிகள் இடம்பெறாவிட்டாலும் மிகக் கூடிய அளவில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கல்வீச்சு, டயர் எரிப்பு, துப்பாக்கி வேட்டு, மின்சாரத் துண்டிப்பு என வித்தியாசமான வன்முறை யுக்திகள் முஸ்லிம் பகுதி தேர்தல் களத்தில் கையாளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் பிரதேசங்களில் என்றுமில்லாதவாறு இம்முறை மிகக் கூடுதலான வன்முறைகள் இடம்பெறுவதற்கு காரணம் என்ன? ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் தத்தம் பங்கினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறியாட்டமே வன்முறைகளாக வெடித்திருக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடைந்து பிளவுபட்டதன் எதிரொலியே அங்கு வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நுஆ தலைவி பேரியல் அஷ்ரப், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா ஆகியோரிடையான அதிகாரப் போட்டிக்கான பலப்பரீட்சை, அவர்களது ஆதரவாளர்களை வன்முறைகளில் ஈடுபடத் தூண்டியிருக்கின்றன.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இம்மூன்று தலைவர்களும் ஒரே களத்தில் குதித்திருப்பதால், அங்கு பல்வேறு வகையான அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் அணியினர் மீதான வன்முறைகளே அதிகம் இடம்பெற்று வருகின்றன.

## ஹக்கீம் மீது வன்முறை

ஹக்கீமின் அரசியல் எதிரிகளான பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், சேகு இஸ்ஸதீன், அஸீஸ் ஆகியோர் ஒரே அணியாகப் பலம்பெற்று, அவரைத் தோற்கடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கில் களமிறங்கியிருப்பதனாலேயே ஹக்கீம் மீது வன்முறைகள் ஒட்டுமொத்தமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

வேட்பு மனுத்தாக்கல் செய்த தினத்தன்று அவரது வாகனத் தொடரணி மீது கல்வீச்சு நடத்தப்பட்டது. பின்னர் அவர் பங்கு பற்றிய சம்மாந்துறைக்கூட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாக தீர்க்கப்பட்டன. இத்துடன் அட்டாளைச்சேனை, கல்முனைக்குடி போன்ற இடங்களில் டயர்கள் எரிக்கப்பட்டன. ஹக்கீம் வழிமறிக்கப்பட்டார். இவ்வாறு இன்னும் சில எதிர் நடவடிக்கைகளையும் அவர் சந்தித்து வருகிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் அணியினருடன் ஒப்பிடுகையில் சுதந்திர முன்னணியினர் மீதான வன்முறைகள் குறைந்த அளவிலேயே இடம்பெற்று வருகின்றன. அமைச்சர் ஹக்கீம் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்கவை சந்தித்து தமது கட்சியினர் மீதான அடாவடித்தனங்கள், அட்டகாசங்கள், வன்முறைகள் பற்றி எடுத்து கூறி, மேலதிக பாதுகாப்பு கோரியிருக்கிறார்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் கூட்டங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. வேட்பாளர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. எனினும் வன்முறைகளும், அச்சுறுத்தல்களும் குறைந்ததாக இல்லை. முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற தேர்தல் வன்முறைகள் குறித்து புத்திஜீவிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர் மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர். தேர்தல் தினத்தன்று மக்கள் வெருண்டோடும் வகையில் வன்முறைகளைக் கட்டவிழத்து விட்டு வாக்குகளை ஒட்டு மொத்தமாக சூறையாடுவதற்கும் ஒரு தரப்பு, திரைமறைவில் திட்டம் தீட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு, சிவில் நிர்வாகம் போன்றவற்றை தம்வசம் வைத்திருக்கின்ற ஜனாதிபதியே, வன்முறைகளுக்கு மத்தியில் நீதியானதும, சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார்.

அஸ்லம் எஸ்.மௌலானா

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

TEGOSL

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2003

சிறந்த பத்திரிகையாளர்களுக்கான சான்று விருதுகள் வழங்கல் 2003

2003ஆம் வருடத்துக்கான பத்திரிகை வாயிலாக ஊடக எழுத்துத் துறையில் சிறந்த சேவை ஆற்றிய பத்திரிகையாளர்களுக்கான சான்றுதல் விருது வழங்க இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் சிறந்த சேவையாற்றியவர்களிடமிருந்து விண்ணப்ப விபரங்கள் கோர விரும்புகின்றது. அடியிற்கண்டவாறு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இதனுடைய முக்கிய குறிக்கோள் வருடந்தோறும் செய்தி இதழ்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றிய சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு குறிப்பிட்ட வருடத்தில் சான்று விருதுகள் வழங்க இ ப ஆ ச உத்தேசித்துள்ளது. அதாவது விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்புவோர் ஊடகத் துறையில் செய்தி இதழ்களுக்கு மும்மொழிகளிலும் சிறந்த சேவையாற்றியவர்கள், இலங்கையில் வெளி வந்த செய்தி இதழ்கள் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் விண்ணப்பிக்க லாயக்குண்டு.
இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சுதந்திரமாக இயங்கும் நடுவர்களால் தேர்வு செய்யப் பட்டு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இவ்வருட இறுதியில் நடைபெறும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு சான்று விருதுகள் அடியில் கண்டவாறு வழங்கப்படும்.

1. மேர்வின் த சில்வா விருது வருடத்தின் சிறந்த பத்திரிகையாளர்.
2. டி ஆர் விஜேவர்தன விருது - பொதுமக்களின் ஆவமுடையோரின் பாராட்டுதல்கள் பெற்றவர்.
3. சேப்பால குணசேன விருது - இலங்கை செய்தி இதழ் சுதந்திரத்திற்காக வாதாடியவர்.
4. உபாலி விஜேவர்தன விருது - வருடத்தின் வருங்கால எழுத்தாளர்.
5. டி பி தனப்பால விருது - வருடத்தின் ஸ்கூப்.
6. பி ஏ சிரிவர்தன விருது - வருடத்தின் சிறந்த கொலம்னிஸ்ட.
7. கலாநிதி கே கைலாசபதி விருது - விசேட இக்கட்டான நிகழ்வுகளில் செய்தி தொகுத்தவர்.
8. டென்சில் பீரிஸ் விருது - வருடத்தின் இளம் செய்தியாளர் (30 வயதிற்கு கீழ்பட்டவர்கள்.
9. வருடத்தின் சிறந்த சுற்றாடல் அறிக்கை தயாரிப்பாளர்.
10. வருடத்தின்விளையாட்டு விடயங்களை தயாரித்தளித்தவர்.
11. வருடத்தின் சிறந்த கார்ட்டூன் அமைப்பாளர் விருது.
12. வருடத்தின் சிறந்த புகைப் படப் பிடிப்பாளருக்கான விருது.
13. வருடத்தின் சிறந்த வடிவமைப்பு பத்திரிகை.
14. சிறந்த பத்திரிகையாளர்கள் (3 தரப்பினர்) தமிழ் ஆங்கிலம் சிங்களம்.
15. வேறு விசேட விருதுகள் அல்லது நடுவர்கள் தேர்ந்தெடுக்கும் சிறப்பு விருது பெறுபவர்கள்.

விண்ணப்பங்களை அஞ்சல் வழியில் அல்லது நேரடியாக காலை 10 மணி முதல் மாலை 6 மணிக்கிடையில் கையளிக்க முடியும். அடியில்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:-
அமைப்பாளர்
நடுவர் குழு 2003ஆம் வருடத்துக்கான சிறந்த விருது வழங்கல்.
இல 100 பார்க்ஸ் பிளேஸ் -
கொழும்பு 7.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2003 ஆம் வருடம் தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31ஆம் வரை அமைந்துள்ளதாக இருத்தல் வேண்டும்.
விதி முறைகள்: இலங்கையின் ஊடகத் துறையில் சம்பந்தப்பட்ட செய்தி இதழ் பத்திரிகையாளர்கள், நிருபர்கள், அனைவரும் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். மேலும் அவர் அல்லது அவரது பத்திரிகைய ஆசிரியர் அல்லது இச்சங்கத்தின் அங்கத்தினர் மூலமாகவும் அசல் பிரதிகள் அவரின் போட்டோ கொப்பி பிரதிகள் உள்ளடங்கியவாறு அவரின் ஆக்கங்கள் பற்றிய விபரங்களை அடியிற்கண்ட மாதிரி உட்பிரவேச படிவத்திலுள்ளவாறு சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் முடிவுறும் திகதி 2004 பங்குனி 31ஆம் திகதி

மாதிரி விண்ணப்பப் படிவம்
சிறந்த பத்திரிகை ஊடகவியலாளருக்கான சான்று விருதுகள் 2003

விண்ணபத்தின் வகை :
பெயர் :
வெளியீடு :

(பட்டியல் வகையில் உள்ள ஒன்றை தெரிவு செய்யுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களை அனுப்ப விரும்புவோர் தனித்தனியாக படிவங்களை நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும்.) சமர்ப்பிக்கப பட்ட பேப்பர் கிலிப்பிங்ஸ் விபரப் பட்டியல்.
ஒவ்வொரு கிலிப்பிங்சும் தெளிவான விபரக் கொத்துடன் அதாவது தலையங்கம் பத்திரிகையில் வெளியான திகதி அனைத்தும் தெளிவாக எழுதி அனுப்பப் படல் வேண்டும்.)

1.
2.
3.

சிபார்சு கடிதங்களை ஆசிரியரிடமிருந்து அல்லது செய்தி ஆசிரியர், நிகழ்வுகள் ஆசிரியர், நிழற்பட ஆசிரியர், விளையாட்டு சம்பந்தமான ஆசிரியர், வர்த்தக சம்பந்தமான ஆசிரியர் அல்லது பிரதான ஆசிரியர் ஆகியோரிடமிருந்து சமர்ப்பித்தால் சிறப்பாகும். (ஆனால் இவை அவசியமாகாது).

.............................................
சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கையொப்பம்

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

| கொழும்பில்... | கல்முனையில்.. |
|---|---|
| மார்ச் 24 - 29 வரை சந்திக்கலாம்<br>New Ahmed Turist Inn, Bang Bang Building<br>10 - 1/A, Bankshall Street, Colombo - 11.<br>TEl No. 5368426, 368427, Cell. 0722 910796<br>Hot Line: 0777 569205 | மார்ச் 06, 07, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்<br>T.M.M. பாமசி கல்முனை<br>Tel No. 067 2229329<br>Hot Line: 0777 569205 |

| வவுனியாவில்... | யாழ்ப்பாணத்தில்... |
|---|---|
| மார்ச் 13, 14, ஆம் திகதிகளில்<br>Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு<br>வவுனியா, Tel No. 024 2222074<br>Hot Line: 0777 569205 | மார்ச் 16 - 21வரை<br>A.S.N. சுற்றுலா விடுதி<br>392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்<br>Hot Line: 0777 569205<br>Tel No. 021 2223181<br>021 222 5399 |

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

மார்ச் 15 – 21, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401–6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## கண்காணிப்புக் குழுவும் தேர்தல் வன்முறைகளும்

பொதுத்தேர்தலுக்கு இன்னும் சுமார் இரண்டு வாரங்களே இருக்கின்றன. நாட்டின் பல பாகங்களிலும் தேர்தல் வன்முறைகள் பெருமளவு இடம் பெற்று வருகின்றன. தேர்தலுக்கான நாள் நெருங்க, நெருங்க நிலைமை மோசமடையலாம். இதற்கான சாத்தியங்களே கூடுதலாகத் தென்படுகின்றன.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ள கருத்து சகலரையும் சிந்திக்க வைக்கிறது.

தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான தேர்தல் ஆணையாளர் ஜோன் குஷ்னஹன், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை குறித்து கொழும்பு பிளாசா ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இரு விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை என்பது ஒன்று. மற்றது – அரசியல் வாதிகளுக்கான ஒழுக்கக் கோவை ஏற்படுத்தப்படவில்லை என்பது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு 2000 ஆம் ஆண்டிலும் 2001 ஆம் ஆண்டிலும் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பணி ஆற்றியது. எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெற உள்ள தேர்தலிலும் அது பணியாற்ற தற்பொழுது கொழும்பு வந்திருக்கிறது. தனது பணிகள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அதன் தலைவர் தனது விதப்புரைகள் நிறைவேற்றப்படவில்லை என்ற கவலையைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு பொதுத் தேர்தல்களிலும் பணியாற்றிய பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக்குழு தேர்தல் செயல்முறைகளை வலுப்படுத்துவது சம்பந்தமான விதப்புரைகளை இலங்கை அரசுக்கு வழங்கி இருந்தது.

முன்னைய இரண்டு தேர்தல்களிலும் அரச மூலவளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை, ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இடம் பெற்ற சமத்துவமின்மை, தேர்தல் வன்செயல்கள், வாக்காளர் பதிவில் ஏற்பட்ட பிரச்சினைகள், சில வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் சென்று வாக்களிக்க முடியாமற் போனமை ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்தக் கண்காணிப்புக்குழுவின் விதப்புரைகள் அமைந்திருந்தன.

இந்த விதப்புரைகளில் முக்கியமானவையே சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்பதும், அரசியல் கட்சிகளுக்கு ஒழுக்கக் கோவை ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்பதுமாகும்.

தனது விதப்புரைகளில் ஒன்றாவது அமுல் செய்யப்படாதது குறித்து கண்காணிப்புக் குழு விசனம் தெரிவித்துள்ளது.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. நீண்ட காலமாகக் கோரிவந்தது. ஆனால், அதற்கு வேண்டிய பிரதிநிதியை நியமிக்காமல் இழுத்தடித்து வந்தவர் ஜனாதிபதிதான். ஆனால், ஜே.வி.பியின் நிலைப்பாடு பின்பு மாறிவிட்டது. ஜனாதிபதி, பொலிஸைக் கட்டுப்படுத்தக் கூடிய உள்துறை அமைச்சையும் மற்றும் பாதுகாப்பு அமைச்சையும் பொறுப்பேற்ற பின்பு ஜே.வி.பி. தனது கோரிக்கையை வலியுறுத்தாமல் விட்டு விட்டது.

பொலிஸ் நிர்வாகம் தமதுதரப்பின் கையில் இருப்பதால் சுயாதீன ஆணைக் குழு இல்லாததைப் பயன்படுத்தி தேர்தல் வன்முறைகளிலும், முறைகேடுகளிலும் தாராளமாக ஈடுபடலாம் என்று ஜே.வி.பி. நம்புகிறது போலும்.

இதனால், வன்முறைகளைக் கட்டுப்படுத்தவோ, வன்முறைகளில் ஈடுபடும் கட்சியினர் மற்றும் வேட்பாளர்கள் போன்றோருக்கு எதிராக நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவோ முடியாத நிலைமை இம் முறையும் நீடிக்கப்போகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு இதனை முன் கூட்டியே ஊகித்து எச்சரித்திருக்கிறது.

# கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் தென் இலங்கை பேரினவாதிகளும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் கருணாவுக்கும் இடையிலான முறுகல் நிலை தொடர்கிறது.

தலைமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய கருணா, மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட விசேட தளபதி பதவியில் இருந்தும் புலிகள் அமைப்பில் இருந்தும் தலைமையினால் நீக்கப்பட்டு விட்டார்.

மட்டு. – அம்பாறை மாவட்ட விசேட தளபதியாக ரமேஸும், தளபதியாக ராமும், துணைத் தளபதியாக பிரபாவும், அரசியல் பொறுப்பாளராக கௌசல்யனும் புலிகளின் தலைமையினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது கிழக்கில் ஏற்பட்டிருப்பது ஒரு தனி மனிதனின் பிரச்சினையே அன்றி, அது அங்குள்ள மக்களின் பிரச்சினை அல்ல என்று தெரிவிக்கிறது புலிகளின் தலைமை. பிரச்சினைக்கு முடிவுகாண எந்த விளைவுகளையும் எதிர்நோக்க அது தயாராகி வருகிறது.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த புலிகளின் முக்கிய தளபதிகள் வன்னி சென்று விட்டனர். இப்படியான நிலைமையில் கூட மட்டக்களப்பு – அம்பாறைப் பகுதிகளில் தனது பிடியை இறுக்கும் முயற்சிகளில் கருணா ஈடுபட்டு வருகிறார். மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்கள் தமது பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்கிறார் அவர்.

ஆனால், வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைமை சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது. புலிகள் அமைப்பில் இருந்து கருணாவை நீக்கி புதிய தளபதிகளை நியமித்து விட்டு அடுத்த காய் நகர்த்தலுக்கான நடவடிக்கையை அது நிதானத்துடன் மேற்கொண்டு வருகிறது.

### பேரதிர்ச்சி தந்த சம்பவம்

கிழக்குச் சம்பவம் இலங்கை வாழ் தமிழர்களை மட்டும் அன்றி புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரையுமே பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டிருக்கிறது. ஈழ விடுதலைப் போராட்டம் இன்று முக்கியமானதோர் வரலாற்றுத் திருப்பு முனையில் வந்து நிற்கும் போது இது நிகழ்ந்ததுதான் பெரும் வேதனை.

எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று தமிழ் மக்களின் பலத்தை வடக்கிலும், கிழக்கிலும் நிலைநிறுத்த வேண்டிய அவசியம் இருந்து வருகிறது.

பொதுத்தேர்தலில் தென் இலங்கையில் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகும் கட்சி எது என்பதைத் தீர்மானிக்கப் போவதும் தமிழ் கூட்டமைப்புத்தான். அதே சமயம் தெற்கில் ஆட்சிக்கு வரும் கட்சியுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கத் தயார் என்று புலிகளும் அறிவித்துள்ளனர்.

புலிகளினால் அரசிடம் கையளிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாகுவதற்கான திட்ட வரைவு, தேர்தலில் புதிதாக ஆட்சிக்கு வரும் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படுமா என்பதும் இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றினால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்.

### ஐக்கியமே முக்கியம்

ஆகவே, இன்றைய நிலையில் தமிழ் மக்களின் ஐக்கியமே முக்கியமானது. இது சகல தமிழர் தரப்புக்களினாலும் முன்னிலைப்படுத்தப்பட்டு உணர்த்தப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகளின் பலமும், தமிழ் மக்களின் ஐக்கியமுமே தென் இலங்கைப் பேரினவாதிகளைப் பணிய வைக்கக் கூடியவை.

சாதி, மத, பிரதேச வாதங்களுக்கு உட்பட்டு தமிழினத்தைப் பிளவு படுத்துவது இனத்தின் 20 ஆண்டு கால விடுதலைப் போரையும், இனத்தின் மீட்சியையும் நாசமாக்கி விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

### ஆயரின் முயற்சி

இத்தகைய நிலையில்தான் மட்டக்களப்பு – திருகோணமலை பேராயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியது.

இந்தக் குழுவினர் பின்பு மட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்று கருணாவுடன் பேச்சு நடத்த திட்டமிட்டபோதிலும் அவர்களினால் கருணாவைச் சந்திக்க முடியாது போய்விட்டது.

கருணாவின் சகாக்களுடன் பேச்சு நடத்தி விட்டுத் திரும்பி விட்டனர். பிரச்சினைக்குத் தீர்வு காண தேசியத் தலைவரும் கருணாவும் சந்தித்துப் பேச வேண்டும் என்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சியில் ஆயருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது கருணாவின் அண்மைகாலச் செயற்பாடுகள், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள், அந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தலைமை பீடம் விசாரணை நடத்த முற்படுகையில் கருணா எடுத்த முடிவுகள், தலைமை பீடத்தின் அறிவுறுத்தல்கள், கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆயரிடம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

### நோர்வேயின் கவலை

புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நெருக்கடி குறித்து புலிகளின் தலைமை, நோர்வே அரசுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் அறிவித்து விட்டது. நோர்வே இதனை புலிகளின் உள்விவகாரமாகவே கருதுகிறது. அதே சமயம் கருணாவுடன் தொடர்பு எதனையும் வைத்துக் கொள்ளப்போவதில்லைஎன்றும் நோர்வே தெரிவித்து விட்டது. இந்த முறுகல் நிலைமை தனது சமாதான முயற்சிகளைப் பாதித்து விடுமோ என்று நோர்வே தரப்பு அஞ்சுகிறது. அதே சமயம் தமிழ் கூட்டமைப்பின் மாபெரும் வெற்றியை இந்த நெருக்கடி பாதித்து விடலாம் என்ற அச்சம் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு இருந்து வருகிறது. ஏற்கனவே மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் தமிழ் கூட்டமைப்பு தனது பிரசார நடவடிக்கைகளை இடை நிறுத்திவிட்டது. விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கும் அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்றும் தம்முடன் இலங்கை அரசு தனியாக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்றும், கருணா கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு மட்டக்களப்பு – அம்பாறையில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து விலகிக் கொண்டு விட்டது. கருணாவின் கோரிக்கையை இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளவில்லை.

கருணாவின் பொறுப்பில் தற்பொழுது 5,000 க்கும் மேற்பட்ட போராளிகள் இருந்து வருகின்றனர். என்றும், ஆயுதங்களும் உள்ளன என்றும் இவையே புலிகளின் தலைமைக்கு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகின்றது.

### பிரதேச வாதம்

கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார். தேவை ஏற்பட்டால் மேலதிக படைகளை கிழக்கே அனுப்பத் தயார் என்று அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மக்கள் வடபகுதியினால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற கருணாவின் பிரதேச வாதக் குற்றச்சாட்டு சிங்களப் பேரினவாதத்துக்கே துணைபோவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் பிரதேச வாதம் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து வன்னித் தலைமைக்கு எதிராக ஊர்வலங்கள், ஹர்த்தால்கள் இடம்பெற்றன. 72 மணி நேரத்துக்குள் வடபகுதியினர் வெளியேறி விட வேண்டும் என்று துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டதை அடுத்து டாக்டர்கள், வர்த்தகர்கள், புத்திஜீவிகள் என்று பலர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி இருந்தனர். ஆனால், இந்த துண்டுப் பிரசுரத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிறது கருணா தரப்பு.

### பொய்ப்பிரசாரம்

கிழக்கு நிலைமையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு முயற்சி செய்வது நன்கு தெரிகிறது. லக்ஷ்மன் கதிர்காமரின் கீழ் உள்ள அரச ஊடகங்கள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன் புலிகளின் தலைமையினால் கட்டுக் கொல்லப்பட்டு விட்டார் என்று அரச ஊடகம் ஒன்று வெளியிட்ட பொய்ச் செய்தியும் இத்தகைய தொன்றே.

இந்தச் செய்தி தவறானது என்பது தெரிந்த பின்பும்கூட தவறை ஒப்புக் கொண்டு அந்தச் செய்தியில் திருத்தம் செய்யக் கூட முயற்சி எடுக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் ஒன்றுபட்ட செயற்பாடுகளே கடந்த காலங்களில் தென் இலங்கைப் பேரினவாதிகளுக்கு பெரும் சவாலாக இருந்து வந்தன.

பொதுத் தேர்தல் நெருங்கிவரும் இந்த வேளையில் தமிழ் கூட்டமைப்பில் ஏற்பட்ட பின்னடைவும் புலிகள் அமைப்பில் உருவாகியுள்ள முரண்பாடும் தென் இலங்கைப் பேரினவாதிகளுக்கே சாதகமானவை.

– சஞ்சாரன் –

இப்பொழுது வெள்ளவத்தையில்

சுடர் ஒளி உதயன் விளம்பர கருமபீடம்

எமது பத்திரிகைகளுக்கு உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C,6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் ஸ்ரேசனுக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பரக் கருமபீடத்திலும் கையளிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.
011 4 734401 – 3 , 011 2 399666 – 70

வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம்.
0714801391


பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# சமாதானத்தால எங்களுக்கு என்ன கிடைச்சிது?

## வருமானம் அதிகரித்தது. கடன் சுமை குறைந்தது.

யுத்த நிறுத்தத்தின் மூலம் முழு உலகத்தினதும் கவனம் நம் நாட்டின் மீது திரும்பியது. அதன் மூலம் ஆயிரக் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய முதலீட்டாளர்களையும், முதலீடுகளையும் நம் நாட்டுக்குக் கொண்டு வர முடிந்தது. அந்த மில்லியன் கணக்கான டொலர் பணத்தை பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்ததன் மூலம் நீண்ட காலத்தின் பின் தொழிலாளர்களின் சம்பளங்கள் அதிகரித்தன. தமது உற்பத்திகளுக்கு அதிக விலையை விவசாயிகள் பெற்றனர். பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் கிடைத்த இலாபத்தைக் கொண்டு எமது நாடு பெற்றுள்ள கடனை பெருமளவு குறைக்க முடிந்தது. காலியாக இருந்த திறைசேரி மீண்டும் செழிப்படைய ஆரம்பித்தது. வீழ்ச்சியடைந்திருந்த எமது பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி காண ஆரம்பித்தது. பங்குச் சந்தையில் விலைகள் சடுதியாக அதிகரித்தன. தெளிவான பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் நாடு வளம் பெறத் தொடங்கியது. இவை அனைத்தும் சமாதானத்தின் மூலமே சாத்தியமானது. அந்தச் சமாதான பயணத்தைத் தொடர எம்மோடு இணையுங்கள்.





நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.

www.unplanka.org
www.regainingsrilanka.org

# திருமலையில் தமிழ்க்கூட்டமைப்பு 2 ஆசனங்களை கைப்பற்றுமா?

13ஆவது நாடாளுமன்றத் தேர்தல், கிழக்கு மக்களைப் பொறுத்தவரை பதற்றத்துடன் எதிர்நோக்கப்படுவது தெரிகிறது.

அப்படி இருந்தும் திருகோணமலையில் தமிழ்க்கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. கடந்த தேர்தலில் நூலிழையில் இரண்டாவது ஆசனம் தமிழர் தரப்பை விட்டுச் சென்றது. சில நடைமுறைக் காரணங்களுடன் ஏனைய வாக்காளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வந்த மக்களில் பலர் வாக்களிக்க முடியாது போனமை, குறைபாடான நெறிப்படுத்தல் ஆகியவை இதற்குக்காரணமாக இருந்தன. அத்துடன் விருப்பு வாக்குகள் திணிக்கப்பட்டதால் வாக்காளர்கள் சுயேச்சைக் குழு ஒன்று, இரண்டு என்ற இலக்கங்களுக்கு வாக்களித்துவிட்டனர். இதனால் மூதூர் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டது. இதுவும் இரண்டாவது ஆசனம் கிடையாமல் போகக்காரணம் ஆகும். முஸ்லிம் காங்கிரஸும் தனது வெற்றியில் நம்பிக்கை கொண்டுள்ளது.

சிங்கள வாக்குகளைப் பொறுத்தவரை சிதறிச்செல்லும் சந்தர்ப்பம் நிறைய உண்டு. எம்.பி.எம்.குணவர்த்தன தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பும், சுனில் சாந்த தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் சிங்கள வாக்குகளை பிளவுபடுத்தும் சந்தர்ப்பம் உண்டு. எனினும் இது தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. தேசியக்கட்சியில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளரால் சில சமயம் சொற்ப முஸ்லிம் வாக்குகள் பிரியலாம்.

கடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்கத்தகுதி பெற்றவர்களை விட இம்முறை6ஆயிரத்து 735 வாக்காளர்கள் அதிகம். இந்தியா, மற்றும் வேறு இடங்களில் இருந்து வந்து மீள்குடியமர்ந்தோர், இராணுவக் கட்டப்பாடற்ற பிரதேச மக்களுக்கு வழங்கப்படும் வாக்களிக்கும் சந்தர்ப்பம் என்பன வாக்காளர் அதிகரிப்புக்குக்காரணம் ஆகும். ஈ.பி.டி.பியினரும் இங்கு போட்டியிடுகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அவர்கள் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர். நகர் உட்பட புறநகர்ப் பகுதி எங்கும் ஈ.பி.டி.பியினர் ஆட்டோவில் பிரசாரம் செய்கின்றனர். இது தவிர காலை, இரவு என பல செய்திகளையும் ஒலி பரப்புச் செய்கின்றனர்.

திருகோணமலையில் தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். வீணையுடன் ஈ.பி.டி.பியின் போஸ்டர்களில் டக்ளஸ் தேவானந்தா சிரித்த முகத்துடன் காணப்படுகின்றார். சூரியன் மறைந்தாலும் தமிழர் கூட்டமைப்பு சுவரொட்டிகளில் ''வீடு'' பளிச் எனக் காணப்படுகிறது. கூட்டமைப்பு சார்பில் களமிறங்கிய ரெலோ தீவிரமாகச் செயற்படுகின்றதாக கூறப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 3இலட்சத்து 79ஆயிரத்து 610 மக்களில் மூன்று எம்.பிக்களைத் தெரிவுசெய்ய 2இலட்சத்து 24ஆயிரத்து 307பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மாவட்டம் முழுவதும் 278 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன. திருகோணமலைத் தேர்தல் தொகுதியில் 86ஆயிரத்து 277 வாக்காளர்களுக்காக 97 வாக்களிப்பு நிலையங்களும் மூதூர் தேர்தல் தொகுதியில் 74 ஆயிரத்து 869 வாக்காளர்களுக்காக 94வாக்களிப்பு நிலையங்களும்சேருவில தேர்தல் தொகுதியில் 63ஆயிரத்து 161வாக்காளர்களுக்காக 87 வாக்களிப்பு நிலையங்களும், அமைக்கப்படவிருக்கின்றன.

இம் முறை பத்து அரசியல்கட்சிகளும் ஆறு சுயேச்சைக் குழுக்களும் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. சிலர் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபடாது விட்டாலும் பலர் குதித்து விட்டனர். மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேர்தல் பிரசாரம் சூடு பறக்கிறது.

ஏது எப்படியோ நெருக்கடிகளின் மத்தியில் நடைபெறவிருக்கின்ற தேர்தலில் திருமலையில் இரண்டு ஆசனங்களைப் பெற தமிழ்க்கூட்டமைப்பு குறி வைத்து செயற்பட்டு வருகின்றது.

**எஸ். எஸ். ஆர்**

# கவிதைப் பூவனம்

### பருவ காலத் தேர்தல்

பட்டணத்துப் பட்சிகளே,
பறந்து வந்ததென்ன ஊருக்கு?
மாண்டு போன வசந்தம் - இன்று
மீண்டு வந்த நினைவோ?
தேர்தல் குளத்திலே குதித்து
களித்திருக்க ஓர் ஆசனமோ?
கடந்த கால தேர்தல்
பருவத்தினிலே
நடந்தவைகள்
மறந்து போனதோ...?
புரிந்துணர்வு இல்லாமலே
பிரிந்து போனதும் நீங்களே...
சுட்டெரிக்கும் சூரியனையே
கட்டிப் போட
நினைக்கும் மடையரே,
கூட்டு வாழ்க்கை கூடாதென்று
கெடுத்து வைத்த இனமே,
தேர்தல் வானிலே - இன்று
உமக்கும் வேடந்தாங்கலோ!

ந. புவனகாந்தி,
வாழைச்சேனை.

### உன் பார்வையால்...

காந்தப்புலம்,
ஈர்ப்புப்புலம்,
மின்புலம் என - நான்
அறிந்த புலன்கள் ஏராளம்.
அத்தனையும் விஞ்சிவிட்டது
உன் பார்வைப்புலம்.
நீ இன்று பார்த்த
பார்வையால்
நான் என்னை மறந்து
வானில் பறந்தேன்.
காதல் என்றால்
இதுவா!
ஏங்கியது என் மனம்.
வாழ்விலே கண்டிராத
சுகம்
இன்று கண்டேன்.
உன் விழியில்
இழந்தேன்
என்னை.
மீட்டுக்கொடு
என்னை உன்னில்.

ச. அன்ரனி
சற்கோட்டை.

### உறுதிமொழி

உன்னை நான்
பிரியும் போது
மொழிந்தது
கண்ணீர் மொழி.
மொழியாதது
காதல் மொழி.
என் ஆயுளுக்குப் போதுமடி
இந்த மரண வலி.
ஆனாலும் என் மனம்
செல்லாது தீய வழி
இதுவே நான்
உனக்கு தரும்
உறுதி மொழி.

பா.நிமலரூபன்,
வேலணை.

### நிகரில்லா துன்பம்

தேனிலும் இனிய
தெய்வப் பிறப்பே - உன்
திருமுகம் காண
தினமும் ஏங்குகிறேன். நீ
ஒருமுறை வந்தென்
உடலினைத் தொட்டால்
உயிர் வாழ்வேன் - நான்
ஓர் நூறு ஆண்டு
பத்து மாதங்கள்
கருவினில் சுமந்து
பச்சை உடலினை
கைகளில் சுமந்து
பாலுடன் பாசமும்
பருகிடத் தந்து
பார் மீதிலே
என்னை
படர்ந்திட விட்டவளே,
நான் என்பதில் என்ன
நற்கருத்து உள்ளது?
நீ தந்ததே இந்த
நல்லுடலும் மென்னுயிரும்
நானுந்தன் உடலில்
ஓரங்கம் தானம்மா
நீயதைப் பிரிவது
நிகரில்லாத்துன்பமம்மா.

மு.ரவி,
புதுக்குடியிருப்பு.

### பிரிவின் தொடக்கம் பற்றிய விவாதம்.

வேண்டியதை
தெரிவு செய்ய
சொன்னாய்
செய்தேன்.
பின் என்
சகலவற்றையும்
எனது தலையில்
போடுகிறாய்!
தெரிவு என்று வந்தால்
உள்ள எல்லாம்சமன் தான்.
அவரவருக்குப்பிடித்தவற்றை
அவரவர்கள்
எடுக்கிறார்கள்.
அதற்காக
உயர்வு தாழ்வு
என்றோ
நல்லது கெட்டது என்றோ
கூறுதல் சரியா?
நீ, இரண்டு தந்தால்
இரண்டும் சமன் தான்.
அதில் ஒன்றை
நல்லதாகவும்
மற்றையதை கெட்டதாகவும்
பார்ப்பது
அபத்தம் எனலாமா?
நீ தந்த தெரிவு தான்
எம்மைப் பிரித்தது.
குழுவாக்கியது.
இது எமது குற்றமல்ல.
பிரிவுக்குக் காரணமே நீ தான்.

கே.முனாஸ்.

### மீண்டும் குழந்தையாய்

தாயின் அரவணைப்பில்
தாலாட்டுப் பாடியெனை
மார்போடணைத்து
தூங்க வைத்ததும்
குழந்தையாய்த் தான்.
தாரமாய் வர ஏங்கும்
என் காதலி - எனை
தன் மடியிலேந்தி
காதல் கதை கூறி
தலை கோதிடும் வேளை
நான்
அவள் மடியில் மீண்டும்
குழந்தை தான்.

சி. விதுரன்,
வேரவில்.

### நம்பிக்கை

மரணத்தை நோக்கி
கால்கள் நடந்தன.
மனமோ சாகா வரமாய்
ஆள் அரவமற்று
ஆல மரத்தடியில்
அமர்ந்து - சற்று
அண்ணாந்து பார்த்தேன்.
ஆச்சரியம்!
எப்போது விழும்
என்று அன்று பார்த்த
அதே கிளை.
ஆனால் இப்போது
விழுதுடன் விறைப்பாக...
ஏன் முடியாது என்னால்!
என்னிலும் வளர்ந்தது
நம்பிக்கை விழுது
எழுந்தேன்!
இறப்பதற்காக அல்ல -
சிறகு விரிப்பதற்கு!

கே.என். குருபரன்.

### எதற்காக?

பெண் விடுதலை பற்றி
மேடையிலே
முழங்குகிறாள்
மாதர் சங்கத் தலைவி.
ஆனால்,
வீட்டுக்கு வந்ததும்
கணவன் கொண்டு வந்த
பெட்டை நாயை
கொண்டு போய்
விட்டு வரும்படி
விரட்டியடிக்கிறாள்.

ர.சுரேஸ்,
ஆரையம்பதி-02.

### புரிந்து கொள்

அன்று உன்னை
முதன் முதலாய்
நான் சந்தித்த போது
உன்னில் என்னை
இழந்துவிட்டேன்.
இனிமை கலந்த
உன் புன்னகை
இனித்திடும்
உன் இனிய பேச்சு
இளமை கலந்த
உன் அழகிய
வதனம்
எப்போதும் நீ
என் விழிகளுக்குள்
உறங்குகிறாய்
என்பதை
உணர்ந்து கொள்.

கே.ஜீவா,
மட்டுநகர்.

### கொல்லாதே

கதி இன்றி
என்னுள்ளம்
கனவோடு
தான் வாழ
விதி ஒன்று
பின்னோடு
விளையாட
வெள்ளை மனம்
ஒன்று
கூர் வேலாய்க்
குத்திட விட
தள்ளி நடந்தாளே
என்னை
தத்தளிக்க வைத்தாளே
நான் வளர்த்த
ஆசைகள்
வீணாகிப்
போயினவே!
பாசாங்கு
பண்ணிவிட்டு
பார் போற்ற
நடப்பவளே,
வாளாக என்னை
வாரி விட்ட
என்னவளே

ந.வசந்தன்,
முள்ளியவளை.

### அன்பே வா

அன்பே...
வலது சோணையறை நீ
இடமது சோணையறை நான்.
இதயம் நமது வீடு - அதில்
இணைந்து வாழ்வோம்
உன
இருப்பிடம் விட்டு வா.

எஸ்.பி. லக்சனா,
[illegible]

### நம்பிக்கை

கலைந்து போன
உன் காதலால்
குலைந்து போன
என் மனதில்
கசிந்து வரும்
கவிதைத் துளிகள்
கரைத்துவிடும் - அந்த
கல்லாய்ப் போன
கயவனின் மனதை.

அரசு
மீசாலை.

### நம்பிக்கை

வாழ்க்கை வண்டியின்
அச்சாணி.

### மணிக்கூடு

கடமையில் இருந்து
விலகாத
அதி சிறந்த தோழன்.

### கல்வி

மானுடப் பிறப்புகளுக்கு
வழங்கப்பட்ட
கட்டாய விசா.

### நட்பு

துன்பத்திலும்
இன்பத்திலும்
தோள் கொடுக்கும்
உறவு.

திவ்யா,
கிளிநொச்சி.

### காதல் சாட்சி

அன்பே நீ என்னை
வெறுத்தாலும்
அன்று
நீ வரைந்த காதல்
காவியங்களை வீட
நாம் சந்தித்த புல்வெளிகள்
நதிக்கரைகள்
எல்லாம் - இன்றும்
சாட்சி பகர்கின்றன.
நீதி மன்றத்தின்
கூண்டில் அல்ல - என்
இதயக் கோயிலின்
பரிபாலன சபையில்.

கலையின் தோழன்
ஆரியவளை.

### ஜாதி

பெற்றோர்கள்
பிள்ளைகளுக்கு
சூட்டும் நாமம் போல்
மனிதர்கள்
மனிதர்களுக்கு
சூட்டிக்கொள்ளும் நாமம்.

என். ஜெயகணேசன்,
யோகவந்தவா.

### இப்படித் தான் காதல்

காத்திருந்தேன்
காதலிக்காய்
சேர்த்து வைத்தேன்
அன்பு தனை
நெருங்கி வந்தாள்
பருவ மங்கை
பிரிந்து சென்றாள்
தன் வழியில்.
தெரிந்து
கொண்டேன்
என் வழியை
புரிந்துகொண்டேன்
காதல் தனை.
பாடி உணர்ந்தேன்
பாடல்களை
தேடி அறிந்தேன்
கருத்துகளை
ஊறி இருந்தேன்
கவிதைகளில்
உணர்ந்து
கொண்டேன
பெண் மனதை
இடம் கொடுத்தேன்
இதயமதில்
திடம் இழந்தேன்
மனதினிலே
காம் பிடித்தேன்
கனவினிலே
உணர்விழந்தேன்
வாழ்க்கையிலே
நடந்து வந்தேன்
வாழ்க்கை தனில்
நான் நடந்தேன்
விபத்து தனில்
விளங்கிவிட்டேன்
வாழ்க்கையினை.

ரகுபாரதி
கம்பர் மலை.



# மனச்சாட்சிக்கு நேர்மையானவர்
# நாட்டுக்கு விசுவாசமானவர்

தொலைநோக்கற்ற கொள்கைகளின் விளைவுகளினால் பொது மக்கள் நீண்ட காலம் வேதனையுற்றிருக்கிறார்கள். உண்மையான தலைவர், தனது நாட்டினதும் மக்களினதும் நீண்ட கால நன்மைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயலாற்றுவார். வெறுமனே இலவசமாக பொருட்களை வழங்குதல், விப்பட்டும் கவர்ச்சிக் கலை ஆகியவற்றில் அவர் ஈடுபடமாட்டார். அவர் பெரும் வாக்குறுதிகளை அளித்து பெருமைப்படவோ தனது வெறுமையான அடுக்கு மொழிப் பேச்சினால் மக்களை உணர்ச்சிவசப்படுத்தவோ மாட்டார். அவர் திட்டம் எதுவுமின்றி மனம் போன போக்கில் செயற்படமாட்டார். ஒரு உண்மையான தலைவர் நாட்டின் எதிர்காலத்திற்கு எது அவசியமானது என்பதை உணர்ந்து தீர்க்கதரிசனமான கண்ணோக்குடன் நடந்து கொள்வார். அவர் கொள்கைகளை கோவையாக நெறிப்படுத்தி யதார்த்தபூர்வமான தீர்வுகளை தருகிறார். ஒரு நேர்மையான தலைவருக்கு தனது மனச்சாட்சியின்படி நடப்பதற்கான மனோதிடம் இருக்கும்.

**இப்பணியைத் தொடர எமக்கு ரணில் வேண்டும். அவரிடமே எதிர்காலம் தங்கியுள்ளது.**

ஐக்கிய தேசிய கட்சி

# தென் இந்திய மாநிலங்களில் பி.ஜே.பி. வெற்றி வாய்ப்பு எப்படி?

இந்தியாவின் மத்திய அரசைத் தீர்மானிப்பது உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களே என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் அது சாத்தியப்படுவதில்லை. தென்மாநிலங்களான ஆந்திரா (43 லோக்சபா ஆசனங்கள்), தமிழகம் (40 லோக்சபா ஆசனங்கள்), கர்நாடகா (28 லோக்சபா ஆசனங்கள்) கேரளா (20 லோக்சபா ஆசனங்கள்) ஆகியவற்றில் வெற்றி பெறும் கட்சியே மத்தியில் ஆட்சியில் அமர அதிக வாய்ப்பு இருந்து வருகிறது.

உதாரணமாக கடந்த முறை பி.ஜே.பி. ஆட்சியில் அமர உத்தரப்பிரதேசம் சிறிதும் உதவவில்லை. மொத்தம் அங்குள்ள 85 ஆசனங்களில் 28 ஆசனங்கள் மட்டுமே பி.ஜே.பி.யால் வெல்லப்பட்டன. பி.ஜே.பி. கூட்டணி பெற்ற 300 ஆசனங்களில் தென் இந்திய மாநிலங்களில் மூலம் 69 ஆசனங்கள் கிடைத்தன.

தென் இந்திய மாநிலங்களில் வெற்றி பெறுவது மூலமே கடந்த கால காங்கிரஸ் அரசுகளும் மத்தியில் அரசமைக்க முடிந்தது. கடந்த தேர்தலில் ஆந்திராவிலும், தமிழகத்திலும் பி.ஜே.பி. கூட்டணி பெற்ற வெற்றி இனி அக்கட்சிக்கு ஒரு போதும் கிடையாது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். காரணம் தமிழகத்தில் தி.மு.க தலைமையில் வலுவான கூட்டணியில் காங்கிரஸ் உள்ளது. மாநிலத்தில் ஆளும் ஜெயலலிதா, மத்தியில் ஆளும் பி.ஜே.பி. இரண்டும் இணைந்து போட்டியிடுவதால் இருவர் மீதும் உள்ள ஆத்திரத்தை வெளிக்காட்ட தமிழக மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

ஆந்திராவின் நிலையோ பி.ஜே.பிக்கு இன்னும் கவலைக்கிடமாக இருக்கிறது. கடந்த தேர்தலில் மொத்தம் 43 தொகுதிகளில் 28 இல் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசமும், 7 இல் பி.ஜே.பியும் வென்றன. பலம் வாய்ந்த காங்கிரஸ் கட்சி வெறும் ஐந்தே தொகுதிகளில் தான் வெல்ல முடிந்தது.

சந்திரபாபு நாயுடு கடந்த 10 ஆண்டுகளாக ஆந்திராவை ஆண்டு வருகிறார். கம்பியூட்டர்காரர் எனப்படும் இவர் என்னதான் பீற்றிக் கொண்டாலும் இவரது செல்வாக்கு சரிந்தே வருகிறது. தெலுங்கானா என்ற தனி மாநிலம் கோரும் நக்ஸலைட்டுகளால் அவர் தாக்கப்படுகிறார். எனினும் அரசியல் ரீதியாகவும் தனிமாநிலக்கோரிக்கை வலுவடைகிறது.

தனி மாநில கோரிக்கையை ஆதரிக்க காங்கிரஸ் முடிவு செய்து விட்டது. பிராந்தியக் கட்சியான தெலுங்கானா ராஷ்ரிய சமித்தியுடன் (TRS) கூட்டணி வைத்தும் விட்டது. இதனால் தெலுங்கானா பிராந்தியத்தில் உள்ள 15 தொகுதிகளில் சந்திரபாபு நாயுடுவுக்கு கிடைக்கப் போவது பூஜ்யமே.

கடந்தமுறை இங்கு காங்கிரஸ் இரண்டே தொகுதிகளில் வென்றது. இம்முறை தெலுங்கானா ராஷ்ரிய சமித்தியுடனான கூட்டணியில் காங்கிரஸுக்கு நல்ல அறுவடை கிடைக்கலாம்.

பி.ஜே.பிக்கு தெலுங்கானாவில் செல்வாக்கு உண்டு. ஏனெனில் தெலுங்கானா கோரிக்கையை முதலில் ஆதரித்த கட்சி பி.ஜே.பியே. எனினும் பிரிவினையை எதிர்க்கும் சந்திரபாபு நாயுடுவுடன் கூட்டணியில் இருப்பது பி.ஜே.பிக்கு உதவாது. ஆகவே, தெலுங்கானாவின் 15 இடங்களும் கூட்டணிக்கு 'அவுட்' தான். ஆனால், மற்றைய பிராந்தியங்களில் காங்கிரஸ் நக்ஸலைட் தீவிரவாதத்தை ஆதரிப்பதாக காட்டி காங்கிரஸை தோற்கடிக்க சந்திரபாபு நாயுடுவால் முடியும். எனினும் 10 ஆண்டு ஆட்சி போதும் என மக்கள் சலிப்படைந்தால் சந்திரபாபு நாயுடுவின் கதி அதோ கதியாகும்.

தவிரவும் கடந்த தேர்தலில் இடதுசாரிகளும், காங்கிரஸும் எதிர் எதிர் அணிகளில் போட்டியிட்டதால் சந்திரபாபு நாயுடுவுக்கு எதிரான வாக்குகள் சிதறி மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே நாயுடு — பி.ஜே.பி. கூட்டணி பல தொகுதிகளில் வென்றது. இம்முறையோ இடதுசாரிகளும் காங்கிரஸுடன் இணைந்துள்ளனர். இதனால் சந்திரபாபு நாயுடு பெரும் ஆபத்திலுள்ளார்.

தென்மாநிலங்களில் பி.ஜே.பிக்கு ஓரளவாவது சாதகமான நிலை நிலவுவது கர்நாடகத்தில்தான். எனினும் கடந்த தேர்தல் காலத்தில் வலுவான ஜனதாதளம் கௌடா அணி, ஹெக்டே அணி என உடைந்திருந்தது. இம்முறை அவர்கள் ஓரளவு இணைந்து தேர்தலை சந்திக்கின்றனர்.

கர்நாடகத்தில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் மீது ஆத்திரம் இருந்தாலும் அந்த ஆத்திரம் பி.ஜே.பிக்கு ஆதரவான வாக்குகளாகுமா என்பது கேள்வியே. ஏனெனில் சிறுபான்மை மதத்தினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் காங்கிரஸ் மீது ஆத்திரமுற்றாலும் தமது வாக்கை அளிக்க மற்றொரு சிறுபான்மை ஆதரவு கட்சியான தேவகௌடாவின் ஜனதாதளம் (எஸ்) இருக்கிறது. எனினும் பி.ஜே.பி. கர்நாடகத்தை தனது வலுவான கோட்டையாக வளர்த்துக் கொண்டுள்ளது.

எனவே பி.ஜே.பி. இம்முறை கணிசமான ஆசனங்களை கர்நாடகாவில் பெறலாம் என்பது உண்மையே. மறுபுறம் கடந்த தேர்தலில் காங்கிரஸுக்கு வெற்றிதந்த மிகச் சில மாநிலங்களில் கர்நாடகமும் ஒன்று. ஆனால், இம்முறை அங்கு தோல்வியே கிட்டலாம்.



சந்திரபாபு நாயுடு

இந்தியாவின் ஆளும் பி.ஜே.பி கட்சிக்கு சற்றும் இடம் தராத ஒரே மாநிலம் என்ற பெருமைக்குரிய மாநிலம் கேரளா ஆகும். அங்குள்ள 20 லோக்சபா தொகுதிகளில் ஒன்றில் கூட பி.ஜே.பி. கடந்த காலங்களில் ஒருமுறை கூட வெல்லவில்லை. அவ்வளவு ஏன்? சட்டசபையில் கூட பி.ஜே.பி.க்கு ஒரு ஆசனமும் கிடையாது.

இந்தியாவின் அதிகூடிய கல்வி அறிவு மிகுந்த இம்மாநிலம் பி.ஜே.பியின் மதவாத பம்மாத்துக்களை அங்கீகரிக்கவில்லையோ

## பக்கத்து வீடு

என்னவோ இன்னமும் பி.ஜே.பிக்கு காலூன்ற முடியவில்லை. கேரளாவில் பிரதான போட்டி காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகளிடையேதான். கடந்தமுறை காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், இடதுசாரிகள் 11 தொகுதிகளிலும் வென்றன. இம்முறை காங்கிரஸ் ஆட்சியில் இருப்பதாலும் அக் கட்சியில் முதல்வர் அந்தன் — மூத்த தலைவர் கருணாகரன் ஆகியோருக்கு இடையேயான உட்கட்சிப் பிரச்சினை காரணமாகவும் காங்கிரஸுக்கு அவ்வளவு வெற்றி கிடையாது.

ஆனால், இடதுசாரிகள் வென்றாலும் அது பி.ஜே.பிக்கு உதவாது. எப்படியும் காங்கிரஸ் கூட்டணி அரசு ஒன்று அமைய பெரும்பான்மை மட்டுமட்டாக அமைந்தால் இடதுசாரிகள் காங்கிரஸ் அரசுக்கே ஆதரவளிப்பார்கள்.

-சுரேந்திரஜித்-



குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்

# ஆவணப்படுத்தல் ஒரு வரலாற்றுப் பணி

வரலாற்றுத் தரவுகளை ஆவணப்படுத்துவது என்பது இலேசான ஒரு காரியம் அல்ல. இது காலத்தின் கட்டாயம் அறிந்து மேற்கொள்ளப்படும் ஒரு புனிதப் பணி.

இந்தப் பணியை ஒரு தனி மனிதனாக நின்று கடந்த 45 வருடங்களாக மேற்கொண்டு வருபவர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்.

தரவுகளை ஆவணங்களாக சேகரிப்பதோடு இவர் நின்று விடவில்லை. அவற்றை இலத்திரன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ''மைக்குரோ பிலிம்'' என்ற முறை மூலம் ஆவணப்படுத்தி வருகிறார்.

''மைக்குரோ பிலிம்'' நீதித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறை ஆகும். இலத்திரனியல் தொழில்நுட்பம் பல்வேறுபட்ட பரிமாணங்களை எட்டிய போதும் ''மைக்குரோ பிலிம்'' முறை மாற்றமடையவில்லை. இதன் மூலம் பெறப்படும் ''பிலிம் நுண் சுருள்'' இன்றைய கணினி மயமாக்கலுக்கு ஏற்புடையதாகவே இருக்கிறது.

இந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே மேலை நாடுகள் தமது ஆவணப்படுத்தும் முறையை பேணி வருகின்றன. இந்த முறையை கைக்கொண்டு தமிழுலகுக்குப் பணியாற்றும் பெரும் கைங்கரியத்தை இரா.கனகரத்தினம் மேற்கொண்டிருப்பதும் பாராட்டுக்கும், வாழ்த்துக்கும் உரியது.

மைக்குரோ பிலிம் முறையில் ஆவணப்படுத்தல் என்பது 11 மில்லி மீற்றர் அல்லது 35 மில்லி மீற்றர் கமெராக்கள் மூலம் படமாக்கும் ஒரு முறை ஆகும்.

இதன் மூலம், பழைமை வாய்ந்த ஓலைகள், சுவடிகள், நூல்கள், சிற்றேடுகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை பதிவு செய்ய முடியும்.

இந்த கமராக்களுக்கு பயன்படுத்தப்படும் நுண்படச்சுருள்களில், 16 மில்லி மீற்றர் படச் சுருளில் 1,200 பக்கங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும். இதேபோன்று 35 மில்லி மீற்றர் படச்சுருளில் 600 பக்கங்களையும், புகைப்படப் பிரதிகளாக படமாக்க முடியும்.

இவ்வாறு படப்பிடிப்பு செய்யப்பட்ட நுண்படச் சுருளின் மூலநாடா எப்போதும் பிலிமாக இருக்கும். பிரதிபண்ணப்பட்ட நாடாக்களை இரசாயன மாற்றங்களுக்கு உட்படுத்தி அவற்றை நேர்த்தி செய்த பின்பு திரை மூலமாகப் பார்க்க முடியும்.

இதனை இயங்க விடுவதன் மூலம் விடயங்களை வாசிக்கவும், அந்த விடயங்களை பிரதி பண்ணவும் முடியும். இதனை மைக்குரோ பிலிம் முறையிலான மைக்குறோ றீடர் பிரின்டர் என அழைப்பார்கள்.

இந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்ட படச் சுருள்கள் இயற்கை அழிவு, வன்செயல் அழிவு, தீ, கறையான், எலி போன்றவற்றின் மூலமாக ஏற்படும் அழிவுகளில் இருந்து ஆவணங்களைப் பாதுகாக்க உதவுகின்றது.



சுவிட்சர்லாந்தில் உள்ள வரலாற்றுத் தரவுகளை ஆவணப்படுத்தும் காப்பகம்

இன்றைய நவீன கணினியுகத்தில் கூட இம்முறையில் ஆவணப்படுத்தப்பட்ட நுண் படச்சுருள் மூலமான விடயங்களை தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது.

தனது ஆவணப்படுத்தும் முயற்சிகள் ஊடாக நவீன கணினி தொழில்நுட்பத்தின் பரிமாற்றத்திற்குள் மைக்குரோ பிலிம் முறையை உட்படுத்தி வெற்றி கண்டுள்ளார் இரா. கனகரத்தினம்.

இவர் ஆவணப்படுத்திய மைக்குரோ பிலிம் முறையிலான விடயங்கள், நோர்வேயில், CD வடிவமாக வெளிவந்துள்ளன.

தனிமனிதனாக 45 ஆண்டுகள் கடுமையான முறையில் இவர் செயற்பட்டு வந்தமையால், ஈழத்தமிழர்களின் பல்லாயிரக்கணக்கான படைப்புகள் இன்று பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவரது இந்த ஆவணப்படுத்தல் பணி மூலமாக இதுவரை 1,000 சஞ்சிகைகளும், ஏடுகளும், 7,500க்கு மேற்பட்ட பல்துறை கட்டுரைகளும், 4,000 க்கும் மேற்பட்ட காட்டூன் சேகரிப்புகளும் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவரது இந்த ஆக்கபூர்வமான முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் தாம் வாழும் நாடுகளிலுள்ள நிறுவனங்களின் மூலமாக இவற்றை ஆவணப்படுத்த உதவ வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் இவர் ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே, சுவிஸ்போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்த போது அங்கு வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் இவரை செவ்வி கண்டன. பிரான்ஸில் இருந்து வெளிவரும்; முரசு இதழ் ஒரு நீளமான செவ்வியை வெளியிட்டது.

ஜேர்மன் நாட்டில் இவர் தனது பணி தொடர்பாக அங்குள்ள யுனெஸ்கோ அதிகாரிகளுடன் கலந்துரையாடி இந்த மைக்ரோ பிலிம்களை பிரதி எடுத்து அவற்றை பாதுகாப்பதற்கான ஏற்பாடொன்றையும் மேற்கொண்டிருக்கிறார்.

இதன் மூலம், இவரது 200 பிலிம்கள் அங்குள்ள தேசியச் சுவடிக் கூடத்தில் இதுவரை பாதுகாத்துவரப்படுகின்றன. இந்தப் பணியை உள்நாட்டில் முன்னெடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு யாழ். பொது நூலகமும், மட்டக்களப்பில் உள்ள ஒரு நிறுவனமும் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

''தமிழர்களுக்கு என ஒரு தேசிய காப்பகம் உருவாக்கப்பட வேண்டும், அதன் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு ஒரு காப்பரணாக அது திகழ வேண்டும்'' என்ற வரலாற்று இலட்சியத்தை கொண்டிருக்கும் குரும்பசிட்டி, இரா. கனகரத்தினம் தற்போது கண்டியில் வசித்து வருகின்றார்.

இந்த நீண்டகால நன்மை அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, தனது சொந்தச் செலவில் வழி நடத்திவரும் இவருக்கு பாரிய ஒத்துழைப்பு நல்க வேண்டிய அவசியம் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உள்ளது.

இவரது இப்பணியை அறிந்த நோர்வே நாட்டின் உதவி வழங்கும் நிறுவனமான ''நோராட் நிறுவனம்'' செலவின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டுள்ளது.

உலகெங்கிலும் வாழும் நாடுகளில் இவை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயரிய இலட்சியம் காரணமாக, இவர் தற்போது பிரதிநகல்களை உருவாக்கி வருகின்றார். இந்தப் பணிக்கு உதவ வேண்டும் என விரும்புவோரும், பிரதிகள் தேவைப்படுவோரும், 128 — 8, ஹெட்டியாவத்தை, முல்கம்பளை, கண்டி என்ற முகவரிக்கோ அல்லது 0094 — 822 33547 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

-நாச்சியூரான்-

யாழ்ப்பாணம்

# அபூர்வ தம்பதி



காதலுக்கு கண் இல்லை என்பார்களே! அது உண்மை தான் என்று நிரூபித்து இருக்கிறார்கள் ஜேசுசிவராஜ், ஜெவீன் மேரி என்ற இந்தத் தம்பதி.

திருச்சி, எடமலைப் பட்டிப் புதூரைச் சேர்ந்த இந்தத் தம்பதி ஜோடியாக வீதியில் காலை வைத்தாலே வருவோர் போவோர் பார்வையெல்லாம் இவர்கள் மீதுதான் நிலைக்கிறது. இவர்கள் இருவருக்குமிடையிலான உருவ வித்தியாசமே அவர்களை உற்றுப் பார்க்க வைக்கும் விஷயம்.

ஜெவீன் மேரி ஐந்தடி உயரம். சிவராஜோ மூன்றடி உயரம் தான். இருவருமே சுமார் 4 ஆண்டுகள் உயிருக்குயிராய் காதலித்து, பலத்த எதிர்ப்புக்களை எல்லாம் மீறித் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பது தான் வியக்க வைக்கும் இன்னோர் விடயம்.

இவர்களின் காதல் விடயமறிந்து பெண் வீட்டுக்காரர் ''குட்டையாளை கல்யாணம் செய்து விட்டு வாழ்க்கை முழுதும் கஷ்டப்படப் போகின்றாயா'' என்று கண்டித்து, வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்தனர். ஆனால், ''எனக்கு கல்யாணம் என்று ஒன்று நடந்தால் இவருடன் தான்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் ஜெவீன் மேரி. பின்பு, வீட்டை விட்டு வெளியேறி மணமுடித்துள்ளது இந்த காதல் ஜோடி.

ஜெவீன் கூறும் போது ''இன்று எனக்கு ஒரு குறையுமில்லை. இப்பவும் சில சமயங்களில் யாராவது எம்மை கேவலமாக பேசும் போது ஏன் இந்த மக்கள் இப்படி இருக்கிறார்கள் என்று மனதுக்குள்ளேயே அழுவேன். நாம் ஜோடியாக வெளியே போகும் போது யாராவது ஏதாவது சொல்லி மனசு கலங்கிவிடக் கூடாது என்பதற்காக இப்போது வெளியே போவதில்லை'' என்கிறார்.

''எங்களுக்கு திருமணம் முடிந்த பிறகு ஒரேயொரு தடவை வேளாங்கன்னி கோயிலுக்குப் போனோம். அப்போது மாதாவிடம் இந்த சந்தோஷத்தோடையே இந்த ஜென்மத்தை முடித்துவிடு தாயே, அடுத்த ஒரு ஜென்மம் இருந்தால் அதிலும்



இவர் தான் எனக்கு கணவராக வர வேண்டும் தாயே என்று தான் வேண்டிக் கொண்டேன்'' என்றார்.

இது தான் உண்மைக் காதல் போலும் என்று எண்ண வைக்கும் இவர்களது வாழ்க்கை உலகுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

சுருளி



# களைப்பும் திடீர் மயக்கமும் இருதயநோயின் அறிகுறியா?

**கேள்வி:— துருப்பிடித்த இரும்பு ஆணி காலில் குத்தியது. எனது நண்பர்கள் டெட்டனஸ் வந்து விடும் உடனே ஊசி போடு என்கின்றார்கள். துருப்பிடித்த ஆணியில் எவ்வாறு டெட்டனஸ் கிருமிகள் இருக்கும். விளக்க முடியுமா?**

பதில்:— டெட்டனஸ் (TETANUS) என்ற ஒரு பயங்கர நோய்க்கு காரணம் -CLOSTRIDIUMTETANI என்றபக்ரீரியாகிருமி. இந்தக்கிருமி —காற்றில்லாச் சூழ்நிலையில் வளர்ந்து பெருகும் தன்மையுடையது. இதனை ANAEROBIC பக்ரீரியா என்பர். ஆணியின் துருவில் இந்த கிருமி இருப்பதில்லை. ஆனால் ஆணி கிடந்த சூழலில் மண்ணில் இந்த கிருமிகள் இருந்து—அது ஆணியின் முனையில் ஒட்டியிருந்தால், ஆணி உங்கள் காலை குத்தும் போது ஆணியின் முனை பாதத்தின் உள்ளே சென்று—கிருமிகளை காற்றில்லாத சூழ் நிலையில் பொதித்து விடும். நீங்கள் ஆணியை இழந்த பின்னர் அக்கிருமிகள் தங்களுக்குகந்த சூழ்நிலையில் பல்கிப் பெருகி டெட்டனஸ் நோயைத் தரும். இந்த நோயின் போது இக்கிருமிகள் நரம்பு மண்டலத்தை தாக்குவதால் தசைகள் இயக்கமற்றுப் போகும். கழுத்தில் உள்ள தசைகள் இறுக்கமடைவதால் தாடை இயங்காமல் இறுகிவிடும். இதனால் TETANUS நோய்க்கு LOCKED JAW அல்லது வாய்ப்பூட்டு நோய் என்று இன்னொரு பெயருமுண்டு. சுவாசத்துக்கு உதவும் நெஞ்சு தசைகள் இயக்கமற்றுப் போவதால் மூச்சு எடுக்க முடியாமல் மரணம் கூட ஏற்படலாம். நோய் வந்த பின் சிகிச்சை பெற்றுத் தப்புவதைவிட, நோய் வராமல் தடுப்பூசி மருந்து TETANUS TOXOID போட்டுக் கொள்வது நல்லது. அதிகம் விலையில்லாத இந்த ஊசி மருந்து சிறுவர்களின் தடுப்பூசித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் காயங்கள் ஏற்படின் பாதையோர விபத்து காயங்கள் ஏற்படின், மற்றும் வயல் வெளியில் வேலை செய்யும் பண்ணை வேலையாட்கள், கமக்காரர்கள் —போன்றோர்—இந்த தடுப்பூசி மருந்தை போடுவது அவசியம்.

**கேள்வி:—எனக்கு 3 குழந்தைகள். வயது முறையே 12,8,4 வருஷங்கள். இவர்களுக்கு அடிக்கடி பூச்சிக்கு மருந்து கொடுக்க வேண்டியுள்ளது. அப்படிச் செய்யாவிடில் இரவில் மூலத்தில் சொறிவு, தலை குப்புற பின் புறத்தைத் தூக்கிக் கொண்டு படுத்தல், பசியின்மை, தூங்கும் போது பற்களைக் கடித்தல் என்று அவதிப் படுகின்றார்கள். அடிக்கடி பூச்சி மருந்து கொடுப்பது நல்லதா?**

பதில்:—சுகாதாரமான முறையில் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு வருடத்துக்கு ஒரு தடவை கொடுப்பதே தேவையற்றது. கண்டதையும் சாப்பிடும் நாய், பூனைகளுக்குத்தான் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பூச்சி மருந்து கொடுப்பார்கள். இரவில் பின் புறத்தில் குழந்தைகளுக்கு நமைச்சல் ஏற்பட்டால் THREAD WORM எனப்படும் தானப் புழு அவ்விடத்தில் சஞ்சரித்து முட்டைகள் இடுகின்றது என்பது உண்மை. இந்த முட்டைகள் படுக்கையில் விழுந்து ஒன்றாக இரவில் படுத்து தூங்கும். பெற்றோர், மற்றும் குழந்தைகள் கைகளில் பட்டு— பின்னர் வாய் வழியாக —குடலினுள்



போய்— பெருக ஆரம்பிக்கும். எனவே இப்படி சேர்ந்து வாழும் குடும்பங்களில்— குடும்ப அங்கத்தினர் சகலருமே — ஒரே வேளையில் பூச்சி மருந்து எடுக்கவேண்டும். பூச்சி மருந்தினால் பூச்சிகள் அழிந்தாலும் முட்டைகள் மூன்று வாரம் அழியாமல் இருக்கும். எனவே பூச்சி மருந்து எடுத்து மூன்று அல்லது நான்கு வாரத்தினுள் இன்னொரு தடவை பூச்சி மருந்து எடுப்பது அவசியம். வயிற்றில் தானப் பூச்சி எனப்படும் THREAD WORMS, PIN WORMS மற்றும் வட்டப்புழு எனப்படும் ROUND WORMS மற்றும் WHIP WORMS என்பன தொற்றுக்களாகும். இவை அனைத்து தொற்றுகளுக்கும் தற்பொழுது உபயோகப்படுத்தப்படும் மாத்திரைகள் MEBENDAZOLE, PYRANTEL PAOMATE, ALBENDAZOLE என்பன திறன் மிக்கவை. இவற்றில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம். இன்னொரு முக்கிய விடயம்—மூலத்தில் நமைச்சலைத் தவிர நீங்கள் கூறிய குப்புறப்படுத்தல், தூங்கும் போது பற்களை கடித்தல், பசியின்மை என்பவை வயிற்றில் பூச்சி இருப்பதற்குரிய குறிகள் அல்ல. சுறுசுறுப்பான ACTIVE குழந்தைகள் தமது தூக்கத்தில் பற்களை கடித்தல், குப்புறப்படுத்தல் போன்ற செயல்களை புரியும். சுத்தமான உணவு, சுகாதார பழக்க வழக்கங்கள் என்பவை பூச்சிகள், புழுக்கள் வயிற்றில் வளர இடம் தரா. முக்கியமாக கீரை வகைகள் பச்சை காய்கறி வகைகளை நன்றாக ஒன்றுக்கு இரு தடவை ஓடும் நீரில் கழுவுவது, கொஞ்சம் உப்புகலந்து நீரில் குறைந்தது 1/2 மணி நேரம் ஊற வைப்பது, அவற்றில் உள்ள பூச்சி புழுக்கள் முட்டைகளை அழிக்கும்.

**கேள்வி:—எனக்கு வயது 70. ஆண். கடந்த பல மாதங்களாக நடந்தால் களைப்பு, திடீரென்று மயக்கம் வருகிறது. இவை ஏற்படுவது வயதினால் என்றிருந்தேன். பிள்ளைகளின் தூண்டுதலால் வைத்திய ஆலோசனை கேட்கச் சென்றேன். எனது இருதயம் பெருத்திருப்பதாகவும்—அதனால் இதயத்துடிப்பு வெகுவாக—நிமிடத்திற்கு 48 தடவைதான் துடிப்பதாகவும்—கண்டறிந்தார்கள். இன்னும் பல பரி சோதனைகளுக்காக வரச்சொல்லி இருக்கின்றார்கள். சிலவேளை PACE MAKER பொருந்த வேண்டும் என்கின்றார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விளக்கம் தருவீர்களா?**

பதில்:—வயது ஆக ஆக இருதயம் பெருப்பதும் உண்டு. இது தவிர இரத்த அழுத்தம் — மாரடைப்பு என்பனவற்றாலும் இருதயம் பெருப்பது (ENLARGEMENT OF HEART) உண்டு. இதனால் இருதயத்துடிப்பை கட்டுப்படுத்தும் SINUS NODE என்கின்ற பகுதி பாதிப்படைந்து—இருதயத்துடிப்பு குறைவதுண்டு. இதனை SICK SINUS SYNDROME என்று அழைப்பர். இதனை நிதானிக்க ஒரு நாள் மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு—ECG, X-RAY, 2D ECHO CARDIOGRAM என்ற பரிசோதனைகளை செய்ய வேண்டும். ECG இதய துடிப்பு—இதய தசைகளில் கடத்தும் முறைகளில் உள்ள பிழைகளையும், X-RAY இதயம் பெருத்திருப்பதன் அளவையும்—ECHO இதய பெருத்தலில் சரியான அளவு, இதய தொழிற்பாட்டின் பெறுபேறுகளையும் அறிய உதவும். இதன் பின்னர் HOLTER MONITORING என்ற பரிசோதனை நடைபெறும். இதில் இதய துடிப்பை அளவிடும் சிறிய கருவியை உங்கள் நெஞ்சில் எதுவித சத்திர சிகிச்சையும் இல்லாமல் வெளியே பொருத்தி வீட்டிற்கு செல்ல அனுமதிப்பார்கள். இது 24 மணி நேரம் உங்கள் இதயத் துடிப்பைப் பதிவு செய்யும். இதன் பின்னர் கம்பியூட்டர் உதவியுடன் பகுப்பாய்வு செய்து உங்கள் மருத்துவ சிகிச்சையை தீர்மானிப்பார்கள். பாதிப்பு ஆரம்பகால நிலை என்றால் மருந்துகள் மூலம் சிகிச்கை அளிப்பார்கள். பாதிப்பு அதிகமாக இருந்தால்—அல்லது மருந்துகளால் குணம் தெரியாவிடில் PACE MAKER என்ற இதயத் துடிப்பை க் கட்டுப்படுத்தும் சிறிய கருவி ஒன்றை நெஞ்சத் தசையில் சிறு சத்திர சிகிச்சை மூலம் பொருத்தி அதன் முனைகளை இதயத் தசையில் பொருத்துவார்கள். இது OPD அறையிலே செய்யும் சிறு சத்திரசிகிச்சை. இதன் பின்னர் இதயத்துடிப்பு இந்த செயற்கை PACE MAKER மூலமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். எனக்குத் தெரிந்த உங்களைப் போல் வயதானவர்கள் இந்த PACE MAKER உதவியுடன் பல ஆண்டுகளாக சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து வருவதை அறிந்துள்ளேன். நீங்களும் பயமின்றி இந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம். கொழும்பு அரச மருத்துவ மனை— இதய சிகிச்சைப் பிரிவில் இந்த சிகிச்சையை இலவசமாக தருகிறார்கள். தனியார் மருத்துவ மனையில் இந்த பரிசோதனைகள், சிகிச்சை என்பனவற்றுக்கு குறைந்தது இரண்டு லட்சம் ரூபா செலவாகலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | எம்.ரீவி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | ஹொலிவூட் திரைப்படம் | நகைச்சுவை நேரம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி, (9.15–9.45) பாண்டவர்கள் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | (9.45–10.00) குட்டி சுட்டி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | டொப் 10 மூவிஸ் |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சொய்ஸ் | சின்னசின் ஆசைகள் |
| 12.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ரிலாக்ஸ்டைம் | சின்னசின் ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | (மகளிர் மட்டும்) | (அழகி) |
| 2.00 | சக்தி மேட்னி | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | (மங்கையர் நிகழ்ச்சி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | மன்னன் | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | (மகளிர்தின சிறப்பு திரைப்படம்) | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விவரண சித்திரம் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | (4.55–5.00) விக்கிரமாதித்தன், அன்பு மடல் | இசை நிகழ்ச்சி |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | வீக் என்ட் மூவி | ஒப்போடு |
| 5.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத்தென்றல் | வீக் என்ட் மூவி | இப்படிக்கு நீங்கள் |
| 6.00—6.15 | பெப்சி உங்கள் சொய்ஸ் | இசைநிகழ்ச்சி | ஒப்போடு | 6.00 பாடல்கள்/6.15 இளந்தளிர் | திரை வானம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சகதி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செயதிகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | விசேட நிகழ்ச்சி |

# குழந்தை முகம் அவளுடையது



அமெரிக்கா, கோடஸ்விலை, பென்சில் வேனியா. 1937 பெப்ரவரி 11 மாலை நேரம் 3.30 மணி இருக்கும்.

மாணவிகள்கள் பாடசாலையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர். அவன் பல மாணவிகளைக் கடந்து சென்றான். ஆட்கள் வீதியில் இருந்ததால் அவனால் எதுவும் செய்ய முடியாமல் போனது. ஆட்கள் இல்லாத நேரங்களில் சாலையில் வாகனங் களும் குறுக்கிட்டு விடும்.

அப்படி இருக்கையில், தூரத்தில் ஒரு மாணவி... தனிமையில். வீதியிலும் எவரும் இல்லை. சட்டென்று தனது ஜப்பை அவள் மீது மோதவைத்தான். அவள் ரோட்டில் விழுந்து கிடந்தாள். ஜீப்பில் இருந்து குதித்து மயங்கிக் கிடந்தவளை தூக்கி ஜீப்பினுள் போட்டான்.

ஜீப் விரைகிறது. அது எவருமற்றதோட்ட வளவுக்குள் நுழைகிறது. மயங்கியவளை உள்ளே கொண்டு போனான். மல்லாக்காக வழத்தினான். உடம்பு மலர்ந்து கிடந்தது. ஆசை தீருமட்டும் அவளை அள்ளிப் பருகி தனது இச்சையைத் தீர்த்துக்கொண்டான். அவ ளின் வெறும் உடம்பை தொர தொரவென இழுத்துக்கொண்டு கிணற்றடிக்குப் போய் வலதும் இடதுமாக பார்த்துவிட்டு தொப் பென்று உள்ளே வீசினான். பின்பு வீட் டுக்குச் சென்று இராச்சாப்பாட்டை மொத்தி னான்.

இரண்டு நாட்களின் பின்பு அதே தோட்டத் துக்கு வந்தான். கையில் டைனமைட் வெடி குண்டு இருந்தது. அதைக் கிணற்றினுள் வீசினான். வெடித்தது. உள்ளே கிடந்த சடலத் தின் அரைவாசியை, வெடித்துச் சிதறியவை மூடின.

16 வயதான ஹெலன் மோயர் எனும்



பள்ளி மாணவியை தேடிய பொலிஸார் முதலில் குழம்பித் தான் போனார்கள். அவ ளின் பாதணிகளையும் புத்தகப் பையையும் அவள் மோதுண்ட இடத்திலே கண்டெடுத் தனர். பாதணிகள் உருவி வீசப்பட்டுக் கிடந் தன. வாகமொன்றின் முன் பக்கக் கண் ணாடி நொருங்கியதால் ஏற்பட்ட சிதறல்கள் வீதியில் காணப்பட்டன. இத்தடயங்கள் மோதி விட்டு வாகன ஓட்டி ஓடியதைச் சொல்லின. சரி, அப்படியென்றால் அவள் எங்கே?

ஹெலன்மோயரின் அயல்வீட்டுக்காரியான 15 வயது மதிக்கத்தக்க மற்றொரு பாடசாலை மாணவி, பொலிஸாரி டம் தகவல் தெரிவிக்க முன் வந்தாள். ஆறு நாட்களுக்கு முன்னர் தனக்கு ஏற்பட்ட அனு பவத்தை அவள் பொலி ஸிடம் கூறினாள்.

''பச்சை ஜீப்பில் வந்த வாலிபன் ஒரு வன் வழியில் ஜீப்பை நிறுத்தி என்னை ஏறச் சொன்னான். நானும் மறுக்காமல் ஏறிக் கொண்டேன். அவன் ஜீப்புக்குள் என்னை இழுத்து படுக்கவைத்து எனது உடைகளைக் களைய முயன்றான். அவனை உதறிவிட்டு ஒரு மாதிரியாகப் பாய்ந்து வெளியே வந்துவிட்டேன்'' என் றாள்.

**பச்சை அடையாளம்**

ஹெலனை ஜீப்பில் கொண்டு போகும் வழியிலே ஜீப் தொலைத் தொடர்புக் கட்டை யில் மோதுண்டு தப்பி ஓடியது. அப்போது ஜீப் உரசப்பட்டதால் கட்டையில் பச்சை அப்பி இருந்தது. அதே பச்சை தான் வீதியில் கிடந்த பாதணியிலும் பட்டிருந்தது.

பொலிஸுக்கு இது போதும். மோப்பம் பிடித்தனர். பச்சை ஜீப் வைத்திருந்த எல் லோரையும் விரசி விரசி விசாரித்தனர். கடைசியில் 20 வயதான அலெக்ஸாந்தர் மேயர் என்பவன் அந்த ஜீப்புக்கு சொந்தக் காரனாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், இரண்டு பெண் பிள்ளைகளை அவன் ஜீப்பினால் மோதி இருந்தான். அதனால், காலவரையறை யற்ற சிறைவாசம் அவன் மீது விதிக்கப்பட்டி ருந்தது. பின்பு சொற்ப காலமாக தலைமறை வாகி இருந்தான். அவன் பற்றிய மருத்துவ அறிக்கையில், அவனுக்கு உள்ளது ஓர் உள வியல் சம்பந்தமான வியாதி என்று தெரிவிக் கப்பட்டது. இந்த வியாதிக்கு உள்ளாகிறார் கள் ஆவேசத்துக்கு உட்படுவதால் அவர்களை இவ்வாறு ஈடுபட வைக்கும் என்று அறிக்கை யில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேயர் கைது செய்யப்பட்டான். கேள்விக ளுக்கு உட்படுத்தப்பட்டான். ஆரம்பத்தில் ''இல்லை, இல்லை நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை'' என்று அடம் பிடித்தவன் பின்பு ஒப்புக்கொண்டான். பொலிஸாரை கிணற்றடிக்கு கூட்டிச் சென்றான். கிணற்றைச் சுற்றி பொலிஸார் மொய்த்து நின்றனர். தலையை எட்டி கிணற்றினுள் பார்த்தான். சடலம் மிதந்தது.

கிணற்றில் வீசப்படும் போது மாணவி உயிரோடு தான் இருந்திருக்கிறாள். நீரில் மூழ்கித் தான் உயிர் துறந்திருக்கிறாள் என்று மருத்துவ அறிக்கை தெரிவித்தது.

1937 ஏப்ரலில் மேயர் மின்சாரக் கதிரை வேதனை அனுபவித்தான். கோடஸ்விலை இன்னும் 'குழந்தை முகத்தை' நினைவு கூருகிறது.

**கா.நிகிலன்**

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' மார்ச் 15 முதல் 21 வரை**

**பொ. சந்திரன்**

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | சுக்கிரன் ராகு | செவ்வாய் | சனி |
| | செவ்வாய் ரோகிணி சந்திரன்<br>புதன் ரேவதி புதன்<br>குரு பூரம் சுக்கிரன் | | |
| | சுக்கிரன் கார்த்திகை சூரியன்<br>சனி திருவாதிரை ராகு<br>சூரியன உத்திரட்டாதி சனி | | குரு |
| | | கேது | |

பங்குனி 08 முதல் பங்குனி 14 வரை

சந்திரன் மீனம் முதல் இடபம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசி நாதன் செவ்வாய் இரண்டில் இருப்பது விசேஷம். மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் செயற்படு வது சிறப்புடையது. எடுத்த முயற்சி கைகூடும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராகு, கேதுக்களின் தொடர்பு இருப் பதால் மன அமைதி பாதிக்கலாம். (2,7) உரிய சுக்கிரன் ராசியில் அதாவது சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள்பரிவர்த்தனம் அடைவதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழிலுக்குரிய கிரகம் சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ஐந்தாம், 12ஆம் கிரகங்கள் முறையே சூரியன், குரு ஆகிய கிரகங்கள் பரிவர்த்தனம் அடைவது நல்லது.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லதல்ல. ஆனால் சூரியனின் நட்சத்திர சாரத்தில் செயற்படுவது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய புதன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 4க்குரிய சூரியன் 11இல். 11க்குரிய குரு 4இல் பரிவர்த்தனம் அடைவது வீடு, வாகனம் லாபம் தரும். நண் பர்கள் உதவுவர். மூத்த சகோதரர்கள் நல்லாயிருப்பர். (7,12) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் திருமண பலன் உண்டு குடும் பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் பத்தில் இருப்பது விசேஷம். மேலும் தன் சொந்த நட்சத்திர சாரத்தில் இருப்பது பலம் அதிகம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாக னம் லாபம் தரும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத் தில் அமைதி இருக்காது . தொழில்துறையில் முன் னேற்றம் இருக்காது. ஆனால் சூரியன், புதன் பத்தில் இணைவு நன்மை பயத்தாலும் ராசியில் உள்ள சனி, குரு ஏழாம் பத்தாம் வீடுகளைப் பார்ப்பதால் தடை, அரச தண்டனை போன்ற பின்னடைவு வர வாய்ப்புண்டு. மன அமைதியும் பாதிக்க லாம். ஐந்துக்குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் பூர்வ புண்ணிய பலன் நலன் தரும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மீனம் முதல் இடபம் வரை அதாவது 9ஆம் வீடு முதல் 11ஆம் வீடு வரை சஞ்சாரிப்பது நலம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டுக் குரியவர் 9இலும் ஒன்பதுக்குரியவர் இரண்டி லும் பரிவர்த்தனம் அமைவதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நன்று. 7க்குரிய சனி 12இல் இருந்தாலும் இரண்டில் குரு இருப்பதால் திருமண முயற்சி பலன் தரும். 4க்கு ரிய சுக்கிரன் பத்தில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10க் குரிய செவ்வாய் 11இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். ராசி எந்தத் தீய கிரகங்களாலும் பாதிக்கப்படாமல் இருப்பது நல்ல பலனைத் தரும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**

ராசிநாதன் சூரியன் எட்டில் புதனோடு இருப்பது நல்லது என சாதக அலங்கார சோதிட நூல் சொல்லும். ஆனால் சனியின் நட் சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பல்ல. எடுத்த முயற்சி தாமதமா னாலும் நிறைவேறும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 11) உரிய புதன் எட் டில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்புண்டு. மூத்த சகோதரர்கள் விலகியிருக் கக் கூடும். (4,9) உரிய செவ் வாய் 10இல் இருப்பதால் வீடு, வாகனம் வாங்க விற்க ஏற்ற நேரம். பெற்றோர் நலம். 7க்குரிய சனி 11இல் இருப் பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். இருப்பினும் ராசி யில் குரு இருப்பது திரு மண வாய்ப்பைப் பாதிக்க லாம். 10க்குரிய சூரியன் 9இல் இருப்பது தொழில் துறை முன்னேறும். சனி இராசியைப் பார்ப்பது நல்லதல்ல.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் சூரியனோடு இருப்பது நல்லது. மேலும் புதன் தன் சொந்த நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்புடையது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறை முன்னேறும். அரச உதவி கிடைக்கலாம். (2,9) உரிய சுக்கிரன் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. (4,7) உரிய குரு 12இல் மறைவது வீடு, வாகன செலவை ஏற்படுத்தலாம். திருமண முயற்சி பாதிக் கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. சனியின் பார்வை 4ஆம், 7ஆம் வீடுகளைப் பார்ப்பதால் பிரச் சினைகள் தலை தூக்கலாம். குரு, சுக்கிரன் இருவரும் மறைவதால் சமாளிப்பது கஷ்டம். சுக்கிரன் ஆகிய கிரகங்கள் ராசியை பார்ப்பதால் ஓரளவு ஆறுதல் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் ஏழில் இருப்பது சிறப்புடையது. மேலும் சூரியனின் நட்சத்திர சாரத்தில் செயற்படுவது நல்லது. ஆனால் ராகு, கேதுக்களின் தொடர்பு சரியில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு (2,7) உரிய செவ் வாய் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 4க்குரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாக னம் லாபம் தரும். 10ஆம் வீடு தீய கிரகங்களால் தாக்கப் படாமையால் தொழில்துறை முன்னேறும். சுக்கிரனும், குருவும் நல்ல அமைப்பில் இருப்பதால் பல நல்ல பலனை எதிர்பார்க்கலாம். 6ஆம் 11ஆம் இடங்களும் 7ஆம், 8ஆம் இடங்களும் பரிவர்த்தனப்பட்டாலும் பெரிதாக நன்மை இல்லை.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 7இல் இருப்பது சிறப்புடையது. மேலும் சந்திரன் நட்சத்திர சாரத்தில் செயற்படுவது நல்லது. எடுத்த முயற் சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரங்கள் பகை கொள்ளலாம். (7,12) உரிய சுக்கிரன் 6இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. சயன சுகம் குறையலாம். 10க்குரி சூரியன் 5இல் அதாவது சூரியன், குரு பரிவர்த்தனம் தொழில் துறை முன்னேறும். அதிஷ்டம் இருக் கும். பூர்வீக சொத்து சேரலாம். அதிகாரம் அல்லது தலைமைப் பதவி கிடைக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

உரிய குரு பாக்கியத்தானமான 9ஆம் வீட்டில் இருப்பது விசே ஷம். மேலும் சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப் புடையது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக் கியம் உண்டு. புண்ணியத் தலங்களுக்கு போகிற வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் வாங்கப் பலன் உண்டு. மேலும் 9க்குரிய சூரியன் 4இல் குரு, சூரியன் பரிவர்த்தனம் அடைவதால் பெற்றோர் நலம், அதிஷ்டம் உண்டு. மூதாதையர் சொத்து சேரும். இரண்டுக் குரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரி புதன் 4இல் இருப்பதால் திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழில் துறை முன் னேறும். குரு பின்னோக்கி நகர்வதும் சனி குருவைப் பார்ப்பதும் பின்னடைவுகள் வர வாய்ப்பு உண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம் அவிட்டம் 1,**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது பரவாயில்லை. ஆனால் சனி ராகுவின் நட்சத்திர சாரத்தில் நகர்வது அவ்வளவு நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு தாமதமாகும். கையில் பணம் இருக் காது. (4,11) உரிய செவ்வாய் 5இல் இருப்பது மத்திம பலன். ஆனால் (5,10) உரிய சுக்கிரன் 4இல் பரிவர்த்தனம் அடைவது சிறப்பானது. வீடு, வாகனம் லாபம் தரும். தொழில்துறை முன்னேறும். பூர்வீக சொத்து சேரும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நண்பர்கள் விசு வாசமாக இருப்பர். 7ஆம் வீடு சுத்தமாக இருந்தாலும் குரு 8இல் மறை வதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். குருவை சனி செவ்வாய் நோக்குவது நல்லதல்ல.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,2) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திர சாரத்தில் செயற்படுவது சரியல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். ஆனால் ராசியைக் குரு பார்ப்பதால் எல்லாப் பிரச்சினைகளும் வில கும். (2,11) உரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் உதவுவர். மூத்த சகோதரங்களுக்கு நல்லது. 7க்குரிய சூரியன் 2இல் இருப்பது பரிவர்த்தனம். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். (4,9) உரிய சுக்கிரன் 3இல் இருப்பது பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தொழிலுக்குரிய செவ்வாய் 4இல் இருப்பதால் தொழில்துறை முன் னேறும். சூரியன், புதன் 2இல் இணைவதால் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

**மீனம்: பூரட்டாதியில். உத்தரட்டாதி.**

(1,10) உரிய குரு 6இல் (6ஆம் இடம்) இருப்பது கூடாது. மேலும் வக்கிர கதியில் இருப்பதும் கூடாது. ஆனால் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில்துறை யில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. கடன் தொல்லையும் இருக் கும். (2,9) உரிய செவ்வாய் 3இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. (4,7) உரிய புதன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். ஆனால் குரு சுகம் குறைவதால் காலதாமதம் ஆகலாம். ஆனால் சுக்கிரனின் இருப்பும் பார்வையும் நல்ல பலனைத் தரும்.

# முத்தத்தில் தப்பில்லை

விருமாண்டி படத்தில் இடம் பெற்ற முத்தக்காட்சி பற்றி நடிகை அபிராமி முத்தாக சில வார்த்தைகள் உதிர்த்தார்:—

இந்தப் படத்தில் முத்தக் காட்சி இருக்கா இல்லையான்னு கூட கமல் சார் என்கிட்ட முதல்ல சொல்லவே இல்லை. நான் அதைப் பற்றி கவலைப்படவும் இல்லை. அது குறித்துக் கேட்கவும் இல்லை. ஏனெனில் முத்தம் கொடுப்பதை நான் பெரிய விடயமாக நினைக்கவில்லை. ஏன்னா— அவர் ரோட்டுல போற பொண்ணை இழுத்து வைச்சு 'கிஸ்' பண்ண மாட்டார். ஒண்ணு 'மனைவி' யாக இருக்கணும். அல்லது கேர்ள்பிரண்டாக இருக்கணும். அவர்களிடையே முத்தம் நடப்பது ரொம்ப சகஜம்தான். தினசரி நம்ம வாழ்க்கையில நடக்கிறதுதான். பாருங்க ஒரு படத்துல குளிக்கிற சீன்ல பாவாடை கட்டிக்கிட்டு நடிக்கின்றோம் தானே? அது பெரிய விஷமில்லை. ஒரு பார்ட்டிக்கு போறோம்னா அங்கே டிரஸ் ஒருமாடலா கொஞ்சம் கிளாமரா இருக்கும். அதுவும் பெரிய விஷயமில்லை. அதே மாதிரி ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிற ஆணும், பெண்ணும் முத்தமிட்டுக் கொள்வது இயல்பான விஷயம்தான். இவைகளுக்கு எல்லாம் முன் அனுமதி எடுப்பதுதான் தப்பு. அத்தோடு நடிப்புத் தொழில் என்றால் "நான் அதைப் பண்ண மாட்டேன் இதைப்பண்ணமாட்டேன்" என்று எதையுமே சொல்லக்கூடாது. நடிக்க வந்து விட்டோம். அந்தக் கதைக்கு எது தேவையோ அதுக்குத் தயாராகத்தான் இருக்கணும். இல்லேன்னா நடிக்கவே வரக்கூடாது.

மேலும் அவர் கூறுகையில்:—

இந்தப் படத்திற்குப் பிறகு ஏகப்பட்ட பட வாய்ப்புகள் என்னைத் தேடி வருகின்றன. இப்போது கதைகள் தேர்வு செய்து கொண்டிருக்கிறேன். இப்படி எல்லாத்துக்கும் தயார் என்றால் ஏகப்பட்ட வாய்ப்புக்கள் வரத்தானே செய்யும்.

# சிம்ரன் புதிய உடன்படிக்கை

நடிகை சிம்ரன் திருமணத்துக்குப்பிறகு சினிமாவுக்கு முழுக்குப்போட்டார். கணவர் தீபக்குடன் மும்பையில் அவர் வசிக்கிறார்.

விஜய், சிம்ரன் ஜோடியாக நடித்த "உதயா"படம் முடியும் நிலையில் உள்ளது. இந்தப்படத்தில் இரு பாடல் காட்சிகள் பாக்கி உள்ளன. அதை சிம்ரன் முடித்துத்தர படத்தின் தயாரிப்பாளர்பிரமிட் நடராஜன் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, "உதயா" படத்தில் சிம்ரன் நடிக்க உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து "உதயா" படத்தில் நடிக்க சிம்ரன், கணவர் தீபக்குடன் சென்னை வந்தார்.

சிம்ரன் நடித்த பாடல் காட்சி கிண்டி "கேம்ப கோலோ" மைதானத்தில் படமாக்கப்பட்டது. திருமண வீட்டில் விஜய்யுடன் சிம்ரன் நடனம் ஆடுவது போன்ற காட்சி படமாக்கப்பட்டது. இதில் 50 நடன கலைஞர்கள் பங்கேற்றனர்.

நடனம் ஆடும் முன்பாக சக நடிகர்களை சிம்ரன் நலம் விசாரித்தார். பாடல் காட்சி படமானதை சிம்ரன் கணவர் அருகில் உட்கார்ந்து பாரத்து ரசித்தார்.

முன்னதாக சிம்ரன் நிருபர்களிடம் கூறும்போது, "சினிமாவில் மீண்டும் நடிக்க ஆசை இருக்கிறது. எப்போது நடிப்பேன் என்று சொல்ல முடியாது" என்றார்.

படத்தின் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன் கூறும்போது, "நானும் தயாரிப்பாளர் முரளிதரனும் சிம்ரனுடன் பேசியதைத் தொடர்ந்து நல்லெண்ண அடிப்படையில் வந்து படத்தில் நடிக்கிறார்" என்றார்.

குஷ்புன்னா 'ஈர்ப்பு சக்தி'ன்னு அர்த்தம் பே
இருக்கும் வரை ரசிகர்களை தன் பக்கம் வைத்திருந்த
மக்களையும் தன் பக்கம் வைத்திருக்கிறார். டான்லா
நடத்திய விழாவில் குஷ்பு போட்ட ஆட்டம் இருக்கே
எவர்கிரீன்தான் போங்க... நடனத்தில் இன்னும் நள
அசைவுகளையும், துள்ளிக் குதிக்கும் துடுக்குத்த

முடிந்தது". இதெல்லாத்தையும் விடுங்க. குஷ்பூவுக்
திறமையும் உண்டுங்க. ஆமாம். இவர் எழுதிய கதை

தமிழ் நாட்டின் வடக்கே மாலினிஐயர்' என்ற பெ
கலக்குகிறார். தெற்கே 'கல்கி' பெயரில் குஷ்பூவா?

கலக்குங்க அம்மணிளா...!



விஜய்

# சினிமாவில் இனி அது இல்லை

திரைப்படங்களில் ஆபாச வசனங்களோடு, அது தொடர்பான காட்சிகளும் சேர்ந்தே நீக்கப்படும். பாடல்களுக்கு முன் அனுமதிபெறும் முறையும் அமுல்படுத்தப்படும் என்று சென்னை மண்டல தணிக்கைக் குழுத் தலைவர் எஸ்வி.சேகர் தெரிவித்தார்.

சேலத்தில் நிருபர்களிடம் அவர்கூறியதாவது:—

தமிழகத்தில் சினிமா தணிக்கைக்கு புதிய விதிமுறைகள் அமுல்படுத்தப்படும். ஆபாச வசனங்கள், காட்சிகள் இடம்பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது, ஆபாச வசனங்கள் நீக்கப்படும்போது, காட்சிகள் மட்டுமே மௌனமாக இடம்பெறுகின்றன. இனி ஆபாச வசனத்தோடு, சம்பந்தப்பட்ட காட்சியும் வெட்டப்படும்.

தணிக்கைக்குழு நீக்கிய காட்சிகள் தொலைக்காட்சிகளிலோ, விளம்பரங்களிலோ, டிரெய்லர்களிலோ இடம் பெறக் கூடாது. கசட் வெளியிட்டுக்கு முன்னரே, பாடல்ளையும் தணிக்கை செய்முறையை அமுல்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்படுகின்றது.

தமிழகத்தில்தயாரிக்கப்படும் படங்களுக்கு, வெளி மாநிலங்களில் தணிக்கைச் சான்றிதழ் வாங்கும் நிலை இருந்தது. இனி இம்முறையைப் பின்பற்ற முடியாது. இங்கு தயாரிக்கப்படும் படங்களை, தமிழகத்தில்தான் தணிக்கைசெய்ய வேண்டும். சங்கரின் 'பாய்ஸ்' படம் வெளிமாநிலத்தில் தணிக்கை பெற்றிருந்தும், ஆபாசம் காரணமாக மக்கள் அதனைப் புறக்கணித்தனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் தணிக்கை முறை அவசியம். வரவேற்பறையில் பார்க்கும் நிகழ்ச்சிகளில், படுக்கையறைக் காட்சிகள் இடம் பெறுவது சமூகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். —என்றார்.



பிரஷாந்த்



ஜோதிகா



ரீமா செ

### அனிதா

வருஷமெல்லாம் வசந்தம் படத்தில் குணால் ஜோடியாக அறிமுகமான அனிதா 'சாமுராய்' யில் விக்ரமுடன் டூயட் பாடியும் அவர் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. பிறகு அம்மணி தெலுங்கு, கன்னட தேசங்களில் ஒரு சில படங்களில் நடித்தார். இப்போது ஹிந்தியில் பிஸியாக இருக்கிறாராம்.

### ஸ்ருதிகா


மறைந்த பிரபல நகைச்சுவை நடிகர் தேங்காய் ஸ்ரீநிவாசன் பேத்தி என்ற முத்திரையுடன் அறிமுகமானவர் ஸ்ருதிகா. முதல் படமே சூர்யாவுடன் 'ஸ்ரீ'. கவர்ச்சியைக் குறைக்கவில்லை என்றாலும் நடிப்பில் தேர்ச்சி இல்லாததால் ஜீவாவுடன் 'தித்திக்குதே'யில் இணைந்தும் பயனில்லை. நடிப்புக்காக படிப்பை விட்டவர் மீண்டும் படிக்கச் சென்றிருப்பதாகத் தகவல்.

ர்த்தம் போல! சினிமாவில்
த்திருந்தவர் இப்போது டி.வி.
பான்ஸர்ஸ் அசோஸியேஷன்
இருக்கே... ''யப்பா.. குஷ்பு
ன்னும் நளினம் மாறாத அதே
டுக்குத்தனத்தையும் பார்க்க

## றார் குஷ்பு

குஷ்பூவுக்கு கதை எழுதும்
ழுதிய கதைதான் 'கல்கி'.
என்ற பெயரில் ஸ்ரீதேவி
ஷ்பூவா?

# அஜித் - விஜய் விசேஷ பார்வை



தமிழ் சினிமாவை எப்போதுமே ''இரண்டு ஹீரோக்கள் கலக்கிக் கொண்டிருப்பார்கள்.எம்.ஜி.ஆர் – சிவாஜி, ரஜினி—கமல்.... என அந்தப் பட்டியலில் சமீப காலமாக அஜித்தும், விஜய்யும்.

முன்பெல்லாம் விஜய்யும், அஜீத்தும் நெருங்கிப் பழகின மாதிரித்தான் இருந்தார்கள். இப்போதுஎப்படியோ மறைமுகமான விமர்சனங்கள் தொடர்ந்து நடந்த வண்ணமாகத்தான் இருக்கின்றன. உதாரணம் யார்நம்பர் வன் என்கிற சர்ச்சை.

விஜய்யை பொறுத்தவரை அவரது நடிப்புத் துறைக்கு அப்பா சந்திரசேகரன், அம்மா ஷோபா சந்திரசேகர் என பின்னணி பலம் இருக்கிறது.ஆனால் அஜீத்துக்கு அப்படி இல்லை. தனது சொந்தக்காலில் உழைத்து முன்னேறியவர்.

நாளைய தீர்ப்பு, ரசிகன், தேவா, விஷ்ணு எனப்பல படங்களில் நடித்து அவை சுப்பர் ஹிட் ஆகாத பட்சத்தில் விஜய்யும் ஆரம்ப காலங்களில் ரொம்பவே போராடியிருக்கிறார்.

பூவே உனக்காக, லவ் டுடே, காதலுக்கு மரியாதை, பிரியமானவளே, குஷி எனப் பின்னர் தொடர்ச்சியாக வெற்றிக்களம் காண ஆரம்பித்தார்.

நடிப்பில் பார்த்தால் கூட விஜய் கிட்டத்தட்ட ரஜனி சாயல். அஜீத் சற்று ஏறக்குறைய கமல் சாயல்.

விஜய் புதுமையான கேரக்டர்கள் எதையும் செய்ய நினைக்க மாட்டார். தயாரிப்பாளருக்கு லாபம் தரும்படியான கமர்ஷியல் படம் என்பது தான் விஜய்யின் பாலிசி.

அஜீத்தோ நிறைய ''ரிஸ்க்'' எடுக்க நினைப்பார். கேரக்டர்களை மாற்றத் துடிப்பார்.வாலி, சிட்டிசன், வில்லன் என படத்துக்குப்படம் அஜீத்திடம் மாற்றம் தெரியும்.

நடிப்பில் விஜய்யின் காதல்தனம் அதிகம் இருக்கும். அஜீத்திடம் ஆக்ஷன் பிரளயம் இருக்கும்.

காதல் விஷயத்தில மட்டும் இருவரும் ஒரே டைப். விஜய் சங்கீதாவையும், அஜீத் ஷாலினியையும் காதலித்து திருமணம் செய்துகொண்டவர்கள்.

இதே வேளையில் ரசிகர்களைப் பொறுத்தவரை இருவரும் முன்னுக்குப்பின் முரணானவர்கள்,

விஜய் தனது ரசிகர்களையும், மன்றங்களையும் பெருமளவு ஆதரிப்பவர். அவ்வப்போது அவர்கள் மத்தியில் தோன்றி உற்சாகம் ஏற்படுத்துவார்.

அஜீத் ரசிகர் மன்ற விஷயத்தில் பின்னடைவு தான். அவரே சொல்வார் ''படம் நல்லாயிருந்தா பாருங்க! என் படம்னு பார்க்க வேண்டிய அவசியம் இல்லை'' என்பார். ரசிகர்களுடன் இவரது சந்திப்பும் மிகக் குறைவு தான்.

அஜீத்தின் ஸ்பெஷாலிட்டி — சினிமா தவிர கார் ஓட்டுவது, விமானம் ஓட்டுவது எனப் புதுப்புது சாதனைகள் படைக்க அதிகபட்ச ரிஸ்க் எடுத்துக் கொள்வார்.

எதையாவது சாதித்துக்காட்ட வேண்டும் என்ற துடிப்பு எப்போதும் அவரிடம் இருக்கும். விஜய் சினிமா தவிர வேறு எதிலும் ஆர்வம் துளியும்காட்டுவதில்லை.

பேச்சிலும் கூட இருவரும் வெவ்வேறு டைப். அஜீத் நன்றாகப் பேசுவார். அதை விட பேச்சில் ஆவேசம் புகுந்து கொள்ளும். யாராவது உசுப்பிவிட்டாலோ எதிர்த்துப்பேசினாலோ அவ்வளவு தான். மூக்கு வியர்த்து கோபத்தின் உச்சிக்கேபோய்விடுவார். எப்படிப்பேசினாலும் அவரது பேச்சில் எக்கச்சக்கமான தன்னம்பிக்கைகள் இருக்கும்.

விஜய் அதிகம் பேச மாட்டார். கூச்ச சுபாவம் தெரியும். உசுப்பிவிட்டாலோ எதிர்த்துப்பேசினாலோ நைஸாகக் கழன்று விடுவார்.

விஜய் அடிக்கடி பத்திரிகையாளர்களைச் சந்திப்பார். அஜீத் எப்போதாவது தான்சந்திப்பார்.

இவர்கள் இருவருமே இன்றைய சினிமாவின் 'விடாக்கண்டன், கொடாக்கண்டன்' என்கிற அளவுக்கு சமபலம் வாய்ந்தவர்களாக காட்சியளிக்கிறார்கள்.

சமீபத்தில் 'திருமலை' படம் பிரமாண்ட வெற்றி பெற்ற கையோடுவிஜய் 'கில்லி' படத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அஜீத் 'ஆஞ்சநேயா'விற்குப்பிறகு 'ஜீ' யை எதிர்நோக்குகிறார். முன்னதாக 'ஜனா' வருகிறது.

'சபாஷ் சரியான போட்டி' என்கிற ரீதியில் நட்சத்திர மோதல்கள் தொடர்கின்றன.

# ஊமையாக்கிய அந்த நிமிடம்

அண்மையில் நடிகர் ஸ்ரீகாந்த்தை ஒரு கவிதைப் புத்தக வெளியீட்டு விழாவுக்கு அழைத்திருந்தார்கள். அங்கு அவர் சென்று பட்ட அனுபவம் மிகவும் சுவாரஸ்யமானது. அது பற்றி அவரே கூறுகின்றார்:—

என் பங்குக்கு புத்தகத்தை வெளியிட்டோமா வந்தோமா என்று இல்லாமல் இந்த புத்தகத்தில் இருக்கிற கவிதை யெல்லாம் ரொம்ப நல்லாயிருக்கு இது போல இன்னும் நிறைய புத்தகங்களை அவர் வெளியிடணும் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகுதான் ஏண்டா அப்படி சொன்னோம்னு ஆயிடுச்சு. ஏனெனில் அக் கவிதைப் புத்தகத்தை நான் வாசிக்கவே இல்லை. அப்படியே வாசித்தாலும் எனக்கு கவிதைகளில் அவ் வளவு நாட்டம் கிடையாது. மேடையை விட்டு கீழே இறங்கியதும் ஒரு பெரியவர் வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டார். ''இன்னும் நிறைய புத்தகங்கள் எழுதச் சொன்னீங்க. இப்போது அடித்திருக்கும் இப் புத்தகமே வயில் நெல்லு மூட்டையை வித்துட்டு அவ னுக்கு கொடுத்த பணத்தில் அச்சிட்டதப்பா. இன்னும் இன்னும் எழுதணும்னு அவன் சொன்னா நான் எதைப்போய் விக்கறது?'' அப்பாவியாகக் கேட்டார். பெரியவர்தான் கவிதை எழுதிய கவிஞரின் அப்பாவாம். அவரின் கேள்வியில் எழுந்த நியாயம் என்னை ஒரு நிமிடம் பேசவிடாமல் ஊமை யாக்கி விட்டது. — என்றார்



மாதவன்



ரூபா



பூமிகா

''ரோஜாக்கூட்டம்'' படத்தில் ஸ்ரீகாந்தை காதல் செய்தவர். நடிப் புத் திறமை, அழகான முக அமைப்பைக் கொண்டவர். 'முதல்' படம் ரசிகர்களிடையே பேசப்பட்டது. இப் போது தெலுங்கில் பிஸியென்பதால் அங்கு அதிக கவனம் செலுத் துகிறார். ஹிந்தி யையும் ஒரு கை பார்க்கிறார்.

# பொன்னான நேரத்தை மண்ணாக்கலாமா?

இன்றைய அவசர உலகில் எம்மில் பலருக்கு இருக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று தான் நேரம் போதாமை. ஆனால் எமக்கு நேரம் போதவில்லை என்றால் அதற்கு முக்கிய காரணம் எம்முடைய அசிரத்தையும், அலட்சியமும், சோம்பேறித்தனமும் தான் என்பது எம்மை நாம் ஆராய்ந்து பார்த்தால் எமக்கு நன்றாகவே புலப்படும்.

நன்றே செய்க! அதை இன்றே செய்க! என்று எமக்கு நாமே கட்டளை இட்டுக் கொள்ள வேண்டும். உலகம் பிறந்த நாள் முதல் இன்று வரை உலகில் வாழும் அனைவருக்கும் ஒரு நாளுக்கு 24 மணி நேரம் தான் என்பது மாற்ற முடியாதது. ஆனால் அந்த நேரத்தை நாம் சரியான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தாமை தான் நேரம் போதாமைக்கு முக்கிய காரணம் என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு மாதத்தின் 30 நாட்களில் இரவுப்பொழுதை 15 நாட்களாகக் கணக்கிட்டால் 15 நாட்கள் மட்டுமே நாம் உழைக்கின்றோம். எனவே நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக்கெடுப்பதுடன் தானும் கெட்டார் என்பதை நாம் உணர வேண்டும்.



ஒரே நேரத்தில் இரண்டு வேலைகள் செய்வதன் மூலம் நேரத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ளலாம்.

காலை எழுந்திருக்கும்போதே அன்று என்ன கிழமை என்பதை ஞாபகத்தில் கொண்டு அன்றைய தினம் செய்ய வேண்டிய செயல்களை மனதுக்குள் நிலை நிறுத்தி, பின் நிதானமாக எழுந்து வேலையைத் தொடங்கினால் அனாவசியமான பதற்றத்தைக் குறைத்து வேலைகளை சிறப்பாக மேற்கொள்ளலாம்.

அதே போன்று காலை எழுந்திருக்கும் போதே வீணான தர்க்கங்களில் ஈடுபடாமல் எந்த வேலையைச் செய்யும் போதும் முழு மனத்தோடு செய்யும் போது நேரத்தின் பலன் இரட்டிப்பாகும்.

வேலைக்குப் போகாத பெண்கள் கூட காலையில் சுறுசுறுப்பாக வேலையை முடித்து விட்டால், நாள் முழுவதும் சமையலறையில் நேரத்தை விணாக்குவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். அது மட்டுமல்லாது எமக்குக் கிடைத்த அருமையான நேரத்தைத் தூங்கியும், அரட்டை அடித்தும், தொலைக்காட்சி பார்த்தும் செலவழிப்பது மிகப் பெரிய கொடுமை மட்டுமல்ல, மிகப் பெரிய தவறும் ஆகும்.

வீட்டிலிருக்கும்போதே பொருளாதார ரீதியாக பயன்தரக்கூடிய சிறு தொழில்களைச் செய்தால், கையில் பணம் கிடைப்பதுடன் தன்னம்பிக்கை, புத்துணர்வு, சேமிப்பு போன்றவற்றுக்கும் வழிகோலும் அல்லவா?

இன்றைய பெண்களின் வாழ்க்கையில் தொலைக்காட்சி என்பது நேரத்தைக் கொல்லும் சாதனமாக மாறிவிட்டது. ஒரே ஒரு மாதம் தொலைக்காட்சி பார்க்காது வானொலியை மட்டும் செவிமடுத்துப் பாருங்கள். உங்கள் மனதில், அறிவில் ஆயிரம் புதிய வாசல்கள் திறப்பதுடன் புதிய சிந்தனை, உத்வேகம், பொறுப்புணர்வு என்பன தானாகவே வந்துவிடும். அதன் பின்பு கணக்கில்லாமல் தொலைக்காட்சி பார்ப்பது எவ்வளவு பெரிய தவறு என்பது தானாகவே புரிந்துவிடும். அளவோடு தொலைக்காட்சி பார்க்கும் வழக்கமும் ஏற்பட்டுவிடும்.

நேரத்தை நாம் கொன்றால், நேரம் எம்மைக் கொன்றுவிடும். எனவே நேரத்தை நாம் வென்று உலகத்தை வெல்வோமா? அப்படியாயின், நேரத்தின் அருமை புரிந்து ஒரு நாளின் 86 400 விநாடிகளை மிகவும் அர்த்தமுடையதாக ஆக்கும் வண்ணம் ஒரு புதிய வாழ்வை ஆரம்பியுங்கள். மகிழ்வோடு வாழுங்கள்!




# என்றும் பதினாறு....



பொதுவாக எல்லோருமே அழகை விரும்பி இரசிப்பது இயல்பு. அதுவும் தம்மைத் தாம் அழகுபடுத்துவதில் இன்று ஆண் பெண் என்ற பேதமின்றி எல்லோருமே ஈடுபடுகின்றனர். அழகுபடுத்தல் என்பது ஒரு கலை. எனவே இன்று அழகானவர்கள் மேலும் தம்மை அழகுபடுத்திக்கொள்ள சில வழிமுறைகளைப் பார்ப்போமா?

* சாதாரணமாக நடப்பதை விட சற்று மெதுவாக நடக்க முயற்சி செய்யுங்கள்.
* மகிழ்ச்சியான, மனநிறைவான உணர்ச்சிகளை தினமும் பத்து நிமிடங்களேனும் மனதிலே நினைத்துக் கொள்ளுங்கள்.
* சாதாரணமாகப் பேசுவதை விட குறைவாகப் பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள்.
* உங்களுக்காகத் தினமும் முப்பது நிமிடங்களை ஒதுக்குங்கள். அந்த முப்பது நிமிடங்களுக்குள் மற்றவர்களை நுழைய அனுமதிக்காதீர்கள்.
* சாப்பிட்ட உடனே எழுந்து ஓடாதீர்கள். அமர்ந்து பின்னர் எழுந்து செல்லுங்கள்.
* பிறர் மேல் உள்ள அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்துங்கள்.
* உங்கள் கோபத்துக்கு உரிய காரணங்களைக் கண்டுகொள்ள முயலுங்கள்.
* அழகான மரம், மலர் போன்ற இயற்கைக் காட்சிகளை நின்று ரசியுங்கள்
* உங்கள் முகம் கூட மலர்ச்சியாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
* பிறரைப் பார்க்கும்போது புன்முறுவல் பூக்கப்பழகிக் கொள்ளுங்கள்.

# முதுகுவலி பறந்தோட...!

முன்பெல்லாம் அறுபது வயதுக்கு மேற்பட்ட தாத்தா, பாட்டிகள் தான் முதுகுவலியால் முனகிக் கொண்டிருப்பார்கள். பேரன், பேத்திகளை முதுகில் ஏறி மிதிக்கச் சொல்வார்கள். இப்போதோ, பேரன் பேத்திகள் கூட முதுகு வலியால் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.



இந்த முதுகு வலியானது கரடுமுரடான பாதையில் துவிச்சக்கர வண்டிகளை ஓட்டுபவர்களுக்கும், வசதியற்ற இருக்கைகளில் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் மற்றும் வெகு நேரம் குனிந்தபடி வேலை பார்ப்பவர்களுக்குமே அதிக அளவில் ஏற்படுகிறது.

அதனால் நாம் இன்று இந்த முதுகு வலியைப் போக்குவதற்கான பயிற்சி முறையைப் பார்ப்போம்

* முதலில் நேராக அமர்ந்து கொள்ளுங்கள். பின்பு முழங்கால்களை மார்பு வரை வருமாறு மடித்துக்கொள்ளுங்கள். இரண்டு கைகளையும் முழங்காலைச்சுற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.



* முகத்தை நேராக உயர்த்தி, மெதுவாக மூச்சுக்காற்றை உள்ளே இழுங்கள்.
* பின்பு முழங்கால்களுக்கிடையே முகத்தைப் புதைத்துக்கொண்டு மூச்சை வெளியேற்றுங்கள்.
* இப்படித் தொடர்ந்து ஏழு முறை செய்யுங்கள். உங்களுக்கிருந்த முதுகு வலி மறைந்து இலகுவாக இருப்பதை உணர்வீர்கள்.

## தேங்காய்ப்பால் அப்பம்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| பச்சை அரிசி | 2 சுண்டு |
| புழுங்கல் அரிசி | 2 சுண்டு |
| உளுத்தம்பருப்பு | 1/2 சுண்டு |
| வெந்தயம் | 3 தேக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |
| தேங்காய் | 2 |
| அப்பச்சோடா | தேவையான அளவு. |

### *செய்முறை*

சுத்தமான அரிசியையும், பருப்பு, வெந்தயத்தையும் கழுவி ஊற வைக்கவும். நன்கு ஊறிய பின்பு மிக நன்றாக அரைத்து உப்பு சேர்த்து தோசை மாப்பதத்தில் கரைத்து வைக்கவும். காலையில் தேங்காயைத் துருவிப் பால் எடுத்து வைத்துக்கொள்ளவும். மாவில் சிறிதளவு அப்பச்சோடா சேர்த்துக்கலந்து சட்டியில் ஊற்றி நடுப்பகுதி கனமாகவும், ஓரப்பகுதி இலேசாக இருக்கும்படியும் சுற்றி ஊற்றிவிட்டு மூடியால் முடவும். அடுப்பை மெதுவாக எரியவிட்டு வெந்தவுடன் எடுத்து தேங்காய்ப் பாலில் போட்டுப்புரட்டி ஒரு தட்டில் எடுத்துப் பரிமாறுங்கள்.

# மச்சத்துள் மறைந்திருக்கும் மர்மம்!

யாராவது எந்தத் துறையிலாவது சாதித்து விட்டால் இவருக்கு உடம்பெல்லாம் மச்சம் என்று சொல்கிறோம். ஆனால் எமது உடம்பெல்லாம் மச்சம் இருப்பது ஆரோக்கியமான விசயமா என்று கேட்டால் அந்த மச்சத்தின் பின்னே பல விடயங்கள் மறைந்திருப்பதைக் காணலாம்.

உடம்பிலுள்ள மெலனின் எனப்படும் நிறச்செல்கள் ஒன்று குவிவது தான் மச்சம்.



பிறந்த ஆறு மாதம் முதல் இரண்டு வயதுகளில் மச்சம் தோன்றும். பருவ மடைந்த பிறகு மச்சத்தின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி, இருபது வயதுகளில் அதிக எண்ணிக்கையில் இருக்கும். முப்பது வயதுக்கு மேல் படிப்படியாக மெலிந்து வயதான காலத்தில் மறைந்து விடும். சிலருக்கோ உடம்பில் நூறு மச்சங்களுக்கு மேல் இருக்கும்.

மச்சம் உடம்பில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் தோன்றும். தட்டையாகத் தோன்றும் மச்சம் ஐந்து மில்லிமீட்டர் உயரம் வரை வளர்வதுண்டு. அதில் சிலருக்கு முடிகள் முளைக்கும்.

பெண்களின் கன்னத்தில் மச்சம் இருப்பது அழகுக்கு அணி செய்யும் என நாம் சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால் ஒவ்வாமை மற்றும் தடிமன் காரணமாகவே இவ்வாறு ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சிலருக்கு இந்த மச்சம் புற்று நோயாக மாறுவதும் உண்டு. புற்றுநோயாக மாறும் மச்சத்தின் முனைகள் பல்வேறு வடிவங்களில் இருக்கும். அவற்றின் வண்ணம் அடர் கறுப்பும் மற்றும் பழுப்பு நிறங்களில் இல்லாமல் பல வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கலாம்.

புற்று நோயாக இருக்கும் பட்சத்தில் மச்சம் வேகமாக வளரும். இயல்பான மச்சம் ஒரே அளவில் இருக்கும்.

மச்சத்தின் அளவு ஒரு செ.மீ. குறுக்களவாக இருந்தால், முனையில் சிவந்து காணப்பட்டால், அதில் இரத்தக்கசிவு, சீழ்பிடித்தல், தொடும்போது உணர்ச்சி மாற்றம், நமைச்சல் அல்லது வலிபோன்றவை இருந்தால் உடனடியாக மருத்துவரைப் பாருங்கள்.

மச்சத்தினால் அசௌகரியங்கள் ஏற்படும் போது, நமைச்சல் போன்றவை இருந்தால், மச்சத்தை சுற்றியுள்ள பகுதியில் நிற மாற்றம், அளவில் மாற்றம், புண்ணாதல், இரத்த ஒழுக்கு ஆகிய நிலைகள் இருந்தால் மருத்துவரை அவசியம் நாம் பார்க்க வேண்டும்.

வளரக் கூடிய மச்சத்தை அகற்றி விடுவதே நல்லது. அகற்றிய சதைப்பகுதியை பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். பிரச்சினைகள் எதுவுமில்லை எனத் தெரிந்தால் திருப்திப்பட்டுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

என்ன சகோதரிகளே, மச்சம் என்றால் அழகுக்கு மட்டும் என்று நினைப்பது தவறு என்பது இப்போது உங்களுக்குப்புரிகிறது அல்லவா?

# பித்தன் பதில்கள்

*பொ.விஜிந்தன்— முள்ளியவளை.*

கேள்வி:— தினமும் மனைவியிடம் அடி வாங்குவதாக கூறுகிறீர்களே! அப்படியாயின் விவாகரத்துச் செய்துவிட்டு தனிமையில் வாழலாமே?

பதில்:—ஐயா...தினமும்(கட்டிலில்)மேலே படுத்துப்பழகிவிட்டது... விவாகரத்து செய்து விட்டு பாயிலோ தரையிலோ படுப்பதை நினைத்தால் கஷ்டமாக இருக்கிறது. இது தவிர அடி வாங்குவது ஒன்றைத் தவிர அதிக மான வசதிகளை தற்போது அனுபவித்து வருகிறேன். இதுக்காக அதுகளை எல்லாம் இழந்துவிட நான் தயாராக இல்லை. தயவு செய்து எனது குடும்பத்தில் குழப்பம் பண்ணாமல் ஒதுங்கி நில்லுமையா!

*கஜநிதி— மல்லாவி.*

கேள்வி:— ஏன் பித்தா! ஆண்கள் பெண்க ளிடம் சீதனம் வாங்குகிறார்கள்?

பதில்:— பெண்கள் நகை வாங்கித் தா— புடைவை வாங்கித் தா என்று ஆண்களின் வருமானத்துக்கு மேலாக வறுகப் பார்க்கி றார்களே! அதனால் தான்.



*எஸ்.ராஜ்— மீசாலை.*

கேள்வி:—காதலுக்குக் கண் இல்லை என்று கூறுகிறார்களே! ஏன் பித்தா?

பதில்:— காதலுக்கு கண் இருந்திருந்தால் உலகத்தில் பாதிப்பேர் காதலித்திருக்கவே முடியாது. ஏனென்றால் இந்த மூஞ்சியை யாராவது காதலிப்பார்களா, கலியாணம் கட்டுவார்களா என்று நான் நினைத்த பலர் காதலித்து — கல்யாணம் முடித்து பெண் டாட்டி பிள்ளைகளுடன் சேர்ந்து சந்தோஷ மாக வாழ்கிறார்களே! கண் இருந்தால் இது எப்படிச் சாத்தியம்?

*திரு—மட்டுவில்.*

கேள்வி:— பித்தா! தற்போதைய அரசியல் நிலை பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்:—ஒன்றுமே புரியல்லே உலகத் திலே— என்னமோ நடக்குது... மர்மமா இருக்குது...

*கே.என்.குரு பரன்— கருநாட்டான் கேணி.*


கேள்வி:— எனது நண்பன் ஒருவன் திருமணத்துக்கு முன்னர் மகிழ்ச்சியாக இருந்தான். இப்போது படு கவலையாக இருக்கிறான். ஏன் பித்தா?

பதில்:— இதிலே என்ன? ஏன் உலக வழமை இது தானே...! திருமணத்துக்கு வந்தவர்கள் எல்லாம் மூட்டை முடிச்சுகளு டன் வீட்டுக்கு திரும்பிய பின்னர் தான் தெரியும், குடும்பத்தின் சுமை. குசினிக்கு வாளியிலே தண்ணி அள்ளி வைக்க வேண் டும். விடிய எழுந்து பால் வாங்கி வர வேண் டும். பாண் கியூவில் நிற்க வேண்டும். வயிற் றிலே புழு பூச்சி வந்துவிட்டால் மனைவியை கிளினிக்குக்கு கூட்டிச் செல்ல வேண்டும். குழந்தை பிறக்கும் போது பிரசவ அறையின் வெளியே கையைப் பிசைந்தபடி கடவுளை வேண்டிக்கொண்டுநிற்கவேண்டும். குழந்தை பிறந்த பின் பால் வாங்க ஓட வேண்டும். குழந்தையின் கக்கா கழுவ வேண்டும். சீச்சா அடித்த துணி மாற்ற வேண்டும் பிள்ளைக்கு பள்ளிக்கூட அட்மிஷனுக்கு கால் கடுக்க அலைய வேண்டும் etc...etc... இவைகளை எல்லாம் நினைத்திருப்பார். முன்னர் கண்ட இடத்திலே கால் கழுவி விட்டுபோனவர், இப்போ கையும் மெய்யுமாக பிடிபட்டுவிட் டால் கவலை வரத்தானே செய்யும்.

*க.அருணா— யாழ்.பல்கலைக்கழகம்.*

கேள்வி:— பித்தா! உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் சண்டை வந்தால் யார் முத லில் கதைப்பீர்கள்?

பதில்:— நான் தான். ஏனென்றால் எனக்கு அதிக நேரம் பட்டினி கிடக்க முடியாது.



*ஆர்.சந்திரசேகரன்— அம்பாள் ஜுவலரி.*

கேள்வி:— திருமணம் முடித்த பின்பும் புதிய காதலி வைத்திருப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:—மச்சத்துக்கு நடுவே உடம்பை வைத்திருப்பவர்கள், அள்ளி முடிய கொண்டை வைத்திருக்கும் அதிஷ்டசாலி கள், முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர் கள்.

*க.மதிவதனன்— மல்லாவி.*

கேள்வி:— எமது பல கிராமங்களில் நூலகங்கள் இல்லை. ஆனால் இலட்சக் கணக்காக செலவு செய்து கோவில் திரு விழாக்கள் மட்டும் கொண்டாட வேண்டுமா என்ன?

பதில்:—நியாயமான கேள்வி. அந்த லட்சக்கணக்கான பணத்தை வைத்து கிராமங்களில் நூலகங்கள் கட்டலாம் தான். ஆனால் பக்தர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் லட்சக்கணக்கில் செலவு செய்து திருவிழா வைத்து அப்பனே முருகா எமது கிராமத்தில் ஒரு நூலகத்தினை உருவாக்க வேண்டும். அதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தா என்று கேட்டால் கடவுள் மகிழ்வடைந்து ஒரு நூலகத்தை உருவாக்க வழி ஏற்படுத்தி தரமாட்டாரா என்று. அதுவும் நியாயமாகத் தானே இருக்கிறது. எனவே இந்த விடயத்திலிருந்து நான் எஸ்கேப்.

*இ.புஷ்பன்— துனுக்காய்.*

கேள்வி:— பித்தா! 60 ஐ தாண்டினால் மீசை நரைக்கிறதே— ஆசை நரைப்ப தில்லையா?

பதில்:—இல்லை போல் தான் தெரிகிறது. ஏனென்றால் இப்போ தெல்லாம் 60ஆம் கலியாணம் நடப்பதை விட அதிகமாக 60 வய தில் கலியாணம் தான் அதிகம் நடக்கிறது. அதுவும் நம் ஊரில் அரசியல் வாதிகள் பெயர்கள் தான் அதில் அடிக்கடி அடிபடுகிறது.

*கி.சதா—யாழ்.பல்கலைக்கழகம்.*

கேள்வி:— அன்பின் பித்தா! தங் களை மன்மத ராசாக்களாக நினைத் துக் கொண்டு அழகிகளை துரத்தி துரத்திக் காதலிப்பது ஏன் பித்தா?

பதில்:— சில அழகற்ற யுவதிகள் தங்களை மன்மத ராணிகளாக நினைத்துக்கொண்டு எடுவை களை எடுக்கும்போதும் பாவம் அந்த மன்மத ராஜாக்கள் துரத்தி திரிவதில் என்ன தப்பு?



*எஸ்.சுதேஸ் — நல்லூரர்.*

கேள்வி:— பித்தா! கருணா பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்:— தற்பொழுது புதிதாக மார்க்கட்டுக்கு வந்திருக் கும் ''பபிள்கம்'' அல்லது ''சுவிங்கம்''.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முக வரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.



பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர் களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்வி களுக்கு பித்தன் பதில் தரு வார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்க ளும் பதில் அளியுங் கள்.

ஐந்து தரமான —
குறும்பான —
யதார்த்தமான —
பதில்கள் பிரசுரிக்கப்ப டும். பதில்களை மார்ச் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண் டும்.

*கா.சாந்தனுாரப்பன்— கிளிநொச்சி.*

கேள்வி:— பித்தா! உங்களை இந்தியா வின் பிரதமராக நியமித்தால் இந்த நூற் றாண்டில் இலங்கை தமிழருக்கு என்ன செய்வீர்?

பதில்:— ஐயா நான் இந்தியப் பிரதமராக வந்தால் — இலங்கைத்தமிழர்களுக்கு உதவி ஏதும் செய்யாது விட்டாலும் உபத்திரவம் கொடுக்காது அவர்களின் விடுதலைப் போரை குழப்பாது — பிரித்தாளும் தந்தி ரத்தை கையாளாது நல்ல பிள்ளையாக இந்தியாவுக்கு மட்டும் பிரதமராக இருப் பேனே தவிர அண்டை, அயல், அக்கம் பக்க நாடுகளையெல்லாம் .... முயற்சிக்கவே மாட்டேன்.

*ஜெ.மஞ்சுளா தேவி.*

கேள்வி:— பித்தனே— உங்கள் பொழு தெல்லாம் எப்படிப்போகிறது?

பதில்:— எப்படி பொழுதைப் போக்க லாம் என்று சிந்திப்பதிலேயே எனது பொழுது போய்விடுகிறது.

*ஜஸ்மினா— மீசாலை.*

ஏன் பித்தா!உமது மனைவிக்கு நீர் பயப்படுவதாக பகிரங்கமாகக் கூறுகி றீரே. உமக்கு வெல்கம். மானம்— சூடு— சுரணை எதுவுமே கிடையாதா? நீர் எல்லாம் ஒரு ஆம்பிளையா?

பதில்:— நீர் கேட்ட எல்லாமே இருந்தது. கல்யாணத்துக்கு முன்னர். இப்போ நஹி... அது சரி நான் மட்டும் துணிவுடன் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஊரிலே நாட்டிலே எத்தனை பேர் வாங்கிக் கட்டி நொந்து நூலாகி அந்து அவலாகிப் போய் உள் ஒன்று வைத்து புறமொன்று பேசித் திரிகிறார்கள்... இவர்களையெல்லாம் ஆண் மகன்கள் என்று தோழிலே தூக்கி கொண்டாடுகி றாங்கள். ஒட்டை வாயனான என்னை மட் டும் கேலியா பேசுங்கள். ஊம்....

*எம்.சதீஷன்— திருநெல்வேலி.*

கேள்வி:— பித்தா... ஜோக் ஒன்று தாரு மேன்... பிளீஸ்.

பதில்:— இம் முறை எனது சொந்தச் சரக்கல்ல. வாசகரான பிரசாந்த் ( எந்த ஊரென்று தெரியவில்லை) எழுதி அனுப் பியிருந்த ஜோக் உமக்காக.

பெரியவர் ஒருவர் ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தார். அங்கே ஒருவன் தூங்கி விழித்தபடி தூண்டில் போட்டுக் கொடிருந்தான். தூண்டில் நீருக்குள் அமிழ் வதைக் கண்ட பெரிவர் உன் தூண்டிலில் மீன் சிக்கியுள்ளது வெளியே இழு என்றார். ஐயா அந்த மீனை வெளியே இழுக்க எனக்கு உதவி செய்யுங்கள் என்றான் அவன். அவரும் தூண்டிலை இழுத்தார். அதில் பெரிய மீன் ஒன்று சிக்கி இருந்தது.

ஐயாதயவுசெய்து தூண்டிலில் இருக்கும் அந்த மீனை எடுத்துப் பக்கத்தில் இருக்கும் கூடையில் போட்டு விடுங்கள் என்றான் அவன். அவரும் அப்படியே செய்தார். தொடர்ந்து ஐயா உங்களுக்குப் புண்ணிய மாகப் போகட்டும் இங்கே இருக்கும் புழுவைத் தூண்டில் முள்ளில் கோர்த்துத் தண்ணீரில்போட்டுவிடச்செல்லுங்கள் என் றான். அவரும் அப்படியே செய்துவிட்டு ''நான் பார்த்த வர்களில் மிகப் பெரிய சோம் பேறி நீதான். எனவே உடன டியாக யாரையாவது திரு மணம் செய்து கொண்டு விரைவிலேயே ஒரு மகனைப் பெற்றெடு. அந்த மகன் வந்து உனக்குஎல்லாவேலை களையும் செய்து தரு வான்'' என்றார்.



அதற்கு அந்த சோம் பேறி கூறினான். ஐயா நீங்கள் சொல்வது நல்ல யோசனை தான். எனவே நான் திரு மணம் செய்வதற்கு உட னேயே கர்ப்பிணியான ஒருபெண்ணை பார்த்து நீங்களே எனக்கு திரு மணம் செய்து வைத்து விடுங்களேன் என்றான்.

## பித்தனின் கேள்வி

கேள்வி:— பெண்கள் நாகரீக ஆடை அணிவதால் பெரிதும் பாதிக்கப்படுப வர்கள் பெண்களா? ஆண்களா?

## வாசகர் பதில்கள்

*இளவேனில்— யாழ்ப்பாணம்.*

பெண்கள் நாகரீக ஆடைஅணிவதால் ஆண்கள் பாதிக்கப்பட்டு, அதே ஆண்க ளால் பெண்கள் பாதிக்கப்படுவதால் சமூகம் பாதிப்படைகிறது.

*புவிதா— திருநெல்வேலி.*

நாகரீகமான, கவர்ச்சியான ஆடை களை பெண்கள் அணிகிறார்கள். இதனை அணிபவர்களும் உற்று நோக்கு பவர்களுமாக உள்ள இரு சாராரும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதில் ஐய மேது?.

*பெ.அஜந்தன்— இயக்கச்சி.*

நாகரீக ஆடையைப் பெண்கள் அணி வதால் ஆண்களே அதிகம் பாதிக்கப் படுகிறார்கள்.

*சிந்து— யாழ்ப்பாணம்.*

ஆண்களைப் பார்த்தாலே புரியுமே! இதைக் கேட்கவும் வேண்டுமா?

*சதா — சாவகச்சேரி.*

பெண்கள் தான். காரணம் அதிகம் ஆசைப்படுபவர்கள் அவர்கள் தானே!

*டிடிரோன், கிளிநொச்சி*

கேள்வி:— பித்தனே! முகத்துக்கு நேரே சிரித்துப் பேசி விட்டு முதுகில் குத்த முயற் சிப்பவரை என்ன செய்வது?

பதில்:— நாடாளுமன்றத் தேர்தல் வரு கிறதே! தேர்தலில் அவரை நிறுத்த வேண்டி யது தானே.

*பி.சுரேஸ்குமார், பதுளை*

கேள்வி:—'ஆழம் தெரியாது காலை விடு 'தல்'. இதற்கு ஓர் உதாரணம் சொல்லுங்க ளேன்?

பதில்:— ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவது.

*போ.குமாரவேலு, திருகோணமலை*

*கேள்வி:*—யானை ஏன் இவ்வளவு குண்டாக இருக்கின்றது?

பதில்:— எறும்பு இருக்கிறது அல்லவா? இதுதான் உலகம் என்று அதற்குக் காட்டுவ தற்கு.

*கு.ரீகன், யாழ்ப்பாணம்.*

கேள்வி:— மனிதனின் சக்தி எப்பொழுது வெளிப்படுகிறது.

பதில்:— கடன் கொடுத் தவனைப் பார்த்துவிட்டு ஓட்டம் பிடிக்கும் போது.

*கு.மகேஸ்வரி, மட்டக்களப்பு*

கேள்வி:— பித்தனே! கேள் விக்கு பதிலா? பதிலுக்கு கேள்வியா?

பதில்:— பதிலை வைத்துக் கொண்டு கேள் வியைத் தேடுகிறவன் சுல்லன் நான்.

*நி.நியோமிடா, வவுனியா.*

கேள்வி:— பித்தனே! ஆண்டுக்கு ஒரு நாள் மகளிர் நாள் என்றால் மற்ற நாட்கள் ஆண்கள் நாளா?

பதில்:— ஒரு நாள் மகளிர் நாளாக இருப் பதையே ஆண்களினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

*க.மணிவண்ணன், வத்தளை.*

கேள்வி:— பித்துத் தம்பி! பெண்களுக்கு எது அழகு?

பதில்:— மணித் தம்பி உங்கள் கண்கள் மேய்வது எங்கே.

*த.சசிகுமார், யாழ்ப்பாணம்.*

கேள்வி:—அரசியலை சாக்கடை என்கின் றனர். அப்படி என்றால் சினிமாவை எப்படி கூறலாம்?

பதில்:— சிவப்பு விளக்கு.

*க.அருள், ஹட்டன்.*

கேள்வி:—இலங்கையில் சமாதானப் பேச்சு நடக்குமா?

பதில்:— அதற்குத்தான் சமாதி கட்டப்பட்டு வருகிறதே.


# சிறார்களின் கைவண்ணம்



சி. கீர்த்திகன்
தரம் 7
வ/நெடுங்கேணி ம.வி




எம். ராஜ்குமார்
தாளையடி



எட்வேட்றெஜி – வேளாயினி
உடுப்புக்குளம்.

அ.ஜனனி, தரம் 09
மட்/ மகாஜனக் கல்லூரி.





செ.சிலோஜா
ஆத்திக்குளி,
முருங்கன்.



க.ரமேஸ்
தரம் 09
பொல்/ஹெவன்பிட்டி த.க.வி

# இலங்கைத் தகவல்கள்

1. இலங்கையின் தேசிய மரம் எது? நாக மரம்
2. இலங்கையின் தேசிய மலர் எது? நிலோற்பலம்
3. இலங்கையின் தேசிய பறவை எது? காட்டுக்கோழி
4. இலங்கையின் தேசிய மிருகம் எது? மர அணில்
5. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? கரப்பந்தாட்டம்
6. இலங்கையில் மிக நீளமான நதி எது? மகாவலி கங்கை
7. இலங்கையின் மிக உயரமான மலை எது? பேதுறுதாலகாலமலை
8. இலங்கையின் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா எது?
பேராதனை தாவரவியற் பூங்கா

ந.நவதீபா, ஆண்டு–5,
செம்பியன் பற்று, அ.த.க.பா.

# அறிந்து கொள்ளுங்கள்

1989 ஆண்டு நோபல் சமாதான பரிசுப்பெற்றவர் யார் தெரியுமா? தலாய்லாமா
ஒஸ்கார் விருது வழங்கும் விழா நடைபெற்ற ஆண்டு எது தெரியுமா? 1929 இல்
இம்முறை ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் எங்கு நடைபெற உள்ளன தெரியுமா? இலங்கையில்
யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது தெரியுமா? 1999இல்
இலங்கையில் இலவசப் பாடநூல் விநியோகிக்கப்பட்ட ஆண்டு எது தெரியுமா? 1979இல்
சந்திர மண்டலத்திற்கு முதன் முதலில் பயணம் செய்த விண்கலம் எது தெரியுமா? வொஸ்டக் வன்
விண்ணில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது கோள் எது தெரியுமா? சொறஸ்
இலங்கையில் தேயிலைத் தோட்டத்தை உருவாக்கியவர் யார் தெரியுமா? டெய்லர்.

*எம்.பிரதீப், பதுளை வீதி, கித்துள்.*

# விஞ்ஞான விளக்கம்

1. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கீரைக்குவியல்களின் மீது அடிக்கடி நீர் தெளிக்கப் படுவதுண்டு. – கீரையின் இலைகளில் இருந்து ஆவியுயிர்ப்பின் மூலம் நீர் இழக்கப் படுவதால் கீரை வாடிவிடும். இதனைத் தவிர்ப்பதற்காக கீரைக்கு அடிக்கடி நீர் தெளிக் கப்படுகிறது.
2. இரும்பினாலாக்கப்பட்ட கடற்கப்பல்களின் மேற்பரப்புக்களில் அடிக்கடி பூச்சுப்பூசுவது அவசியமாகும். – மைப்பூச்சு உடைந்ததும் துருப்பிடித்தலுக்கு அவசியமான ஊக்குவிக் கும் காரணிகள் (உப்பு) கடல் நீரில் இருப்பதால் விரைவில் துருப்பிடிக்கும்.
3. தயிரை நீண்ட நேரம் வைத்திருப்பின் அது புளிச்சுவை உடையதாக மாறுகிறது – தயிர் நுண்ணங்கிகளினால் இலற்றிக்கமிலமாக மாற்றப்படுகிறது. இதனால் புளிப்புச் சுவை உண்டாகிறது.
4. உணவு விழுங்கப்படும் சமயத்தில் எம்மால் மூச்சுவிட முடிவதில்லை. – உணவு விழுங் கப்படுகையில் மூச்சுக்குழல் வாய்மூடி, குரல் வளையை மூடிக்கொள்கிறது. இதனால் வளி உட்செல்லவோ வெளிவரவோ முடியாது.
5. அழுகிய முட்டை நீரில் மிதப்பது ஏன்? – முட்டையில் நீர் இருக்கின்றது – முட்டை அழுகும் பொழுது இரசாயன மாற்றங்களுக்குள்ளாகி சில வாயுக்களை வெளிவிடு வதால் முட்டை நீரில் மிதக்கின்றது.

*இ.திரோஜா, தரம்–10, யாழ்/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.*

# ஆரோக்கியத்திற்கு தேவை

சுவாச வீதம்–12–14 தடவைகள் நிமிடத்திற்கு
இதயத் துடிப்பு வீதம்– நிமிடத்திற்கு 72 துடிப்புகள்
குருதியமுக்கம்– 120/80 MMHG
குருதியின் அளவு– 5–6 L
(உடல்நிறையின் 8%)
குருதியிலுள்ள யூரியாவின் அளவு– 30mg/100ml
நாளொன்றிக்கு வெளியேறும் சிறுநீரின் அளவு– 1.5L
உடல் வெப்பநிலை – 98.4°F (36.9 °C)

செவாநந்தன் நிரோசன்,
தரம்–11 ஆ,
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.

# ஆஸ்தியும் ஆயுளும்!

ஒரு ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரைச் சந்திக்க ஞானி ஒருவர் அவரது வீட்டுக்கு வந்தார். பணக்காரர் பற்றிய விவரங்களை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினார் ஞானி. ''ஐயா, உங்களது சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டார்.

''ஐயா, ஞானியாரே! என்னுடைய சொத்து ஏதோ சில ஆயிரங்கள் இருக்கும்,'' என்று கூறினார். பணக்காரர்.



பணக்காரரின் பதிலைக் கேட்டுத் திகைத்த ஞானி, எவ்வளவு பெரிய பணக்காரர் இவர்? ஏன் இப்படிப் பொய் சொல்கிறார்? எனப் புரியாது விழித்தார்.

''சரி, சொத்து கிடக்கட்டும். உங்கள் வயது எவ்வளவு?'' என்று ஞானி வினவினார்.

பணக்காரர் சற்றும் தாமதிக்காமல், ''இரண்டு, மூன்று வயதிருக்கும்,'' என்றார்.

ஞானிக்குக் கோபம் அதிகமாகியது. இந்த மனிதர் இப்படி பொய்க்கு மேல் பொய்யாகக் கூறுகிறாரே! என்று நினைத்தார்.

''ஐயா! நீர் கூறும் பதில் விசித்திரமாய் உள்ளது. ஏன் உங்களின் சொத்தின் மதிப்பையும், உங்கள் வயதையும் என்னிடம் மறைக்க வேண்டும்?'' என்று கேட்டார்.

அப்போதும் பணக்காரர் அமைதியாக ஞானியைப் பார்த்து, ''ஐயா! நான் ஒருபோதும் பொய் பேசவே மாட்டேன். இப்போது நான் கூறியவை யாவும் உண்மையே! என் சொத்து எவ்வளவு என்று கேட்டீர்கள். நான் இவ்வுலக வாழ்க்கை முடிந்து போகும் போது என்னுடன் வரக்கூடிய சொத்து என் நிலபுலன்களோ, காசு பணமோ அல்ல.

நான் எளியவருக்குச் செய்த தான, தருமங்கள் தான் எனக்குத் துணையாக வரும். இப்படிப் பார்த்தால் நான் தான, தருமத்துக்கு என சில ஆயிரம் தான் செலவு செய்திருப்பேன். இன்னும் செய்து எனது உண்மையான சொத்தை விருத்தி செய்து கொள்ளவே விரும்புகிறேன்.''

''அடுத்து என் வயதைப் பற்றிக் கேட்டீர்கள்... கடவுளையும், நல்ல விஷயங்களையும் ஒருவன் நினைத்துக் கொண்டு இருப்பது தான் அவனது உண்மையான வாழ்வுக் கணக்கு. அதன்படி பார்த்தால் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தான் என்னால் நல்ல சிந்தனையுடன் இருக்க முடிகிறது. அந்தக் கணக்குப்படி பார்த்தால் இது நாள் வரை மொத்தமாக நான் இரண்டு, மூன்று வருஷம் வாழ்ந்ததாகத் தான் அர்த்தம்,'' என்றார் பணக்காரர்.

பணக்காரரின் மனநிலையை அறிந்து மகிழ்ந்தார் ஞானி.



# அன்பெனும்

அந்தச் செய்தியைக் கேட்ட நேரம் தொடக்கம் திவ்யாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. ஏக்கம்... சங்கடம்... தவிப்பு... ஏமாற்றம்... எல்லாம் ஒருமித்துக் குடைந்து கொண்டிருந்தன. ''சீ நானும் போயிருக்கலாம்...; பார்த்த இடம் எண்டால் என்ன? இன்னொருருக்கா... உல்லாசமாய்..... என்னாலேயே நான் எல்லாத்தையும் இழந்து போனேன்... மனம் ஒரு குரங்கு என்கிறது உண்மைதான் போல. எல்லாத்தையும் நானே பிச்சுப் போட்டுட்டேன்...'' என்று எண்ணிப் பெருமூச் செறிந்தாள்...

''நான் இவ்வளவு நாளும் மனதுக்குள்ளை போட்டுக் கட்டிக் கொண்டிருந்த எண்ணக்கனவு வீணாய்ப் போச்சுதே... என் மனக் கோட்டை மணற்கோட்டை ஆச்சதே ... சீ... என் கனவு நாயகன் இன்னொருத்திக்குச் சொந்தமாகிவிட்டானே! அவளுக்கு இருந்த துணிவு கூட எனக்கு வரவில்லையே'' என்று எண்ணிக் கவலைப்பட்டாள்.

இத்தனைக்கும் காரணம் இதுவரை காலமும் தான் உயிருக்குயிராய் தன்னுள்ளேயே காதலித்து வந்த தன் உள்ளக் காதலன் இன்னொருத்திக்குச் சொந்தமாகப் போவதை அறிந்து கொண்டமைதான்.

* * *

அவள் மிகவும் அடக்கமானவள். அமைதியானவள். எதையும் பொறுமையாகவே சாதிக்க வேண்டும் என நினைப்பவள். அவர்களுடைய வகுப்பில் அவளைப் போல் பொறுமைசாலி எவருமே இல்லை எனலாம். எல்லோரையும் இலகுவில் வசீகரிக்கும் முகபாவம் அவளுக்கு மட்டுமே உரியது. அதிகம் பேசாத அடக்க சுபாவம் உடையவள் அவள்.

அவள் பாடசாலையில் படித்த நாட்களில் தன் சினேகிதிகளிடம், தான் காதலிக்க மாட்டேன் எனக் கூறியிருந்தாலும், என்றைக்கு கம்பஸில் காலடி எடுத்து வைத்தாளோ அன்று தன்னை மறந்தாள். புதுமையான ஒரு வாழ்வு அவளை அழைத்தது. எல்லோருடனும் ஆண், பெண் பேதமின்றிப் பழகினாள். அவளை ஒருவன் கவர்ந்து கொண்டான் என்பதைவிட, அவள் ஒருவனைக் கவர்ந்து கொண்டாள் என்பது தான் பொருத்தம். அது ஒருதலையாக மட்டுமே இருப்பதாக அவள் எண்ணிக் கொண்டாள். ஆனால் அவனுக்குள்ளும் காதல் மலர்வதை அவள் அறியவில்லை. நண்பர்கள் போலவே இருவரும் பழகி வந்தார்கள். ஒருவரை மற்றவர் கேட்டுவிட்டு மாட்டேன் என்றால் என்ன செய்வது என்ற பயம் இருவரையும் வாட்டியது. இத்தகைய நிலையில் ஒரு நாள்....

''திவ்யா...! வாற கிழமை எல்லாரும் ஞர் போகினம் நீயும் வாறியா? நாங்களும் போவோம் என்றிருக்கிறேன்... இடங்களைப் பார்க்க ஆசையாய் இருக்குது....'' என்றான் தயக்கத்துடன் கரன். சிறிது நேர யோசனையின் பின்னர் ''இல்லை கரன் நான் வரேல்லை. நான் முந்தியும் பள்ளிக்கூடத்திலை படிச்சபோது போனனான்.. ஏன் நெடுகலும் போவான்? நீங்கள் போட்டு வாங்கோ....'' என்றாள். அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ''இவள் உண்மையில் நட்பாகத்தான் பழகுகிறாள் போல. நான்தான் தேவையில்லாமல்....'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். ''அப்பசரி திவ்யா நாங்கள் போயிட்டுவாறோம். வந்து புதினங்கள் சொல்லுறேன்'' என்று கூறி விட்டுச் சென்றவனை அவன் முதுகுப் புறம் மறையும் வரையும் உற்று நோக்கியபடியே இருந்தாள். ''விட்டுப் பிடிக்கிறது தான் எதுக்கும் நல்லது'' என்று மனதில் நினைத்தபடி தானும் வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

அவர்கள் சுற்றுலாச் சென்ற நாட்களில் விரிவுரைகள் இடம் பெறவில்லை என்பதனால் அவளுக்குப் போர் அடிக்கத் தொடங்கியது. 'சீ நானும் போயிருக்கலாம்' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வாள். நிமிடங்கள் கூட மணித்தியாலங்களாக நகர்ந்து கொண்டிருந்தன. ஏழு நாட்களும் அவளுக்கு ஏழு மாதங்கள் போல நகர்ந்து நீண்டு கிடந்தன.

மீண்டும் கம்பஸ் சென்றவளுக்கு அந்தச் செய்தி இடியாய் இறங்கியது. அவளுடைய ஆருயிர்த் தோழி மூலமாக அவள் அதனை அறிந்து கொண்டாள். ''கரன் நித்தியாவைக் காதலிப்பது போல் இருக்குது. அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது . எல்லாரும் கதைக்கினம்'' என்றாள் அவள். தன் செவிகளையே நம்ப முடியவில்லை. போடி விசரி அவர் அப்படிப்பட்ட ஆளில்லை . அப்படி ஏதும் எண்டால் எனக்கு முதலியே சொல்லியிருப்பார்...'' எனக் கூற நினைத்தவள், அதை மென்று விழுங்கிய போது எதிரே கரன் வந்து கொண்டிருந்தான். கிண்டலாக ''ஓ என்ன ரெண்டு பேரும் லெக்சர் வைக்கிறியள்'' என்றவன்,

''உங்கட தனிப்பட்ட விசயம் எண்டால் எனக்கெதுக்கு வம்பு'' என்று கூறிவிலக முற்பட்டபோது, ''கரன் நில்லுங்கோ ஒரு கதை'' என்று கூப்பிட்ட திவ்யா கரனை நோக்கிச்சென்றாள்.

''கரன் எப்படிப் போச்சுது உங்கட சுற்றுலா'' என்று கேட்டவள்...

''என்ன ஏதோ விசேஷம் எண்டு அறிஞ்சனான்... உண்மையா கரன்? ஏன் கரன் இதை இவ்வளவு நாளும் எனக்குச் சொல்லவில்லை. எனக்கு அதைக் கேட்க உரிமை இல்லையா?'' என்றாள் மகவும் மென்மையாக...

''என்ன திவ்யா நீ.... உனக்கு நான் எதை மறைச்சனான். கட்டாயம் சொல்ல வேணும் எண்டுதான் வந்தனான். நீ நினைக்கிறது போல எங்கட காதல் நீண்ட நாள் காதல் இல்லை...'' என்றான். அவள் புரியாது குழப்பத்துடன் முகத்தைச் சுழிக்கவே, ''ஆம் திவ்யா நான் சுற்றுலா போனபோது என்னுடன் அவள் நல்ல மாதிரிப் பழகினாள். அவளது நண்பிகளும் என்னுடனும் எனது நண்பர்களுடனும் நன்றாகவே பழகினர். சாதாரணமான நட்புத்தான் எண்டு நான் ஆரம்பத்திலை நினைச்சனான்... ஆனால் மூன்றாவது நாளின் போது என்னை நித்தியா காதலிப்பதாக அவளது நண்பிகளில் ஒருத்தி கூறினாள்''

''அதுக்கு என்ன நீங்கள் சொன்னீர்கள்?'' என்றாள் திவ்யா இடையில் குறுக்கிட்டு ஆர்வமாக.

''முதலில் நான் மறுத்து விட்டேன். அடுத்த நாள் நித்தியாவே என்னைக் கண்டு தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது என்னால் மறுக்க முடியவில்லை. ஒரு பெண் மனந்திறந்தும் நான் கல்லாய் உறைவது எப்படிச் சொல் பார்ப்போம்'' என்று திவ்யாவிடமே நியாயம் கேட்டான் கரன்.

''அப்ப அவள் முந்திவிட்டாள் எண்டு சொல்லுறியளோ'' என்றாள் திவ்யா.

''என்ன சொல்லுறாய்?''

''ஐ மீன்.. உங்களை முந்திவிட்டாள் எண்டனான்'' எனக் கூறிச் சமாளித்தாள்.

அன்று முழுவதும் அவளுக்குப் படிப்பே ஓட்வில்லை. நாட்கள் செல்லச் செல்ல கரனுக்கும், திவ்வியாவுக்கும் இடையிலான நட்பில் விரிசல் ஏற்பட்டது. தான் இன்னொருத்தியின் காதலனுடன் எப்படிக் கதைப்பது என்ற தப்பெண்ணம் அவளுக்குள் உட்புகுந்து கொண்டது. அத்துடன் தனது காதலன் வேறு பெண்களுடன் சிரித்துப் பழகுவதை எந்தப் பெண்தான் விரும்பி ரசிப்பாள்? என எண்ணி திவ்யா தானாகவே மெல்ல மெல்ல தனது நட்பை மிகவும் கஷ்ரப்பட்டு விடுவித்துக் கொண்டாள்.


நாட்கள் நகர்ந்தன.... நீண்ட நாள் இடைவெளியின் பின்பு ஒரு நாள் திவ்யாவின் காதுகளுக்கு ஒரு செய்தி கிடைத்தது. கரனுக்கும், நித்தியாவுக்கும் மனவிரிசல் என்றும், அவர்கள் இப்போது ஒருவரை ஒருவர் சந்திப்பது, கதைப்பது இல்லை என்றும் விசாரித்து அறிந்து கொண்டாள்.

''ஏன் என்ன நடந்தது இவாகளுக்கு?'' என்று மனதில் எண்ணியவளாக, இரகசியமாக நித்தியாவிடம் சமரசம் பேசச் சென்றாள். ஆனால் நித்தியாவோ ''உன்னால் தான் என்ரை காதல் சிதைந்தது. அவர் பெரிய ஆளோ...? அவர் இல்லை எண்டால் இன்னொருவர்... '' என்றாள் மிகவும் சாதாரணமாக. தான் சமரசம் பேசவந்தது சரசமாக முடிந்ததைக் கண்டு திகைத்தவள், ''இல்லை நித்தியா நாங்கள் நினைச்சால் ஒருவனைத் தான் நினைக்க வேணும். நீ செய்தது பிழை'' என்றாள் திவ்யா மிகவும் நிதானமாக!

''எது சரி எது பிழை என்பது எனக்கும் தெரியும். நீ எனக்குப் புத்தி கூறத் தேவையில்லை. உன்ரை வேலையை நீ பார்...'' என்று திடமாகக் கூறி விட்டாள். இதனால் மனமுடைந்த திவ்யா தன் சமரச அனுசரணை முயற்சியைக் கைவிட்டு இடைநடுவில் வீடு திரும்பினாள்.

ஆனால், தன் பெற்றோரை எதிர்க்க முடியாமலும், தன் காதலனின் மனதில் ஏற்கனவே தனக்கு முன் இன்னொருத்தி நுழைந்த விட்டதையும் அறிந்தே நித்தியா கரனைப் பிரிவதென முடிவெடுத்தாள் என்பது தெரியவந்தபோது திவ்யா வேறொருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணாக திருமண விழாவை எதிர் கொண்டு காத்திருந்தாள்.

****யாவும் கற்பனை*****




# தமிழரை துண்டாட முனையும் தென்பகுதி பேரினவாத சக்திகள்!

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டிருக்கும் உட்பூசல் தென்னிலங்கையில் ஏற்படுத்தி இருக்கும் நிலைமை இது.

இது இனவாதிகளுக்கு நெஞ்சில் பாலை வார்த்தது போன்ற ஒரு கதையாகிவிட்டது.

எதுவுமே கிடைக்காத வாய்க்கு அவல் கிடைத்து விட்டதைப் போன்று தென் இலங்கை பெரும்பான்மை செய்தித் தாள்களுக்கு முன்பக்கத்தில் கற்பனை செய்திகளை தலைப்பாக போடுவதற்கு சரியான வாய்ப்பாகிவிட்டது.

41 போராளிகள் தங்களுக்குள் சண்டையிட்டு மடிந்து விட்டனர். அதிலும் தலைவர் பிரபாகரனின் அணியைச் சார்ந்தவர்கள் 39 பேர், கருணாவின் அணியைச் சார்ந்தவர்கள் அறுவர் என தென் இலங்கை மக்கள் நம்பக்கூடிய விதத்தில் பத்திரிகைகள் துல்லியமான தகவல்களுடன் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளை படுபயங்கரவாதிகள், இனவாதிகள், கிருமினல்கள் என்றெல்லாம் எழுதி வந்த பத்திரிகைகள் கிழக்குத் தமிழர்களுக்கு பிரபாகரன் துரோகமிழைத்து விட்டார் என்று தற்போது நீலிக் கண்ணீர் வடிக்கின்றன.

விடுதலைப்புலிகள் பிரச்சினை உள்வீட்டுப் பிரச்சினை. தென் இலங்கை இனவாத அரசியல் கட்சிகள், அந்த பிரச்சினையை மேலும் தூண்டிவிட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

'தேசிய ஹித்தேசி இயக்கம்' இந்த பிளவை சரியாக பயன்படுத்தி விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி விடவேண்டும் என கூறியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நாட்டுப் பற்றுள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அது அறிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரச ஊடகம் ஒரு படி மேலே சென்று திருகோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பாளரை வன்னியில் வைத்து விடுதலைப்புலிகளின் தலைமை கொலை செய்து விட்டதாக செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பு தமிழர்களை பிளவுபடுத்தி பிரதேச வாதத்தைத் தூண்டி, அதில் குளிர்காய முனைபவர்கள் திருகோணமலை தமிழர்களையும் தூண்டிவிடுவதற்காக இப்படி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளனர்.

அன்று விடுதலைப்புலிகள் மீது வசை பாடியவர்கள் இன்று, தமிழர்களின் ஒற்றுமையை சீர்குலைக்க உள்ளும் புறமும் திட்டம் தீட்டியுள்ளனர். எனவே, பிரதேசரீதியாக பிரித்துவிட்டால் தமிழர் போராட்டத்தை ஒடுக்கி விடலாம் என்பது இந்த சக்திகளின் திட்டம். விலை மதிக்க முடியாத சொத்துக்களை, உயிர்த் தியாகங்களை செய்து தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஓர் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு தவறவிட்டுவிடக் கூடாது. தமிழர் என்ற உணர்வு மட்டும் இருந்தால் அந்நிய சக்திகள் எம்மை ஓரங்கட்டி விட முடியாது.

இனப்படுகொலை செய்யப்பட்டபோது தமிழர்கள் பிரதேசரீதியாக கொல்லப்படவில்லை. தமிழர் எந்தப் பிரதேசத்தை சார்ந்தவர்கள் என்று சிங்களவர்கள் பார்க்கவில்லை. எல்லாத் தமிழர்களும் பேதமின்றி தாக்கப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. யுத்தம் நடந்த காலகட்டத்தில் தமிழர்கள் எல்லோருமே புலிகள் என சந்தேகிக்கப்பட்டனர். தமிழர்களுக்கு என விசேட அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன. எனவே, திட்டமிட்டு தமிழர்களை துண்டாடும் சக்திகளின் வலைக்குள் வீழ்ந்துவிடக் கூடாது. பெரும் தியாகம் செய்து தீர்வை எட்டக்காத்திருக்கும் சமயத்தில் தீய சக்திகள் கடப்பாறையை தமது கையில் ஏந்தியுள்ளன.

பிரித்தாள முயலும் தென்னிலங்கை பெரும்பான்மையின ஊடகங்களின் தூண்டிலில் சிக்கிவிடக் கூடாது. தமிழர் போராட்டத்தையும் விடுதலைப்புலிகளின் சக்தியையும் இல்லாதொழிப்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் என சிங்கள பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளன. எனவே நடந்தவற்றை மறப்போம் நடக்கப் போவதை சிந்திப்போம்.

-ஆ.வரதன்-


# பழங்குடி மக்களை பாராட்டும் விழா



உலக நாடுகளில் பழங்குடி மக்கள் இன்றும் வாழ்கிறார்கள். ஆயினும் அவர்கள் ஏனைய சமூகத்தவர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களாக காடுகளில் தான் வாழ்கின்றார்கள். அத்தகைய பழங்குடிமக்களைப் பாராட்டுவதில் கொலம்பிய மக்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

பராங்கிவில்லா நகரில் யுனெஸ்கோ நிறுவனம் அண்மையில் நடத்திய கலைவிழாவில் பழங்குடி மக்களைப் போற்றிப்பாராட்டும் விதத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பழங்குடிமக்கள்போல வேடம் பூண்ட கலைஞர்கள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்து விட்டார்கள்.

# பெங்களூரில் நடமாடும் பாகிஸ்தான் ஜனாதிபதி



பாகிஸ்தான் ஜனாதிபதி பர்விஸ் முஷாரப் ஒரு மோட்டார் சைக்கிளில் அமர்ந்து தனது கையை உயர்த்தி ஆரவாரம் செய்யும் இந்தக்காட்சியை பெங்களூர் வீதிகளில் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது. தீபத் திவாகர் என்னும் இந்திய நடிகரே இவ்வாறு அசல் முஷாரப் போல் காட்சி தருகிறார்.

அண்மையில் இந்தியாவில் வெளியிடப்பட்ட ''அக்னிபன்ஸ்'' என்னும் திரைப்படத்தில் நடிகர் தீபக் பாகிஸ்தான் ஜனாதிபதியின் வேடம் தாங்கியிருக்கிறார். இந்தியாவில் இது தேர்தல் காலமாக இருப்பதால் தீபக்கை அரசியலுக்கு இழுக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மசாலா மிக்ஸ்

# அம்பலத்திற்குவரும் ஆடம்பரக் கார்கள்



மேல் நாடுகள் காலத்திற்குக் காலம் புதிய ரக ஆடம்பரக் கார்களை அறிமுகப்படுத்தத் தவறுவது இல்லை. இத்தாலியில் உருவாக்கப்பட்டுள்ள ஜியுஜியாரோ ஸ்போர்ட் காரின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காணலாம். புதிதாகத் தயாரிக்கப்படும் ஆடம்பரக் கார்கள் அம்பலத்திற்கு வருவது ஜெனிவா நகரில்தான். 900 ஆடம்பரக்கார்கள் ஜெனிவா மோட்டார் கார்கள் காட்சியில் மக்களைக் கவர்ந்து வருகின்றன.

# கிராமக்கலைகளுக்கு பிரேஸில் தரும் மதிப்பு



*நாகரீகத்தில் உச்ச நிலையில் இருக்கும் நாடுகள் தமது கிராமக்கலைகளுக்கு மதிப்பு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. பிரேஸில் நாட்டில் கிராமக்கலைகள் தேசிய விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. பிரேஸில் நாட்டில் சம்பா கலாசாலையில் கிராமக்கலைகளுக்கென கல்விப் பீடங்களே இருக்கின்றன. ரி யோடி ஜனீரோ நகரில் பிரேஸில் கலைஞர்கள் கிராமிய நடனம் ஆடும் காட்சி இது.*


## உங்கள் நிம்மதியான வாழ்வுக்கு

## Royal Park

- காணிகள் சியம்பலகஸ் தொட்டுவ நகரத்திற்கு
- நாரம்மல கட்டுபொத்த பிரதான வீதிக்கு
- மதீனா முஸ்லிம் தேசிய பாடசாலைக்கு

} அருகாமையில்

- காணியின் ஒருகரை அழகிய குளத்தினை அண்டியதாகும்
- காணி உறுதிகள் எந்தவித சட்டச் சிக்கல்களும் அற்றவை

அடிப்படையில் இக் காணி ஓர் தென்னந்தோட்டம் ஆகும். எனவே, இக் காணியை உங்களது கனவு இல்லத்தினை அமைத்துக் கொள்ளவோ அல்லது உங்கள் எதிர்கால வருமானத்திற்கான சொந்த முதலீடு ஆகவோ பயன்படுத்தலாம்.

வட்டி இல்லா இலகு தவணை கொடுப்பனவின் மூலம் உங்களது காணியை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.
ஒரு பேர்ச் காணியின் விலை ரூபா 9,000இல் இருந்து ஆரம்பமாகின்றது.



100 Blocks Sold Out


Only 50 Blocks Available

Asian Finance Ltd

Asian Finance Limited
*Head Office:*
55 1/1, First Floor, Iceland Building,
Galle Road, Colombo - 03
Tel : 2438141
*Branch:*
140, Colombo Road,
Kurunegala.
Tel: 037 2231332 / 2220595 / 2224781

தொடர்புகளுக்கு: றஸ்ஹமான் 078 8913038

# நெட் குறும்பு




யாரடித்து நீ அழுதாய்
அடித்தாரை சொல்லி அழு
ஆக்கினைகள் செய்திடுவோம்—

## ஜோக்

''ஏங்க, இந்த மழையில் வீட்டு ஓரமெல்லாம் ஒழுகுது கொஞ்சம் சிமெந்து வைச்சுப் பூசுங்களேன்'' என்றாள் மனைவி.

பேப்பர் படித்துக்கொண்டு இருந்த கணவன் கோபமாக ''என்னை என்ன மேசன் வேலை செய்கிறவன் என்று நினைத்தாயா?'' என்று கத்திவிட்டு பேப்பரில் மூழ்கி விட்டான்.

கொஞ்சம் நேரம் கழித்து மனைவி ''ஏங்க இந்தக் குழாய் லீக் ஆகுதே! அதைக் கொஞ்சம் அடைத்துக் கொடுங்களேன்'' என்றாள். கணவன் எரிந்து விழுந்தான். ''என்னை என்ன பைப் திருத்துபவன் என்று நினைச்சியா'' என்றான்.

சிறிது நேரம் கழித்து மனைவி மீண்டும், ''தோட்டத்துப் புல்லெல்லாம் கன்னா பின்னா என்று வளர்ந்து கிடக்குது. கொஞ்சம் வெட்டுங்களேன்'' என்றாள். கணவனுக்கு ஆத்திரம். ''என்னை என்ன தோட்டக்காரன் என்று நினைத்தாயா?'' என்று சொல்லி விட்டு விருட்டென்று எழுந்து வெளியில் போய்விட்டான்.

இரவு அவன் வீடு திரும்பியபோது சுவர் பூசப்பட்டிருந்தது, குழாய் அடைக்கப்பட்டிருந்தது, புற்கள் வெட்டப்பட்டிருந்தன! ஆச்சரியமாக மனைவியைப் பார்த்தான்.

''யார் செய்தது இத்தனை வேலைகளையும்?'' என்று மனைவியிடம் கேட்டான். ''பக்கத்து வீட்டுக்காரர்தான்'' என்றாள் மனைவி.




''என்ன கூலி கொடுத்தாய்?'' என்று கேட்டான் கணவன். ''சமைத்துப் போடச் சொன்னான். இல்லாட்டி, அவன் கூட ஒரு நாள் இருக்கச் சொன்னான்'' என்றாள் மனைவி.

''சரி அப்ப என்ன சமைச்சுப் போட்டே?'' கணவன் கேட்டான்.


மனைவி அமைதியாகப் பதில் சொன்னாள். ''நான் என்ன சமையல்காரியா அவனுக்கு சமைச்சுப்போட?''

# தலைகீழ் ஓவியம்



அருகே உள்ள ஓவியத்தைப் பாருங்கள் — பூனைகளின் படங்களைக் கொண்டே கீறப்பட்ட பூனைகளின் படங்கள் தெரிகின்றனவா? அதாவது சில பூனைகள் படத்தில் தெரிகின்றன. அந்த பூனைப்படங்களின் ஓரங்களை பார்த்தால தலைகீழாக இன்னும் சில பூனைகள் தெரிகின்றனவா..?

# ஒளிந்திருக்கும் ஓவியம்



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள் முயல் ஒன்று தெரிகிறது. ஆனால், கொஞ்சம் சரித்து பிடித்துப் பாருங்கள். வாத்து ஒன்றும் தெரியும்.


# சத்தம் இல்லாத சிரிப்பு



படத்தில் இருப்பவர் எவ்வாறு தலைகீழாக நிற்கின்றார் என்று சிந்தித்து சிரியுங்கள்.

# கண்ணாமூச்சி

இந்த H களில் எந்த H கள் முன்னே இருக்கின்றன? எந்த H கள் பின்னே இருக்கின்றன?



# நெட் குழப்பம்



அருகே உள்ள படம் ஓர் மண்டை ஓட்டினைப் போல் உள்ளதுவென நினைத்து ஏமாந்து விட்டீர்களா? அது ஓர் அழகிய பெண்மணி அலங்கார மேசையின் முன்டதாக அமர்ந்திருக்கும் காட்சி.

# பரத நாட்டிய அரங்கேற்றம்





நடன ஆசிரியை திருமதி துஸ்யந்தி வேலுப்பிள்ளையின் மாணவியான செல்வி நாகலோஜி விஜயசிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப்பேராசிரியர் சிவலிங்கநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக வவுனியா அரச அதிபர் கே.கணேஸ், பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன், விபுலானந்தர்இசைநடனக் கல்லூரியின் முன்னாள்அதிபர்கமலா ஞானதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக தமிழ்மணி அகளங்கன், பேனாட், ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் பக்க வாத்தியக் காரர்களாக பாட்டு- கலாவித்தகிகள் திருமதி வதனி ஸ்ரீதரன், கீர்த்தனா ஸ்ரீ தரன். மிருதங்கம் - வித்துவான் கந்தையா கணேஸ்வரன். புல்லாங்குழல் - மகாமுனி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேடை ஏறிய இரு நாடகங்கள்





தேசிய கலை இலக்கியப்பேரவை, அண்மையில் கொழும்பு தமிழ்சங்கத்திலுள்ள, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இரு நாடகங்களைமேடையேற்றியது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களது "உணர்வுகள் விற்பனைக்கல்ல", என்ற நாடகம் க.ஆதவனின் நெறியாள்கையிலும், குழந்தை சண்முகலிங்கத்தின் "மனத்தவம்" என்ற நாடகம் சோ.தேவராஜாவின் இயக்கத்திலும்மேடை கண்டன.

பூமி ஒரு நாளும் இவ்வளவு அழகாக இருந்த தில்லை என்ற வாசகத்தோடு விலகிய திரைமூடும்வரை பார்வையாளர்களை பரவசப்படுத்தியது எனலாம்.

படிப்பு படிப்பு எனத் துடிக்கும்சாரு, குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு வேதனையில் வாடும் பாக்கியம், தொலைக்காட்சி ஒப்பனை என அலையும் சதா, துடிப்பாட்ட சிந்தனையோடு சுற்றித் திரியும்தீபன், கூலிவேலைக்கு வந்த சுறுவல் தம்பி, வெளிநாட்டுக்கு ஆள் அனுப்பும் ஏஜென்ட் போன்ற பாத்திரங்களோடு கதை களம் கண்டது.

இடையில் ஒளியைத் தேடும் மனிதன் ஒருவன் தானே பேரொளி காட்டுவதாகக் கூறிக்கொண்டு இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம், பௌத்தம் என்று வரும் பாத்திரங்களோடு முட்டி மோதிக்கொள்கிறான். இதை ஒரு படிவமாகக் கொண்டு நெறியாளர் நாடகத்தை சிறப்பாக நகர்த்தியிருக்கிறார். சபாஷ்.

அன்பு ததும்பும் உலகமாக இது இருக்க வேண்டும். பூமியெங்கும் வசந்தங்கள் மலர வேண்டும். யுத்தம் ஒழிய வேண்டும். மனிதம் மலர வேண்டும் என்பதை "உணர்வுகள் விற்பனைக்கு அல்ல" என்றநாடகம்சிறப்பாக உணர்த்தியது.

இதில் பேராதனை பல்கலைக்கழக மாணவிகளான மா.ரூபவதனன், சுதாகரன், அ.சனஸ்தனன், சௌ.சரவணதீபன், இ.சதீஸ், கி. சுதர்ஷன், ப.குணரட்னம், ஜெ.ஆன், யாழினி, க.சுதாஜினி, பா.சுலோஜனா ஆகியோர் திறம்படநடித்தனர். பின்னணி இசையை சி.சிவசங்கர், சி.பிரசாத வழங்க பாடல்களை மா. ரூபவதனன், பா. சுலோஜனா ஆகியோர் பாடியிருந்தனர். நிறைவான நாடகம் ஒன்றைப் பார்த்த பரவசம் ரசிகர்களுக்கு.

ஆறுமுகம் தங்கவேலாயுதம்



கலைமணி ஆர்.மணிமேகலையின் தயாரிப்பில் சிலோன் யுனைட்டட் ஆர்ட்ஸ் டேஜ் குழுவினர் வழங்கிய மௌனத்திரை நாடகத்தின் சில காட்சிகள்.

கலாபூசனம் ஜோபுநஸீர், கலைஞான வேந்தன் கே. மோகன்குமார், கலைமணி கமலஸ்ரீ மோகன்குமார் ஆகியோர் தோன்றும் காட்சியை படத்தில் காணலாம்.



2003ஆம் ஆண்டு இடம் பெற்ற அகில இலங்கை தமிழ் தினப் போட்டியில், கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள், குழுப்பாடலுக்கான முதலாவது பரிசையும் விருதையும் பெற்றுக் கொண்டனர்.

விருது பெற்ற மாணவிகளுடன், தயாரிப்பாளரான ஆசிரியை திருமதி வசந்தமலர் செல்வ விக்னேஸ்வரனும் படத்தில் காணப்படுகின்றார்.

# மூட்டைப் பூச்சி முத்தர்



ஸ்டண்ட் அடிக்கிறதிலை உவர் மகேஸ்வரனார் வலு கெட்டிக்காரர். அதோடை எந்த விசயத்தையும் தனக்குச் சாதகமாக மாத்திப் புரட்டிப் போட்டு பேசுகிறதிலையும், அதை வைச்சுக் கொண்டு தன்ரை விசயத்தை சாதிச்சுப் போடுறதிலையும் பலே கில்லாடி பாருங்கோ.

அடுத்த முறையும் யாழ்ப்பாணத்திலை தான் தேர்தலிலை நிக்கிறது எண்டு யோசிச்சு அதிலைதான் கவனம் செலுத்தினவர். காரைநகர், குருநகர், பாசையூர் எண்டு அவரின்ர கவனம் இருந்தது. யாருக்குத் தெரியும் உப்பிடித் தமிழ்த் தேசியம் எண்ட அலை அவரை நெட்டித் தள்ளிக்கொண்டுபோய் கொழும்பிலை நிப்பாட்டும் எண்டு?

யாழ்ப்பாணத்திலை நிக்கிற துணிச்சலிலைதான் — அங்கு ஆதரவு திரட்ட வேண்டும் எண்ட எதிர்பார்ப்பிலைதான் — மதமாற்றச் சட்டம், அது, இது எண்டெல்லாம் சத்தம் போட்டவர். இப்ப என்னடாவெண்டால் அந்தக் கூற்றே அவருக்கு பின்னாலை சுருண்டு வந்து கால் தடம் போடப் பாக்குது.

எண்டாலும் தன்ரை வழமையான வாய் வீச்சாலையும் அதிரடி நடவடிக்கையாலும் விசயத்தை நாசூக்காய்ச் சமாளிச்சுப் போட்டார்போலை கிடக்கு. கொழும்பிலை இருக்கிற தேவாலயம் ஒண்டுக்கு அவர் தன்ரை பொக்கற்றுக்குள்ளாலை எடுத்து விட்ட அஞ்சு லட்சம் ரூபா டொனேஷனிலை கிறிஸ்தவ சமுதாயமே அரண்டு போயிற்றுப் பாருங்கோ. அவரின்ரை அந்த அதிரடியிலை மதமாற்றச் சட்ட புஸ்வாணம் எல்லாம் ஒரே கணத்துல பலருக்கும் மறந்து போச்சு; மறைஞ்சும் போச்சு!

அது மட்டுமில்லை, அவர் போனமுறை யாழ்ப்பாணத்திலை விட்ட கயிறையே இப்பையும் கொழும்பிலையும் விடப்பாக்கிறார் எண்டு விசயம் தெரிஞ்ச பத்திரிகைக்காரர் ஒருவர் சுட்டிக் காட்டினார்.

போனமுறை அவர் யாழ்ப்பாணத்திலை தேர்தலிலை நிக்கேக்கை உவர் டக்ளஸார் வடக்கு புனர்வாழ்வு அமைச்சராக இருந்து அரசாங்கப் பணத்தை தன்ரை சொத்துப் போல வாரி இறைச்சுக் கொண்டு வாக்குச் சுருட்ட முயற்சி பண்ணிக் கொண்டிருந்தார் எண்டது உங்களுக்கு நினைவு இருக்கும் பாருங்கோ.....!

அந்த நேரத்திலை, தேர்தலிலை தாங்கட கட்சி வெண்டு ஆட்சிக்கு வந்ததும் வடக்கு புனர்வாழ்வு அமைச்சுப் பதவி மகேஸ்வரனாருக்குத்தான் எண்டு அப்ப எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அறிவிச்சுப் போட்டார் எண்ட மாதிரி ஒரு கதை விட்டவர். அப்படி ரணில் விடாத அறிக்கை ஒண்டை ரணில் விட்டமாதிரி பேப்பரிலை வரப் பண்ணிப் போட்டார்.

பிறகு தேர்தலிலை வெண்ட பிறகு என்ன நடந்தது எண்டது உங்களுக்குத் தெரியும் தானே! உவர் ஒற்றைக் காலிலை நிண்டும் அதை ரணிலார் குடுக்கேல்லைப் பாருங்கோ!

அப்ப... ''தேர்தலிலை வெண்டதும் நான் தான் வடக்குப் புனர்வாழ்வு அமைச்சர், நான் தான் உங்களுக்குநிதியைக்கொட்டிக்கொடுக்கப் போறன்'' எண்டு கதைவிட்டு யாழ்ப்பாணத்தாரின்ரை வோட்டைத் தனக்கு விழ வைச்ச மனுசன், இப்ப அந்த ட்ரிக்சை கொழும்பிலையும் விடுகுது பாருங்கோ. என்ன எண்டாலும் விளங்காத சனம்தானே........!

கொழும்பிலை இருக்கிற தமிழருக்குப் பெரிய கஷ்டம் உந்த வீட்டுப் பிரச்சினை தான். ஆயிரமாயிரமாய்க் கொட்டிக் கொடுத்தும் அந்து சந்திலை, இருட்டுக் குகைக்குள்ளை, இட்டு முட்டுக்குள்ளைதான் அவையள் அன்றாடம் சீவிக்கினம்.

உந்த விடயத்தை வைத்துக் கொண்டு நெத்திப் பொட்டிலை அடிக்கிற மாதிரி விசயத்தை நாசூக்காக நகர்த்திறார் மகேஸ்வரனார்.

அடுத்த அரசிலை தனக்குத்தான் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுத் தரப் போறதாய் பிரதமர் ரணில் அறிவிச்சுப் போட்டார் எண்டு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். இதைக் கேட்ட உடனே கொழும்புத் தமிழ்ச் சனமெல்லாம் சலசலத்துப் போய் நிக்குதுகள்.

மகேஸ்வரனாருக்கு வாக்குப் போட்டு அவரை எம்.பியாக்கினால்தான் அவர் வீடமைப்பு மந்திரியாய் வந்து கொழும்பிலை பிளட்டுகளைக் கட்டிக் குவிச்சு எங்கடை கஷ்டத்தையெல்லாம் தீத்துப் போடுவார் எண்டு ஒரே பேச்சுப் பாருங்கோ இங்கு.

உந்த மனுஷன் செய்தாலும் செய்து போடுவான். காலங்காலமாய் கொழும்பிலையே எம்.பியாக வேண்டும் எண்ட எண்ணத்திலை தலையாலையாவது கிடங்கு கிண்டி, பிளட்டுகளைக் கட்டிக் குவிச்சாலும் ஆச்சரியப்படுறதுக்கு இல்லை. வெட்டிச் சாய்க்கக்கூடிய ஆள்தான். எண்டாலும் அவருக்கு இன்ன மந்திரிப்பதவி கொடுப்பன் எண்டகதையை பிரதமர் ரணிலைக்கொண்டு சொல்லுவிக்கிறதுதான் நல்லது.

இல்லையெண்டால் அவரின்ரை அறிவிப்பு ஏதோ காதிலை பூச்சுத்திற வேலையெண்டுதான் மக்களுக்குப் படும். அதுவும் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலை இதே போல ஸ்டண்ட் அடிச்சு, உண்மை அம்பலமான நிலையில அதே மாதிரிக் கதையை திரும்ப எடுத்து விடுறது மக்களுக்கு சந்தேகத்தை எல்லோ கிளப்பும்? — அது உண்மையாக இருந்தாலும்.

அதாலை, கொழும்புத் தமிழருக்கு வீடு கட்டித்தர்ர பொறுப்பை தன்ரை புதிய அரசிலை மகேஸ்வரனாருக்குத்தான் கொடுப்பன் எண்டு ரணிலைக் கொண்டு ஒரு தடவை உவர் பகிரங்கமாக அறிவிக்கச் செய்யிறது நல்லது பாருங்கோ........!

என்ன எண்டாலும் ஒரு விசயம். மனுசன் கொழும்பிலை எம்.பியானால் தமிழருக்கெண்டு விடாமல் சத்தம் போட்டு ஏதும் செய்து கொண்டிருக்கும் எண்டது மட்டும் நிச்சயம்.

ஆனால், அவர் எம்.பியானால் வழமை போலை ரணிலுக்குத் தலையிடி எண்டதும் உறுதி.

உவரைத் தன்ரை பக்கத்திலை வைச்சுக் கொண்டு பிரதமர் பட்டபாடு தெரியும் தானே!

* * *

சூடா நாட்டுத் தமிழ்க் கூட்டமைப்புப் பிரசாரம் கிழக்கு நிலைமையாலை அப்படியே தணிஞ்சு போச்சுது பாருங்கோ. அது தான் கவலை.

'தமிழர் தாயகம்' எண்ட அடிப்படைக்கோட்பாட்டிலை — அடி மடியிலை — கை வைச்சுப் போட்டாங்கள் எண்டுதான் சனம் புழுங்குதுகள்.

கிழக்கு வேட்பாளர்மாருக்குத்தான் திரிசங்கு நிலை. மக்களிட்டை உண்மையைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் கிடந்து தவிக்கினம்.

உதுக்குள்ள பத்திரிகைக்காரரின்ரை — குறிப்பாய் கிழக்குப் பத்திரிகைக்காரரின்ரை — பாடும் பெரும்பாடுதான்.

கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வராமல் கூட்டமைப்புப் பிரசாரம் திரும்பவும் சூடு பிடிக்குமா எண்டது சந்தேகம்தான்.

எண்டாலும் குடாநாட்டிலை மட்டும் கூட்டமைப்புப் பிரசாரம் தொஞ்சு போகையிலை எண்டு தெரியுது. மாற்றுக் கட்சிக்காரரும் — சங்கரியாரும் கூட — கிட்ட மட்டிலை தன்னும் இல்லை எண்டதுதான் இப்பத்தையான் நிலவரம்.

ஏற்கனவே சங்கரியரின்ரை பட்டியலை ஒருவர் கம்பி நீட்டிப் போட்டார் எண்ட கவலை அவருக்கு. எண்டாலும் பின்னாலை நெட்டித் தள்ளுறவையின்ரை உஷாரிலை உருவேறி நிக்கிறார் எண்டு கதை.

புலிகளின் பிரதேச மக்களுக்கு வாக்களிக்கிற வழி செய்யப் போகினம் எண்டதும் ஓரளவு உறுதியாயிட்டுது போலை. அது பலரின்ரை வயித்திலை புளியை கரைச்சிருக்காம்.

என்ன மாதிரி அள்ளிப் போட்டுத் தொலைக்கப் போகிறாங்களோ எண்டு தியேட்டர்காரர் முணுமுணுக்கினம்.

போனமுறை தாங்கள் அள்ளிப் போடுறதுக்காக, வாக்களிக்க வந்தவையளிட்டை ஐடிண்டிக் கார்ட் கேட்கக் கூடாது எண்டு அடம்பிடிச்சவையள் எல்லோ....! இப்ப கதை மாறி நடக்கப் போகுது எண்டு பயம். எண்டாலும் வாக்குப் போட வாறவையளின்ரை ஐடிண்டிக் கார்ட்டுகளை கேட்டு வாங்கி, வாக்காளர் அட்டையளோடை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் வாக்களிக்க விட வேணும் எண்டு இப்ப மட்டும் எப்படிக் கேக்கிறது? அதுதான் ஒரே முமுசா முழுசுகினம் பாருங்கோ!

# 500 விக்கெட் சாதனையை எட்டிப் பிடித்த ஷேன் வோர்ன்!



ஒரு வருடகாலத் தடையின் பின் சர்வதேசக் கிரிக்கெட் உலகுக்கு மறு பிரவேசம் செய்த அவுஸ்திரேலியாவின் சுழல்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தனது திறமையை மீண்டும் நிரூபித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஐந்நூறு விக்கெட்டுக்களை சரித்தவர்கள் வரிசையில் இரண்டாவது வீரர் என்ற பெருமையை அவர் எட்டியுள்ளார்.

காலியில் இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளன்று இலங்கை அணித் தலைவர் ஹசான் திலகரத்னவின் விக்கெட்டைச் சரித்ததன் மூலம் இந்தச் சரித்திரச் சாதனையை அவர் எட்டினார்.

இதற்கு முன் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கொட்னி வோல்ஷ் மாத்திரமே டெஸ்ட்

## விளையாட்டுச் செய்திகள்!

கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்டுக்களுக்கு மேல் சரித்து சாதனை படைத்திருந்தார்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முன்னர் கொட்னி வோல்ஷ் படைத்துச் சென்ற 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை முறியடிப்பதுதான் ஷேர்ன் வோனின் தற்போதைய இலக்கு. அதனை எட்டித் தாண்டுவதற்கு அவர் மேலும் 19 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும்.

34 வயதான ஷேன் வோர்னின் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கை இன்னும் நீண்ட காலம் நீடிக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதற்கு முன்னர் கொட்னி வோல்ஷின் சாதனையை முறியடிப்பது மட்டுமல்லாமல், தனது புதிய சாதனையை அண்மைக் காலத்தில் வேறு பந்து வீச்சாளர்கள் எவரும் எட்ட முடியாத உச்சத்தில் கொண்டு போய் நிறுத்த வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கின்றது. அதற்காக அவர் துடிப்பதும் தெரிகின்றது.

ஆனால், இந்தச் சாதனைப் பட்டியலில் அவருக்கு அருகில் 32 வயதான இலங்கைப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நெருக்கமாக நிற்கின்றார். முத்தையா முரளிதரனுக்கு இன்னும் குறிப்பிடத்தக்க அளவு பிரகாசமான எதிர்காலம் இருக்கின்றது. அது மட்டுமல்ல, அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தும் நல்ல தரத்திலும் (Form) அவர் இருக்கின்றார்.

எனவே, வோல்ஷின் சாதனையை வோர்ன் முறியடித்தாலும் அவரது புதிய சாதனையும் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கும் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

108 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியே ஐந்நூறு விக்கெட் வீழ்த்தும் பெறு பேறை ஷேன் வோர்ன் சம்பாதித்துக்கொண்டார். ஆனால், 86 டெஸ்ட்டுகளில் மட்டும் விளையாடி 496 விக்கெட்டுக்கள் என்ற — வோனுக்கு நெருக்கமான — நிலையை முரளிதரன் எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எப்படிப் பார்த்தாலும் சாதனை விவகாரத்தில் ஷேன் வோர்னுக்கு நெருக்குதல் — தலையிடி — தரும் வகையில் பக்கத்தில் தான் நிற்கின்றார் இலங்கையின் சுழல்பந்து நட்சத்திரம் முரளிதரன்.

கடந்த வருடம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி சமயம், ஊக்க மருந்து உட்கொண்ட குற்றச்சாட்டில் வகையாகச் சிக்கினார் வோர்ன். அதனால் தண்டனையாக ஒரு வருட காலம் கிரிக்கெட் வாழ்விலிருந்து இடை நிறுத்தப்பட்டார்.

இப்போது ஒரு வருட அஞ்ஞாத வாசத்துக்குப் பின்னர் மறுவாழ்வு பெற்று வந்திருக்கும் அவர், இலங்கை அணியுடன் நடந்த முதல் டெஸ்ட்டிலேயே தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இலங்கையின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 10 விக்கெட்டுக்களை சரித்து தனது சேவை ஆஸி. அணிக்கு மேலும் தேவை என்பதை உணர்த்தினார் அவர்.

தற்போது டெஸ்ட் ஆட்டங்களில் 501 விக்கெட்டுக்களையும் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களில் 291 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார் அவர்.

அவரின் முதலாவது டெஸ்ட் பிரவேசம் 1991 — 92 ஆம் ஆண்டுகளில் சொந்த நாட்டில் — சிட்னியில் — இந்திய அணிக்கு எதிரான போட்டியுடன் ஆரம்பமானது.

அந்த முதல் டெஸ்ட் ஆடடத்திலேயே பெரும் இக்கட்டை எதிர்நோக்கினார். 21 வயது இளம் காளையாகக் களம் இறங்கிய ஷேன் வோர்னின் பந்து வீச்சை இந்திய அணியினர் விளாசித் தள்ள 150 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரமே அவரால் கைப்பற்ற முடிந்தது.

அதன் பின் 1998 ஆம் ஆண்டும் வோர்னுக்கு சோதனை ஒன்று வந்தது. தனது வலது தோள்பட்டையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை காரணமாக அவர் பந்து வீசப் பெரிதும் சிரமப்பட்டார்.

இறுதியாக அவர் தாண்டிய இக்கட்டு ஊக்க மருநதுக் குற்றச்சாட்டின் பேரிலான ஒரு வருடகாலத் தடை.

இவற்றை எல்லாம தனது மனோ வலிமையால் வெற்றி கொண்ட ஷேன் வோர்ன இன்று சாதனையை நோக்கிய பயணத்தின் விளிம்பில் நிற்கின்றார்.

அவுஸ்திரேலிய அணியின் பல வெற்றிகளுக்குக் காரணமாக இருந்த — இருக்கும் — ஷேன் வோர்னின் சாதனையை நோக்கிய பயணத்தில் நேரடிப் போட்டியாளராக விளங்குபவர் நம்மவர் முத்தையா முரளிதரன்.

நடந்து முடிந்த டெஸ்ட்டில் ஷேன் வோர்ன் பத்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார் என்றால் முரளியோ 11 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இவர்கள் இருவரில் 519 விக்கெட் என்ற சாதனையை முதலில் எட்டப் போவது யார்? அதன் பின்னரும் யாருடைய சாதனை நின்று நிலைத்து நீடிக்கப் போகிறது?

காலம்தான் பதில் கூற வேண்டும்.

-தனுராஜ்-



# அரசியல் அம்பலம்

## நாட்காலிக்கு ஓட்டா? ஐயோ ஆளை விடுங்க!

மலையகத்தில் உச்சிப் பிள்ளையார் இருக்கும் நகரில், சர்வதேச மகளிர் தினம் ஊவா வேலவனின் வழிகாட்டலில் வெகு கோலாகலமாக நடைபெற்றது.

மலையகத்தின் பல பாகங்களிலும் இருந்து மங்கையர் கூட்டம் அங்கே மடை திறந்து விட்டது போல் கூடிவிட்டது.

கூட்டத்தைக் கண்டதும் நண்பருக்கும் குஷி கிளம்பி விட்டது. அத்தனையும் தாய்க் குலம் அல்லவா? மெதுவாகப் பேச்சைக் கொடுத்தார். குடும்ப விவகாரங்கள் வெளியே வர, ஒரு பெண்ணை சிநேகம் பிடித்தால் போதும் என்பது நண்பருக்குத் தெரியாதா என்ன?

''அம்மா நீங்கள் எல்லோரும் இப்படி ஆர்வத்துடன் வந்து கூட்டங்களில் கலந்து கொள்வதைப் பார்த்தால் சந்தோஷமாக இருக்கு'' என்றார்.

''ஆமாம் சார். எல்லோரும் எடை போடுவது மாதிரி இல்லை. இப்ப நாங்கள் பேப்பர் படிக்கிறோம். ரேடியோ கேட்கிறோம். டி.வி. பார்க்கிறோம். இதனால், நாட்டு நடப்பையும் அறிந்து கொள்கிறோம். எங்களுக்கும் உலகம் தெரியும்'' என்றார் ஒரு வாயாடிப் பெண்.

''அடடே, அப்படி என்றால் நம்ம நாட்டு அரசியல் விவகாரங்கள் எல்லாம் நல்லாப் புரிஞ்சு வைச்சு இருக்கீங்க இல்லையா?'' என்றார் நண்பர்.

''என்னசார் அப்படிக் கேட்டுவிட்டீங்கள். அண்மையில் நடந்த ஒரு விசயத்தை சொல்றேன் கேளுங்க'' என்றார் அந்தப் பெண்.

ஓகோ! ஏதோ நல்ல விடயம் ஒன்று வெளி வரப் போகின்றது என்ற ஆவலில் நண்பரும் காதைத் தீட்டிக் கொண்டார்.

''அப்படியா சங்கதி, எல்லோருக்கும் விளங்கிற மாதிரிச் சொல்லுங்க'' என்றார் நண்பர்.

''கேளுங்கள் சார். இப்ப முன்பின் தெரியாத ஆட்கள் எல்லாம் எங்களைப் பார்த்து சிரிக்கிறாங்க.... சுகம் விசாரிக்கிறாங்க. ஒரு ஆள் வந்து நாங்க உங்களுக்கு நாட்காலி கொடுத்தோம், கூரைத் தகடு கொடுத்தோம், சைக்கிள் கொடுத்தோம், நீங்கள் எல்லோரும் எங்களுக்கு மட்டும்தான் ஓட்டுப் போடவேண்டும்'' என்று கேட்டார்.

''ஆமாங்க ஐயா! உங்கட நாட்காலியும், சைக்கிளும் எங்கள் தலைவர் வீட்டில ரொம்ப அழகா இருக்கு. நாட்காலிகளில அரைவாசியை விற்றுவிட்டார். சைக்கிளை தலைவர் மகன் குஷியாக ஓட்டித்திரிகின்றான். அதனால் நீங்கள் போய் தலைவரிட்ட ஓட்டுக் கேளுங்க. அவுங்க குடும்பம் மட்டும் ஓட்டுப் போடும் என அனுப்பி விட்டோம். எங்களை எவரும் ஏமாற்ற முடியாது. நாங்கள் விரும்பினவங்களுக்குத் தான் ஓட்டுப்போடுவோம்'' என்றார் அந்தப் பெண்.

அப்படீன்னா நாட்காலி சின்னத்தின் மீது இருந்த வெறுப்பை நாட்காலி கொடுத்தவர்கள் மீது கொட்டி விட்டார்களோ? பாச்சா பலிக்கவில்லை போலும்.

## முன்வரிசையும், பின்வரிசையும் கூட்டுப் பல்ட்டி

''என்ன நானா, அழகான நானா, பட்டியலில் பேரு இல்லாம போனா, கை விட்டாரே நோனா''

இப்படி ஒரு கவிதையை தொலைபேசியில் பாடினார் பல்கலை வேந்தனான சகல கலா வல்லவன் பன்மொழிப் பண்டிதர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதே. ஏதோ விசயம் இருக்கும் என்று தலை நகரில் அனைவரும் தலைவணங்கும் அந்த நானாவுடன் தொடர்பு கொண்டோம்.

''என்ன தம்பி செய்யிறது? நாங்க எப்பவுமே பட்டம் பதவிக்கு ஆசைப்படாதவர்கள். லிப்டன் சுற்று வட்டம் தான் எப்பவும் நிரந்தரமானது. ஆனால், இந்த அம்மா இப்படிச் செய்யலாமா? இதுதான் மனசுக்குக் கொஞ்சம் சங்கடம்'' என்றார்.

''அப்படி இந்த அம்மா உங்களுக்கு என்ன செய்து விட்டார்?'' என்று தூண்டியைப் போட்டார் நண்பர்.

''என்னை விடுங்க தம்பி. முன்னாள் அலரி மரத்தடி நாயகனும் களுத்துறை மங்கூஸ் தோட்டக்காரனுமான அந்த பெரிய மனுசனையும் மறந்து விட்டா.''

''அதோட இல்லையே! ஏரிக் கரையின் அதிபராக இருந்த மனுசனுக்கும் இந்தக் கயிறைக் கொடுத்து விட்டார். அந்த மனிதனும் ஏரிக்கரை வீடும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டுப் போய் விட்டார்'' என்று மேலும் கவலைப்பட்டார் அந்த தலைமையான நானா.

''அப்படியானால் இந்த அதிருப்தியாளர் பட்டியல் வளர்ந்து கொண்டே போகின்றது என்கின்றீர்களா?'' என மீண்டும் கிண்டிய நண்பர், ''அது சரி உங்களுடைய சகாக்கள் முன்னாள் நிதிப்பொறுப்பாளரான மாத்தறையாருடன் ஏதோ பேச்சு நடத்தினார்களாமே....'' என்றார்.

''என்ன தம்பி என்னையும் மாட்டி விடப் பார்க்கின்றீரே! நான் அப்படி இல்லை. என்ட சப்போட்டர்ஸ்தான் கொஞ்சம் கொதியா இருக்காங்க. இன்னொரு சங்கதி தெரியுமா?''

''இந்தப் பின் பெஞ்சு ஆட்களுக்கும் போஸ்டர் காரங்களுக்கும் ஒரே போர்க்களம். அதனால், அவர்கள் இப்ப தேர்தல் பிரசார வேலைகளில் அக்கறை காட்டுவதும் இல்லையாம்.'' என்று நாம் கேட்காமலே உளறி விட்டார் நானா.

''பின் பெஞ்சி ஆட்கள்தானே அம்மா கூட்டத்துக்கு கூட்டம் சேர்ப்பவர்கள். இனி எப்படி கூட்டம் வரும்? கூட்டம் சேராததினால் தான் அதிகார அம்மணியும் இனி தேர்தல் மேடையில் ஏறுவதில்லை என்று முடிவு செய்து விட்டாரோ'' என்றார் நண்பர்.

''என்ன தம்பி நீங்களும் சும்மா விடமாட்டீங்க போல இருக்கே. முன்பே பின் பெஞ்சில் இருந்தவர்கள் சிவப்புச் சட்டைக்காரர்களினால் வீட்டுக்கே அனுப்பப்பட்டு விடுவார்களோ என்ற ரீதியில் இருக்கின்றனர்.'' என்றார் நானா.

அப்படியானால் நீல மேகத்தை சிவப்பு போஸ்டர்கள் மறைத்து விட்டன போலும். முன் பெஞ்சும், பின் பெஞ்சும் சேர்ந்து கூட்டுப் பல்ட்டி அடித்து விட்டாலும் சந்தேகம் இல்லை. இதுவும் சுவாரஸ்யமாகத்தான் இருக்கு.

## ஊருக்கு உபதேசம் செய்யும் சங்கர சங்கர சம்போ!

''உந்த மனுசனும் வெட்கம் கெட்டுப் போய் ஐக்கியம் பற்றிப் பேசவந்திட்டார். இவருக்கு என்ன யோக்கியதை இருக்கு, அடுத்த வீட்டு ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதற்கு?''

இப்படி காரசாரமாகப் பொரிந்து தள்ளினார் வட புலத்தில் இருந்து வந்த அந்த வாத்தியார்.

''அப்படி என்ன ஐயா நடந்து விட்டது?'' என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்டார் நண்பர்.

''சார் இந்தப் பேப்பரைப் பாருங்கள். தம்பிமார் மத்தியில் தப்பபிப்பிராயமும் இடைவெளியும் ஏற்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ் சமூகத்துக்கே ஒரு தலைகுனிவை ஏற்படுத்தி விடும் என்று அறிக்கை விடுத்துள்ளார் பாருங்கள்'' என்றார் அந்த வாத்தியார்.

''என்ன ஐயா இதைப் போய் பெரிதாக அலட்டிக் கொள்கின்றீர்கள். அவரும் ஏதோ உணர்ச்சி வசப்பட்டுத்தானே அறிக்கை விட்டுள்ளார்'' என்று நீட்டி விட்டார் நண்பர்.

'' சார் நீங்களும் என்ன வேடிக்கை காட்டுகின்றீர்களா? இந்த தமிழ் சமுதாய உணர்வு முன்பு எங்கே சார் போனது? தமிழ் தேசியம் என்று எல்லோரும் ஒன்று பட, இந்த மனிதன் வெட்டிக் கொண்டு தனியே போய் போட்டி போட்டாரே! அப்போ எங்கே போனது இந்த ஒற்றுமை உணர்வு?

அதோடு விட்டாரா? லண்டனில் இருந்து ஒரு துறையான மனிதனையும் தூண்டி விட்டு பெட்டிகள் போட்டு குழப்பியடிக்க முனைந்தாரே இந்த பெரிய மனிதன். அன்று இந்த ஒற்றுமை உணர்வும், பாசமும் எங்கே சென்றன?

தன்னுடைய வீட்டுக்காரரையே கட்டிக் காக்க வக்கில்லாத மனிசன் அடுத்தவன் வீட்டு குடும்பத்தில் தலையிட்டு மூக்குடைபட்ட கதைதான் இவருடையது. முதலில் இவருடைய முதுகை இவர் திரும்பிப் பார்க்கட்டும். இதைப்பற்றி நாம் பேசுவதோ அந்த மனிதன் பேரை உச்சரிப்பதோ பெரிய பாவம்'' என்று படபடவெனக் கொட்டித் தீர்த்த அந்த வாத்தியார் ரவிவர்மனின் வாகனத்தில் ஏறிப் பறந்து விட்டார்.

## சொற்சிலம்பம் போட்டி இல.99

சொற்சிலம்பம் 99 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் மார்ச் 21ஆம் திகதி ஆகும். விடைகள் மார்ச் 27 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 04ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.97க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.97

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ம | 3 ர | 4 ச | ம் | ■ | 5 ச | 6 ம |
| 7 கா | ந் | த | ம் | ■ | 8 ப | ந் | து |
| ■ | 9 த | ம் | ப | 10 தி | ■ | 11 த | ர |
| 12 அ | க | ■ | 13 வ | ரு | 14 மா | ன | ம் |
| 15 ம | தி | 16 ய | ம் | ■ | 17 த | ம் | ■ |
| ரா | ■ | ன் | ■ | 18 மோ | ர் | ■ | 19 சு |
| 20 வ | 21 ச | ன | ம் | ■ | 22 க | 23 ப | டு |
| 24 தி | கி | ல் | ■ | 25 உ | ள் | ளு | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | 8 | | ■ |
| 9 | | 10 | | ■ | | ■ | 11 |
| ■ | 12 | | ■ | 13 | | | |
| 14 | ■ | 15 | 16 | | | ■ | |
| 17 | 18 | | | | ■ | 19 | |
| 20 | | ■ | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.99

### இடமிருந்து வலம்

1. வயசு வந்ததும் பலருக்கு வதனத்தில் வரும்.
5. அரைவாசி.
6. இரும்பில் பிடிப்பது.
7. ஊறுதல்.
9. கூட்டம்.
12. நெருப்பில்லாமல் வராது.
13. பழங்காலத்து செவி வழிக் கதை.
15. சரித்திரம்.
17. பயன்படுத்துதல் / பாவனைக்கு உட்படுத்துதல்.
19. தோசை தயாரிக்கவும் இதுதான் உத்தரவு. துப்பாக்கி பயன்படுத்தவும் அதே உத்தரவுதான்.
20. தலைவன் / இடம்.
21. சத்தமிட.
22. வேகமாக.
23. தாராளமாகக் கிடைத்தல்.

### மேலிருந்து கீழ்

1. நெஞ்சுக்குப் பின்புறம்.
2. சீனி தயாரிக்க உதவும் தாவரம்.
3. இரவு அல்ல.
4. நாக்கு உணர்வது.
5. வெளுத்ததெல்லாம் இது வல்ல.
8. பிரச்சினை / சச்சரவு.
10. எதிரிகள்.
11. வணங்குதல்.
13. அசை உணவு.
14. ஒன்றைப் பயன்படுத்துதல் / துய்த்தல்.
16. ரதம்.
18. நாற்காலி.
19. தூய.
21 தற்போதைய யுகம்.

## சொற்சிலம்பம்-96 பரிசு பெறுவோர்.

1. அ.மீனலோசினி,
கிராம்புவில்,
சாவகச்சேரி.
2. ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான்,
இல.31, கல்லூரி வீதி,
திருகோணமலை.
3. பா. சைலஜன்,
முடங்கன் தோட்டம்,
அல்வாய் தெற்கு அல்வாய்.

### பாராட்டுப் பெறுவோர்

1. இ.பூர்ணலிங்கம்,
டிறைட்டன்(KO),
கொட்டகல.
2. சு. ஆறுமுகநாதன், மே/பா.கோ.நடேசபதி
தோம்புதோர் வீதி,
ஏறாவூர் – 05.
3. பா.அனோஜன்,
குமுளமுனை ம.வித்தியாலயம்,
முள்ளியவளை.
4. இ.பொன்னுத்துரை,
42 3/3, உருத்திரா மாவத்தை,
கொழும்பு – 06.
5. பொ. கோகிலா,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
6. ஜெயா ராஜரத்தினம்,
46, கோயில் வீதி,
அட்டன்.
7. க. பிரவிந்தன்,
குமுளமுனை மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.
8. பி. செல்வராணி,
மாவடி,
வட்டுக்கோட்டை.
9. கே.வி.ஜீ. பிரகாஷ்,
இல 11, இராமகிருஷ்ண கார்டன்,
கொழும்பு – 06
10. பொன். கலைவாணி,
''வாணி வதியம்'',
120, ஆண்டிமுனை, உடுப்பு.

பொது சன நூலகம்



# டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் கடைவீதிக்கும் போய்விட்டு அப்பொழுதுதான் வீட்டுக்கு வந்து அமர்ந்தார்.

''என்னப்பா தணி! ஆளு ஆளுக்கு ஓட்டு கேட்டுக்கிட்டு வாரானுங்க. கலர்கலரா நோட்டீஸ் வேற குடுத்திட்டும் போரானுங்க. அதை எல்லாம் அப்படியே மேசையில வச்சிருக்கேன்பாரு'' என்று கூறிக்கொண்டே ஆத்தா தேத்தண்ணியை தணிகாசலம் அண்ணனிடம் நீட்டினாள்.

''ஆமாம் ஆத்தா தேர்தல் காலம் வந்திரிச்சி இல்லயா? அதுதான் நம்பளைத் தேடி வாரானுங்க'' என்றார் தணிகாசலம்.

''என்னமோ வாரனுங்க, எல்லாம் கள்ளுத் தண்ணியை குடிச்சிப்புட்டு தடித்தடி மாடனுங்களாக இருக்கானுங்க'' என்றார் ஆத்தா.

''நீங்க ஏன் ஆத்தா அதைப்பற்றி கவலைப்படுறீங்க'' என தாயாரை வாஞ்சையுடன் அமைதிப்படுத்தினார் தணி அண்ணன்.

''என்னப்பத்தி எனக்கு ஒரு கவலையும் இல்லப்பா. எனக்கு இருப்பது நீ ஒருத்தன் மட்டும்தான். இந்த கச்சிக்காரனுங்க வந்து அங்க, இங்க என்று கூட்டிக்கிட்டு போய் வம்பிலமாட்டி உட்டுப்புடுவானுங்களோ என் கிறபயம்தான்.'' என்றாள் ஆத்தா.

''அப்படி ஒன்னும் நடக்காது. நீங்க கவலைப்படாதீங்க ஆத்தா'' என்று சொல்லிக் கொண்டே தேநீரைக் குடித்தார் தணி அண்ணன்.

அப்போது அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்த கந்தையா, ''அண்ணே! அண்ணே! காரியம் பெழைச்சிப் போச்சிங்க, நம்ப கோபாலையும், குமரனையும் பொலிசில புடிச்சிக்கிட்டுப் பொயிட்டாங்க'' என்று கூறினான்.

''என்ன கந்தையா, ஏன் பொலிசில புடிச்சிக்கிட்டுப் போனாங்க?''

''என்னமோ தெரியலிங்க அண்ணே! போஸ்டர் ஒட்டிக்கிட்டு இருந்தாங்களாம். அவுங்களை வந்து பொலிஸ் புடிச்சி, அடிச்சி இழுத்துக்கிட்டு பொயிட்டாங்க'' என்றான் கந்தையா.



''அது தானே பார்த்தேன் ரோட்டுல போர பசங்கள ஏண்டா பொலிஸ் புடிச்சிக்கிட்டு போகுது என்று. சரி சரி வா போய்ப் பார்ப்போம்'' என சேர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு கிளம்பினார் தணி அண்ணன்.

கந்தையாவையும்கூட்டிக்கொண்டுபொலிஸ் நிலையத்துக்குப் போனபோது ''வாங்க மொதலாளி என்ன இந்தப்பக்கம்'' என்று அழைத்தார் இன்ஸ் பெக்டர்.

''வணக்கம் சார் நம்ப தோட்டத்துப் பசங்க இரண்டு பேரை புடிச்சிக்கிட்டு வந்தீங்களாம், அது தான் வந்தேன்'' என்றார் தணி அண்ணன்.

''அப்படியா சங்கதி? இப்படி உட்காருங்க'' என்று கூறி இன்ஸ்பெக்டர் விசயத்தை சொன்னார்.

ஒரு வேனில வந்த கச்சிக்காரவுங்க இந்தப்பசங்ககிட்ட நோட்டீஸ், பசை வாளி எல்லாம் கொடுத்து ஒட்டச்சொல்லி இருக்காங்க. இந்தப் பசங்களும் துட்டுக்கிடைக்கும் என்ற ஆசையில் அவங்களுடன் சேர்ந்து கொண்டாங்கள்.

கூடவே வந்த கச்சிக்காரவுங்க எங்களோட பொலிஸ் ஜீப்பைக்கண்டவுடன் பசங்களை அம்போனு உட்டுப்புட்டு ஓடிப் பொயிட்டாங்க'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அடப்பாவிகளா! இப்படியா அநியாயமா இந்த சின்னப் பசங்களைமாட்டி விடுவது? நான் எத்தனை தரம் படிச்சிப்படிச்சி சொன்னேன். போஸ்டர் ஒட்டுவது, கொடிகட்டுறது, போஸ்டர்களை அங்கும், இங்கும் எடுத்துக்கிட்டு போறது எல்லாம் சட்டப்படி குற்றம் யார் வந்து சொன்னாலும் அதை செய்யக்கூடாது என்று. சொல்லியும் கோட்காமல் இப்படி மாட்டிக் கிட்டாங்களே சார்'' என்றார் தணி அண்ணன்.

''இங்க பாருங்க மொதலாளி. இந்த கச்சிகாரவுங்க எல்லாம் அவுங்க வேலை முடியும் மட்டும்தான். அதுக்குப் பொறவு யாரும் தேவையில்லை. இப்ப பாருங்களே! இந்த பசங்களை கொண்டுவந்து ரெண்டு நாளாவுது. போஸ்டர் ஒட்ட சொன்னவுங்க யாராவது வந்து பார்த்தாங்களா? ஒரு நாய் கூட வரல்ல. கஷ்டப்படுரது யார் பார்த்தீங்களா?'' என்றார் இன்பெஸ்க்டர்.

''சார், பொடிப்பசங்க வெவரம் தெரியாம மாட்டிக்கிட்டாங்க. இனிமேல் அப்படி செய்ய மாட்டாங்கள். அதுக்கு நான் பொறுப்பு. இந்த ஒரு முறை அவர்களை மன்னிச்சிவிடுங்க'' என்றார் தணி அண்ணன்.

''மொதலாளி மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்க வந்ததால் முடியாது என்றும் சொல்ல முடியாது. ஆனால், யாராவது கச்சிக்காரவுங்க வந்து இருந்தால் அவுங்களையும் சேர்த்து உள்ளேதள்ளிவிடுவேன். அந்தபோம்ல சைன்பன்னீட்டு கூட்டிக்கிட்டு போங்க'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ரொம்ப நன்றி சார்! இனிமேல் இப்படியான வம்புதும்புகளுக்கு எல்லாம் போக விடமாட்டேன்'' என்று கூறிவிட்டு இரண்டு பசங்களையும் கூட்டிக் கொண்டு கிளம்பினார் தணி அண்ணன். பையன்களும் இன்ஸ்பெக்டருக்கு ஒரு பெரிய கும்பீடாகப் போட்டுவிட்டு விடை பெற்றனர்.

''இனிமேலாவது கூலிக்கு போஸ்டர் ஒட்டப்போய் இந்த இளவட்டங்கள் மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் சரி'' என கூறிக் கொண்டே கிளம்பினார் தணி அண்ணன்.




# மலையக வாக்காளர் சிந்தனைக்கு யாருக்கு உங்களுடைய வாக்கு?

மலையகத்தில் தேர்தல் திருவிழா வெகு கோலாகலமாகக் களை கட்டிவிட்டது. கட்சிக்காரர்களும், தொழிற்சங்க வாதிகளும் தோட்டங்களில் வீடு வீடாகச் சென்று வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து குசலம் விசாரிக்க ஆரம்பித்து விட்டனர்.

முன்பு எப்போதுமே இல்லாத கௌரவமும், மதிப்பும் இப்பொழுது வாக்காளர்களைத் தேடி வர ஆரம்பித்து விட்டன.

பாவம் இந்த வாக்காளர்கள். முன்பு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். ஆனால், கடந்த மூன்று வருடங்களில் மூன்றாவது முறையாகப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கப் போகின்றார்கள்.

''வாக்காளப் பெருமக்களே! உங்களுடைய பொன்னான வாக்குகளை எனக்கே போட்டு எனது வெற்றியை உறுதிப்படுத்துங்கள். என்னுடைய வெற்றி உங்களுடைய வெற்றி.'' என்று கோஷம் போட்டுக் கொண்டு, உங்கள் வீடுகளுக்கு வரும் வாக்குவேட்டைக் காரர்களிடம் நீங்கள் ஏமாந்து விடக்கூடாது.

வாழ்க்கையின் அடிமட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் வாக்குகளை சில ரூபாய் நோட்டுகளுக்கும், சாப்பாட்டுப் பார்சல்களுக்கும், சாராயப் போத்தல்களுக்கும் வாங்கிவிடலாம் என்று இந்த அரசியல் வாதிகள் உங்களை மிகவும் கேவலமாக எடைபோட்டு வைத்துள்ளனர்.

இதை நீங்கள் உண்மையாக்க வேண்டுமா? தொடர்ந்தும் நீங்கள் மந்தைக் கூட்டங்கள் போல் அப்பன் இருந்த சங்கம், ஆத்தா இருந்த சங்கம், பரம்பரையாய் இருந்த சங்கம் என்று கண்களை மூடிக் கொண்டு உங்களின் பெறுமதியான வாக்குகளை ஒட்டு மொத்தமாக அள்ளிப் போட்டு விடக்கூடாது.

உங்களுக்கு மூன்று வாக்குகள் இருக்கின்றன. அந்த மூன்று வாக்குகளையும் நீங்கள் பிரயோசனமாகப் பயன்படுத்த வேண்டும். இந்த மூன்று வாக்குகளுக்கும் மேலதிகமாக, நீங்கள் விரும்பும் கட்சிக்கு அளிப்பதற்கான விசேட வாக்கும் உண்டு.

எனவே முதலாவதாக நீங்கள் விரும்பும் கட்சியின் சின்னத்துக்கு முன் X புள்ளடியிட்டு உங்களுடைய சிறப்பு வாக்கைப் பயன்படுத்த வேண்டும். இப்பொழுது உங்களுடைய கட்சியைத் தெரிவு செய்து விட்டீர்கள்.

கட்சியைத் தெரிவு செய்த பின்பு மேலும் உங்களிடம் மூன்று வாக்குகள் இருக்கின்றன. இந்த மூன்று வாக்குகளையும் உங்களுக்கு சேவை செய்யக் கூடிய உங்கள் நம்பிக்கைக் குரிய மூவருக்கு அளிக்கலாம். எப்படி உங்களுடைய வாக்குகளை பயன்படுத்தப் போகின்றீர்கள்? நீங்கள் விரும்பும் நபரின் இலக்கத்தின் மேல் ☒ இப் பெட்டியில் காட்டப்பட்டிருப்பது போல் மூன்று இலக்கங்களின்மேல் புள்ளடியிட வேண்டும். நீங்கள் புள்ளடியிடும் போது பெட்டிக்கு வெளியே செல்லாதவாறு புள்ளடியிட வேண்டும்.

எல்லோரும் எமக்கு வேண்டியவர்கள் தானே என்று நினைத்து மூன்று இலக்கங்களுக்கு கூடுதலான இலக்கங்களுக்கு மேல் புள்ளடி போட்டால் உங்களுடைய வாக்கு செல்லுபடியற்றதாகிவிடும். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று அல்லது இரண்டு வாக்குகள் அளிக்கலாம். ஆனால், மூன்றுக்குமேல் அளிக்க முடியாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது மலையகத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் செல்லுபடியற்றவையாகி விட்டன. இது பெரிதும் வேதனைக்குரியது. எனவே, இந்த வேட்பாளர்களும் தொழிற்சங்க வாதிகளும் முதலில் வாக்களிக்கும் முறையை தெளிவாக காட்டிக் கொடுக்க வேண்டும்.

ஆனால், இப்பொழுது காட்டிக் கொடுக்க வேண்டியதைக் காட்டிக் கொடுக்காமல் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதிலும், வசை பாடுவதிலும், சேற்றை வாரிக் கொட்டுவதிலும், குறை கூறித் திரிவதிலும் தான் இவர்கள் காலம் கடத்துகின்றனர். இவர்கள் எல்லாம் வெற்றுவேட்டுகள்.

எனவே, உங்களிடம் வாக்குக் கேட்க வருபவர்கள், மற்றவர்கள் மீது வசைபாடிக் கொண்டோ, அல்லது குறைகூறிக்கொண்டோ வந்தால் முதலில் அவர்களிடம் இருக்கும் குறைகளை சுட்டிக் காட்டுங்கள்.

கடந்த காலங்களில் நீங்கள் எங்களுக்கு செய்த சேவை என்ன? செய்து கொடுத்தது என்ன? செய்யப் போவது என்ன? இப்படிக் கேள்வி கேளுங்கள்.


இதே அரசியல் வாதிகள் கடந்த முறை உங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீண்டும் நினைவு படுத்துங்கள். அவர்கள் மறந்து விட்டாலும் அதில் எதை எதை செய்திருக்கிறீர்கள் என்று இடித்துக் கேளுங்கள்.

உங்களுடைய கேள்விகளுக்கு யார் திருப்திகரமாகப் பதில் அளிக்கின்றாரோ, கொடுத்த வாக்குறுதியில் எதையாவது நிறைவேற்றி இருக்கிறாரோ, தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றதோ அவர்களையே தெரிவு செய்யுங்கள்.

இது வரை காலமும் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று எவரோ சொன்ன அடையாளத்திற்கும், யாரோ குறித்துக் கொடுத்த இலக்கத்திற்கும் அடையாளம் போட்டு உங்களுடைய சுய அடையாளத்தை இழந்துவிட்டீர்கள். இனியும் இந்த நிலை தொடர வேண்டுமா?

உங்கள் வீடுகளிலும் படித்து, வளர்ந்த, விசயம் அறிந்த பிள்ளைகள் இருக்கின்றனர். வாக்கு சாவடிக்கு செல்லும் முன் அவர்களிடம் ஆலோசனைகளைக் கேளுங்கள். எப்படி வாக்களிப்பது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

வீட்டிலிருந்து புறப்படும் முன்னரே, எந்தக்கட்சிக்கு வாக்களிக்கப் போகிறோம், அதன் சின்னம் என்ன? யாருடைய இலக்கத்திற்கு வாக்களிக்கப் போகிறோம் என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். வாக்குச் சாவடியில் நின்று தடுமாற்றம் அடைய வேண்டிய அவசியம் ஏற்படாது. அது உங்களுக்கும் நல்லது, எமது சமூகத்துக்கும் நலமாக அமையும்.




''லிட்டில் இங்லண்ட்.'' என அழகாக அழைக்கப்படும் அந்த அழகான குளிர் மலை நாட்டில் உள்ள ஓர் அரசியல்வாதிக்கு தாய்க்குலம் என்றால் ஒரு தணியாத பாசமாம்.

இந்த அரசியல் வாதி தான் பதவிக்கு வந்தபின் தெரிவு செய்யப்பட்ட பல அழகிய இளம் தாய்க்குலங்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்துள்ளாராம்.

அன்று அவர் செய்த உதவிக்கு இப்போது கைம்மாறாக தேர்தல் காலத்தில் வந்து உதவுமாறு கேட்கின்றாராம். ஏற்கனவே அவ்வப்போது ஆதரவையும், அரவணைப்பையும் பெற்றவர்கள் தாராளமாக வந்து போகின்றனராம்.

ஆனால், இந்த அரசியல் வாதியின் கண்கள் பாதை அபிவிருத்தி சபையின் பக்கம் போய்விட்டனவாம். அம்மாடி பாதையை அபிவிருத்தி செய்தால் மட்டும்போதாது. பாயையும் அலங்கரிக்கக் கூடாதா? என்று கேட்பாராம்.

அண்மையில் தேர்தல் பிரசாரத்திற்காக கடிதங்கள் அனுப்பி, வாக்காளர் இடாப்புகளை பரிசீலனை செய்ய என இளம் வனிதையர் கூட்டத்தை தனது மாளிகைக்கு அழைத்து இருந்தனராம்.

மாளிகையின் மகாராணியோ பரிவாரங்கள் சகிதம் பாரததேசம் சென்று விட்டாராம். இதனால், குளிரில் நடுங்கிய அந்த அரசியல்வாதிக்கும் குளிர்விட்டுப் போனதாம். இதனால் பாதை அபிவிருத்திச் சபைப் பக்கம் தலைவைக்க, அந்த பதிவிரதையோ இத்தவம் எல்லாம் நம்மிடம் வேண்டாம் என முகமெல்லாம் முத்து முத்தாக வியர்க்க ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' — என்று தலை தெறிக்க ஓடிவிட்டாராம்.

இதுதான் இன்று ''லிட்டில் இங்லண்ட்'' டின் லேட்டஸ்ட் ஸ்டோரி.

# மீண்டும் ரத பவனி

இந்திய லோக்சபாத் தேர்தல் 5 கட்டங்களாக நடைபெறுகின்றது. தமிழநாட்டில் மே 10 ஆம்திகதி வாக்குப்பதிவு நடக்கிறது.

ஆட்சியை மீண்டும் பிடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பாரதீகஜனதா முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக துணைப் பிரதமா அத்வானி இந்தியாவின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரியில் இருந்து ரத யாத்திரை ஆரம்பித்துள்ளார்.

இதற்காக டில்லியில் இருந்து விசேட ரதம் வரவழைக்கப்பட்டது. மினி பஸ் வடிவத்திலான இந்த ரதம் கன்னியாகுமரிக்கு கொண்டு வரப்பட்டது.

ரத யாத்திரையில் பங்கேறபதற்காக அத்வானி தனி விமானம் மூலம் கன்னியாகுமரி வந்தார்.

அத்வானியுடன் அவரது மனைவி கமலா, மகள் பிரதீபா மற்றும் மகன் ஆகியோர் வந்தனர். ரத யாத்திரை ஆரம்பமாகு முன்னர் கன்னியாகுமரி கடற்கரைச்சாலையில் அமைக்கப்பட்டிருந்த குண்டு துளைக்காத மேடையில் இருந்து அத்வானி பேசினார். அவர் பேசத் தொடங்கியதும் கட்சித் தொண்டர்கள் கை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அவர் அ.தி.மு.க. – பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு வழங்கக் கோரி உரை நிகழ்த்தினார்.

பொதுக்கூட்ட மேடை அருகே அத்வானியின் பயணத்துக்கான ரதம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. நவீன வசதிகளோடு லிப்ட் வசதியும் செய்யப்பட்டு இருந்த இந்த ரதத்தின் முன் இருக்கையில் அத்வானி இருந்தார். அவர் ரதத்தில் இருப்பதை அனைவரும் பார்க்கும் வகையில் கண்ணாடி வசதியும் செய்யப்பட்டு இருந்தது.



பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, அத்வானியின் ரதயாத்திரையை முறைப்படி தொடக்கி வைத்தார். அப்போது வாழ்த்துக் கோஷம் எழுப்பப்பட்டது. அத்வானி வாழக என்று தொண்டர்கள் முழங்கினார்கள்.

பொதுக் கூட்ட மேடைப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

அத்வானியின் ரதயாத்திரை கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்ட போது அந்த ரதத்துக்கு முன்னும் பின்னும் பாதுகாப்புக்காக பொலிஸ் வாகனங்கள் சென்றன. ரதயாத்திரைக்கு பின்னால் பாரதீய ஜனதா முன்னணித் தலைவர்கள் வாகனங்களில் சென்றனர்.

அத்வானி 1990 ஆம் ஆண்டில் முதன் முறையாக அயோத்திப் பிரச்சினைக்காக சோமநாத்நகரில் இருந்து அயோத்தி வரை ரத யாத்திரை நடத்தினார். இதன்மூலம் சங்கப்பரிவார அமைப்புகளின் அயோத்திப் பிரசாரம் வலுவடைந்ததோடு, வி.பி.சிங்., தலைமையிலான அரசு கவிழ்வதற்கும் வாய்ப்பு உருவானது. மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சியின் செல்வாக்கு அதிகரிப்பதற்கும் உதவிக்கரமாக இருந்தது. இரண்டாவதாக சுதந்திர தின பொன் விழாவை யொட்டி 1997 ஆம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி ரத யாத்திரையை அத்வானி நடத்தினார். இந்த ரத யாத்திரை மூலம் பாரதீய ஜனதா கட்சி அரசியல் ரீதியாக வலுவடைந்ததோடு, மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கும் அதிகரித்தது. மத்தியில் ஆட்சியையும் பிடித்தது.

இந்த நிலையில், நடைபெற உள்ள லோக்சபாத் தேர்தல்களை கருத்தில் கொண்டு, பாரதீய ஜனதா மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காகவும், கடந்த ஆறு ஆண்டு கால வாஜ்பாய் அரசின் சாதனைகளை மக்களுக்கு தெரியப்படுத்தவும் மூன்றாவது முறையாக 'இந்தியா ஒளிர்கிறது' என்ற ரத யாத்திரையை கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்திருக்கிறார் அத்வானி.

அத்வானியின் இந்த ரதயாத்திரை திட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளன. மதக்கலவரம், இனக்கலவரம் உருவாகும் என்று அச்சம் தெரிவிக்கின்றன. இந்த ரதபவனியை பீகார் மாநிலத்துக்குள் நுழைய விடமாட்டேன் என அம்மாநில முன்னாள் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் அறிவித்தார். ஆனால், இந்த எதிர்ப்புகளைக் கண்டு பாரதீய ஜனதா கட்சி அஞ்சவில்லை. அத்வானியின் யாத்திரை திட்டமிட்டபடி நிறைவு பெறும் என்று தெரிவித்திருக்கிறது. அத்வானி இதத ரத யாத்திரையை இரண்டு கட்டங்களாக 33 நாட்கள் நடத்த உள்ளார். 120க்கும் மேற்பட்ட லோக்சபாத் தொகுதிகள் வழியாக அவரின் ரத யாத்திரை செல்லும்.



ரதபவனியை ஆரம்பிக்க முன் மதவழிபாட்டில் அத்வானி.

- ஆஷா -










இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்டமார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 மார்ச் 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.